Registered as a News Paper in Sri Lanka


விலை : ரூபா 25.00

# தினச்செய்தி

வாரமலர்

என்றும் உங்களுடன்

அன்றாடச் செய்திகளை
உடனுக்குடன்
தினந்தோறும்
இணையத்தில்
அறிந்து கொள்ள



www.thinacheithi.com



# இலங்கையின் பெரும்பகுதி கடலில் மூழ்காமல் இருக்க சேதுசமுத்திர கால்வாய் திட்டத்தைக் கைவிடவும்




பாரதிய ஜனதாக் கட்சியின் தலைமையிலான இந்திய அரசாங்கம் சேது கால்வாயை ஆழமாக்கும் திட்டத்தை கைவிட்டால் யாழ்குடா நாடு உட்பட்ட வடமத்திய மாகாணத்திலுள்ள அநுராதபுரம் வரையிலான பெரும்பகுதி கடலுக்குள் மூழ்குவதில் இருந்து காப்பாற்றப்படும்.

அண்மையில் சேது சமுத்திரத்தை ஆழமாக்கும் விடயம் இந்தியாவின் உச்சநீதிமன்றத்தின் பிரதம நீதியரசர் எச்.எல். டட்டு, நீதியரசர் அருண் மிஸ்ரா ஆகிய இரண்டு நீதியரசர் அடங்கிய அமர்வின் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

அப்பொழுது இந்த சேது சமுத்திரத்தை ஆழமாக்கும் திட்டத்தை மோடி தலைமையிலான அரசாங்கம் உடனடியாகக் கைவிட வேண்டும் என்று பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர்களுள் ஒருவரான டாக்டர் சுப்பிரமணியன் சுவாமி உச்சநீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக மத்திய அரசாங்கம் முடிவு எடுக்க கால அவகாசம் தேவை என்று இந்தியாவின் மேலதிக சொலிசிற்றர் ஜெனரலான பிங்கி ஆனந் வேண்டுகோள் விடுத்தார்.

பார்க்க பக்கம் 2இல்

தினச்செய்தி
என்றும் உங்களுடன்

T.P : 021 7539300
Fax : 021 7539300
E-mail : thinacheithi@gmail.com
Web : www.thinacheithi.com / lk

## இளைஞர்களின் தியாகமும் தமிழ் தலைவர்களின் அசமந்தப் போக்கும்

*"ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர், யுவதிகளின் உயிர்த் தியாகங்கள் வீணடிக்கப்பட்டுள்ளன."*

தமிழ் இளைஞர்கள் 1975 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை தமிழர்களுக்கு நல்லது நடக்கவேண்டுமென கருதி தமது உயிரைத் தியாகம் செய்துள்ளனர். ஆனால் அவர்களின் தியாகங்களை உரிய முறையில் பயன்படுத்தி வெற்றியடையச் செய்ய தமிழ்த் தலைவர்கள் தவறிவிட்டார்கள்.

1972 ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி குடியரசு அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டதை அடுத்து தமிழ் இளைஞர்கள் தங்களது உயிர்த் தியாகங்களை செய்ய முன்வந்தார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வேண்டுகோளை அடுத்து பல ஆயிரக் கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் தற்கொலைப் படைகளில் சேர்ந்து உயிர்த் தியாகம் செய்துள்ளார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்த நாற்பதாயிரம் அளவிலான தமிழ் இளைஞர்கள், யுவதிகள் அந்த இயக்கத்துக்காக தங்கள் உயிர்களை அர்ப்பணிப்புச் செய்தார்கள். இந்த தியாகத்தினால் நடந்தது என்ன?

நாட்டில் 34 வருடங்கள் 1975 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை யுத்தம் நடைபெற்றது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுப் படைகளுக்குமிடையில் இந்த நீண்ட கால யுத்தம் நடைபெற்றது.

தமிழீழம் மலர வேண்டும். தமிழருக்கு ஒரு நாடு வேண்டும். உலகத்திலே தமிழ் தலைவர்கள் தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்றெல்லாம் கருதி தமிழ் மாணவ, மாணவிகள் தமது கல்வியை விட்டுவிட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்தார்கள்.

கழுத்திலே 'சயனைட் குப்பியை' கட்டிக்கொண்டு போராடினார்கள். எதிரிகளினால் பிடிபடப் போகின்ற சமயத்தில் அந்த சயனைட் குப்பியை கடித்து தற்கொலை செய்து கொண்டார்கள். பிரபாகரனின் ஆணைக்கு கட்டுப்பட்டு தற்கொலைப் படையாக மாறினார்கள்.

ஆனால் தலைமையே சீரான வழிகாட்டலை செய்யத் தவறி விட்டது. அதனால் நாற்பதாயிரம் இளைஞர், யுவதிகள் களப்பலியானார்கள். இந்த இளைஞர்களின் தியாகம் எந்தவித தாகத்தையும் தமிழருக்கு ஏற்படுத்தவில்லை.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி யுத்தத்தில் தோல்வி கண்டார்கள். இலங்கை இராணுவம் வடபகுதியின் பெரும் பகுதியை ஆக்கிரமித்து இன்று உயர் பாதுகாப்பு வலயம் என்று அறிவித்து ஆயிரக்கணக்கான பொதுமக்களின் நிலங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது.

1990 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை ஆறாயிரம் முதல் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் முகாம்களில் ஆடு, மாடுகள் போல் வாழ்ந்து வருகின்றார்கள்.

இளைஞர்களின் தியாகம் எந்தவிதமான பலனையும் ஏற்படுத்தவில்லை. இது யார் குற்றம்? தலைவர்கள் குற்றமா? உணர்ச்சி வசப்பட்டு தங்களின் உயிர்களைத் தியாகம் செய்த இளைஞர்களின் குற்றமா?

யுத்தம் தோல்வியடைந்த பின்னர் உயிர்த் தியாகம் செய்யும் படலம் முடிவுக்கு வந்துவிட்டது என்று நம்பினோம். ஆனால் கடந்த 26 ஆம் திகதி கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன் செந்தூரனின் மறைவினால் இளைஞர்களின் தியாகம் தொடர்கதையாக மாறியுள்ளது என்று கருத வேண்டியுள்ளது.

கோப்பாய் வடக்கிலுள்ள விவசாய கூலித் தொழிலாளியின் மகன்தான் இந்த செந்தூரன். எவ்வளவோ எதிர்பார்ப்புடன் அந்த ராஜேஸ்வரன் தம்பதிகள் 18 வயதுவரை அவனை வளர்த்து வந்தார்கள். அந்த செந்தூரன் கடந்த 26 ஆம் திகதி ஓடும் ரயில வண்டியின் முன் குறுக்கே பாய்ந்து அகால மரணமடைந்துள்ளார்.

இன்று அவன் எம் மத்தியில் இல்லை. ஆனால் அவனின் நோக் கமாவது நிறைவேறிற்றா? இல்லவே இல்லை. அரசியல் தலைவர்கள் சிலர் அவனது இறுதிக் கிரிகையில் பங்குபற்றினார்கள். வழமைபோல் வீரவசனம் பேசினார்கள். ஆனால் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக மடிந்தவர் மறைந்தவராகவே மாறிவிட்டார்.

தமிழரின் தர்மம் இதுதானா? இளைஞர்களின் தியாகத்தை வெற்றிப்பாதைக்கு இட்டுச்செல்ல மாட்டார்களா?

(01ஆம் பக்கத்தொடர்ச்சி)

## இலங்கையின் பெரும் பகுதி ...

அதையடுத்து, நீதியரசர்கள் இந்த வழக்கைத் திகதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்தார்கள்.

சேது கால்வாயை ஆழப்படுத்தும் திட்டம் 2005 ஆம் ஆண்டு ஆரம்பமாகிற்று. 426 கோடி ரூபாய்களை செலவு செய்து சேது சமுத்திர கால்வாயை ஆழமாக்கும் திட்டவேலைகளை ஆரம்பிக்கும் போது, பிரபலமான புராதன 'இராம் சேது' என அழைக்கப்படும், இராமர் அணையை இடிக்க முன் வந்தார்கள். இராமர் அணையை இடித்து கால்வாயை ஆழமாக்கும் செய்தியை அறிந்த பாரதீய ஜனதாக்கட்சியின் தலைவர்களுள் ஒருவரான டாக்டர் சுப்பிரமணியன் சுவாமி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்.

அதையடுத்து நீதிமன்றம் 2007 ஆம் ஆண்டு சேது சமுத்திரத் திட்டத்திற்கு இரண்டு தீர்ப்புக்களை வழங்கிற்று. ஒன்று 14 செப்ரெம்பர் 2007 இலும், மற்ற தீர்ப்பு 31 ஒக்ரோபர் 2007 இலும் வழங்கிய தீர்ப்புக்களின் படி சேது சமுத்திரத்தை ஆழமாக்கும் பணிக்கு இடைக் கால தடை விதிக்கப்பட்டது.

2005ஆம் ஆண்டு வாஜ்பேயின் தலைமையிலான பாரதிய ஜனதாக் கட்சியின் ஆட்சியில், திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்த ரீ.ஆர். பாலு கப்பல் துறை அமைச்சராக இருந்தார்.திராவிட முன்னே ற்ற கழகத் தலைவர் கருணாநிதியும், பாலுவும் ஒன்றிணைந்து இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான சேது கால்வாயை ஆழமாக்கி இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான கப்பல் போக்குவரத்து பாதைத் தூரத்தைக் குறைக்கத் திட்டமிட்டார்கள்.

இத்திட்டத்தின்படி தற்சமயம் இந்தியக் கப்பல்கள் இலங்கையைச் சுற்றி 400 கடல் மைல்கள் பயணித்துத் தான் செல்லவேண்டும். இவ்வாறு பயணிப்பதால் குமரிமுனையிலிருந்து சென்னைக்கு செல்ல 755 கடல் மைல்கள் பயணம் செய்யவேண்டும். ஆனால் சேது கால்வாய்த் திட்டத்தின் பின் வருங் காலத்தில் 402 கடல் மைல்கள் பயணம் செய்து சென்னையை வந்தடையலாம். அதே போல விசாகப் பட்டணத்தில் இருந்து சென்னை வர 1014 கடல் மைல்கள் பயணம் செய்ய வேண்டும். ஆனால் இந்த கால்வாயை ஆழமாக்கினால் 719 கடல் மைல்கள் பயணம் செய்தால் போதும். மேலும் தூத்துக்குடியிலிருந்து கல்கத்தாவிற்கு தற்போது பயணம் செய்வதற்கு 1371 கடல் மைல்கள் பயணம் செய்ய வேண்டும். ஆனால் ஆழப்படுத்திய பின் 1031 கடல் மைல்கள் போதுமானது.

ஆனால் மன்னார் குடாவிலுள்ள இந்த சேது கால்வாயை ஆழப்படுத்தினால் இலங்கையின் பெரும் பகுதி, யாழ்ப்பாண குடா நாடு தொடக்கம் அநுராதபுரம் வரையும், மேலும் குறிப்பாக இலங்கையின் மேற்கு மற்றும் வடபகுதியிலுள்ள அநேக சிறிய தீவுகள் கடலில் மூழ்கிவிடும் அபாயம் உள்ளது.

மன்னார் குடா மேற்கு இலங்கைக்கும், தென் கிழக்கு இந்தியாவிற்கும் இடையிலுள்ள கடல் பரப்பாகும். இந்தக் கடற்பரப்பின் வடபகுதி இராமேஸ்வரம், இராமர் பாலம் மற்றும் தென் பகுதியின் மன்னார் தீவையும் எல்லைகளாகக் கொண்டவையாகும். இந்த மன்னார் குடாகடல் 130 –275 கிலோமீற்றர் அகலமும் 160 கிலோமீற்றர் நீளமும் கொண்டதாகும்.

அதேபோல, பாக்குநீரிணைக் கடல் 64 கிலோமீற்றர் நீளமும், 137 கிலோமீற்றர் அகலமும் கொண்டதாகும். இராமர் பாலம் என்பது ஒரு வரிசையிலுள்ள மணல் திட்டுகளாகும். இது இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் பாக்கு நீரிணையில் அமைந்துள்ளது. இவை தொடர்ச்சியாக ஏழு திட்டுக்களாக 30 கிலோமீற்றர் நீளத்திற்கு அமைந்துள்ளன. இந்த மணல் திட்டுக்கள் இலங்கைக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையில் அமைந்துள்ளதால், கடற் பயணத்திற்கு இடையூறாக உள்ளன.

இந்த சகல பகுதிகளும் அடங்கியது தான் சேது சமுத்திரம் எனப்படுகின்றது.

பண்டைய காலத்தில் சேது சமுத்திரத்தையும், இராமேஸ்வரத்தையும், இராமர் அணையையும் சேது காவலர்கள் என்று அழைக்கப்பட்டவர்களை யாழ் மன்னர்கள் வைத்து பாதுகாத்து வந்தனர். அக்காலத்தில் இராமேஸ்வரம் மற்றும் இராமர் அணையையும் சேது காவலர்களைக் கொண்ட யாழ் மன்னர்களின் ஆட்சிக்குட்பட்டதாக இருந்தன.

மேலும், தற்சமயம் உள்ள யாழ்ப்பாணக்குடாநாடு இயேசு பிறப்பதற்கு சில ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் இரண்டு தீவுகளாக இருந்தன. பெரியதீவுக்கு பெயர் மேலைத்தேய நாகதீபம் இன்றேல், மணிநாகதீபம் இன்றேல், மணிபுரம் இன்றேல், மணி பல்லவம் என்று அழைக்கப்பட்டது.

கிழக்குப் பக்கத்தில் அமைந்திருந்த சிறிய தீவை எருமை முல்லைத்தீவு இன்றேல் எருமைத் தீவு என்று அழைக்கப்பட்டது. தொடர்ந்து வெள்ளங்களும், புயல்களும், மற்றும் இயற்கை அனர்த்தங்களை அடு த்து பெரிய தீவு பல சிறிய தீவுகளாக உடைந்து பிரிந்தன. அவையாவன காரை தீவு, வேலணை, மண்டைதீவு, நயினா தீவு, புங்குடுதீவு, அனலைதீவு, நெடுந்தீவு மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள வலிகாம பிரதேசங்களாகும். கிழக்கிலிருந்த தீவான எருமை முல்லைத்தீவு வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி என்ற பகுதிகளாகும்.

தொடர்ந்து சூறாவளி அடிக்கடி வீசியதால் மணல் ஆழம் குறைந்த ஆனையிறவு கடற்பரப்பில் போயச் சேர்ந்து நிலத்தை உயர்த்தி கடல் நீரோட்டத்தைத் தடுத்ததால் தான் யாழ்குடா நாடு உருவாகிற்று. இவ்வாறுதான் புவியியல் ரீதியாக இரண்டு தீவுகளும் இணைந்து யாழ்குடா நாடு உருவாகிற்று. இந்தக் குடா நாடு சுண்ணாம்புக்கற்கள், பவளப்பாறைகளின் மேல் தான் அமைந்துள்ளது. அக்காலத்தில் இந்த இரண்டு தீவுகளிலும் ஓடிய பல நதிகள் இன்றும் குடாநாட்டின் கீழ் ஓடிக்கொண்டே இருக்கின்றன என்று புவியியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

யாழ்.குடா நாட்டிலிருந்து உருவாகியுள்ள பவளப்பாறைகள் இந்தியாவின் தென்பகுதி தூத்துக்குடியுடன் தொடர்புபட்டுள்ளது. இந்தப் பவளப்பாறைகளின் தொடர்பு தான் யாழ்குடா நாட்டையும், இலங்கையின் வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் அமைந்துள்ள 85 தீவுகளையும் இணைத்து வைத்திருக்கின்றது.

எனவே 99.88 கடல் மைல்கள் நீளமுள்ள சேது சமுத்திரக் கால்வாயை கடலடியிலிருந்து 35 – 40 அடி ஆழத்திற்கு அகலப்படுத்தினால் யாழ்.குடா நாட்டிற்கும் – தூத்துக்குடிக்கும் இடையிலுள்ள பவளப்பாறைத் தொடர்புகள் அறுந்துவிடும் அபாயம் ஏற்படும். இவ்வாறு நடந்தால் இலங்கையின் மூன்றில் ஒரு பகுதி கடலில் மூழ்கிவிடும் அபாயம் ஏற்படும் என்று எச்சரிக்கப்படுகின்றது.

அதே நேரத்தில் டாக்டர் சுப்பிரமணியன் சுவாமி சேது சமுத்திரக் கால்வாயை அகலப்படுத்தும் போது வரலாற்றுச் சிறப்பு மிக்க இராமர் அணைக்குப் பாதிப்பு ஏற்படும் என்றே வழக்குத் தொடுத்தார்.

ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கருணாநிதி மாத்திரமே சேது சமுத்திர கால்வாயை தோண்ட வேண்டும் என்று அழுங்குப் பிடியாக நிற்கின்றார். இவருடைய நோக்கம் இலங்கையின் வடக்கில் இருக்கும் தமிழர்களை அழிக்கும் பாரிய சூழ்ச்சி என்றும் கருதலாம்.

இருந்த போதும் டாக்டர் சுப்பிரமணியன் சுவாமியின் முயற்சியால் நரேந்திரமோடி தலைமையிலுள்ள இந்திய அரசாங்கம் சேது சமுத்திர கால்வாயை ஆழமாக்கும் செயற்பாட்டை கைவிட்டால் இலங்கையின் பெரும்பகுதி கடலினுள் மூழ்காமல் பிழைக்கும்.

**தினச்செய்தி தொடர்பான விமர்சனங்கள், ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.**
*தொடர்புகளுக்கு :*
தில்லைகட்டி லேன்,
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
தொலைபேசி : 021 7539300
தொலைநகல் : 021 7539300
இணையம் : thinacheithi@gmail.com

# செந்தூரனின் மரணம் நீடிக்கும் மர்மம்

நீண்டகாலமாக தடுப்பிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவதில் நல்லாட்சி அரசிலும் இழுபறிநிலை காணப்படும் நிலையில் அவர்களை விடுதலை செய்யுமாறு தனது கொப்பியில் எழுதி வைத்துவிட்டு கொக்குவில் இந்துக்கல்லூரி உயர்தர மாணவன் இராஜேஸ்வரன் செந்தூரன் கடந்த 26 ஆம் திகதி கோண்டாவிலில் உள்ள ரயில் நிலையத்திற்கு முன்பாக ரயில் முன் பாய்ந்து "தற்கொலை" செய்துள்ளார்.

வீட்டில் அப்பாவியாக வாழ்ந்து வந்த இந்த மாணவன் இவ்வாறான நிலைக்கு சென்றதற்கான காரணம் தமக்கு புரியாத புதிராக உள்ளதாக அவரது குடும்பத்தவர்கள் தினச்செய்திக்குத் தெரிவிக்கின்றனர்.

உண்மையில் இவ்வாறான மரணங்கள் தடுக்கப்பட வேண்டும்.

அரசியல் கைதிகள் தமக்கு விடுதலை வேண்டுமென அஹிம்சை வழியிலான போராட்டங்களையே முன்னெடுத்து வருகின்றனர். அவ்ரகள் தமது விடுதலைக்காக தற்கொலையை தேர்ந்தெடுக்கவில்லை. மாறாக உண்ணாவிரதப் போராட்டத்தையே மேற்கொள்கின்றனர்.

செந்தூரனின் மரணத்தை அடுத்து அரசியல் கைதிகள் விடுத்துள்ள அறிக்கையில் தமக்காக எவரும் தங்களது உயிரை மாய்க்க வேண்டாமென உருக்கமாக தெரிவித்துள்ளனர்.

ஒரு சம்பவம் நடைபெற்றால், சாதாரண நபரில் இருந்து ஊடகங்கள் முதல் அந்தச் செய்தியை பெருப்பிப்பதே வழமையாகும். ஆனால் அதன் பின்புலம் இந்தச் சம்பவத்திற்கான அடிப்படைக் காரணம், சம்பவம் நடைபெற்ற நபரின் குடும்பச் சூழ்நிலை தொடர்பாக எவ்வித அக்கறையும் செலுத்துவதே இல்லை. ஆனால் ஊடகங்கள் செய்திகளை பரபரப்பாக வெளியிட்டு வருகின்றன. இவ்வாறு பரபரப்பான செய்திகளை வெளியிடுவதால் சமூகத்துக்கு ஏற்படும் தாக்கங்களையும் விளைவுகளையும் பற்றி சிந்திப்பதே இல்லை. ஊடகங்கள் அவர்களின் சமூகப் பொறுப்பை தட்டிக்கழித்தே வருகின்றன.

செய்திவந்த மறுநாள் அது பற்றி யாரும் நினைத்துப் பார்ப்பதில்லை. அல்லது மறக்கடிக்கப்பட்டுவிடும். அதேபோன்றே செந்தூரன் தொடர்பான செய்திகளும்

இறுதிக்கட்டப் போர் வன்னியில் பெரும் எடுப்பில் நடந்தவேளை போரை நிறுத்துமாறு தெரிவித்து தமிழகத்தில் முத்துக்குமார், செங்கொடி, சுவிற்சர்லாந்து ஐ.நா அலுவலகம் முன்பாக வர்ணகுலசிங்கம் முருகதாஸன் ஆகியோர் தங்களது உயிரை தற்கொலை மூலம் முடித்துக் கொண்டார்கள். ஆனால் நடந்தது என்ன?



செந்தூரனின் தந்தை இராஜேஸ்வரன்

போர் தொடர்ந்தும் நடைபெற்று விடுதலைப்புலிகள், பொதுமக்கள் கொல்லப்பட்ட பின்னரே நிறுத்தப் பட்டது. அவர்களது தற்கொலையை எவராவது கவனத்தில் எடுத்தார்களா? எனவே ஒரு சம்பவத்திற்கு தற்கொலை தான் ஆயுதம் என்றால் இந்த உலகத்தில் எவரும் இருக்க முடியாது.

எமது இளம் சமூகம் இதனை சிந்தித்து செயலாற்ற வேண்டும். போர் முடிவுற்ற நிலையில் இவ்வாறான தற்கொலைகள் தவிர்க்கப்பட வேண்டும். செந்தூரனின் மரணத்துடன் இது முடிவுறுத்தப்பட வேண்டும் என்பதே தமிழ்ச் சமூகத்தின் எதிர்பார்ப்பாகும்.

செந்தூரன் தனது உயிரை அரசியல் கைதிகளுக்காக தற்கொலை மூலம் முடித்துக் கொண்டாலும் அவர்களது விடுதலையில் இன்னமும் முன்னேற்றகரமான செயற்பாடு இல்லை. அதேபோன்றே அவரது குடும்பநிலையும் குடும்பத்தில் மூன்று பெண்பிள்ளைகளுக்கு இரண்டு ஆண் பிள்ளைகளெனவும் அதில் இவர் ஆண் பிள்ளைகளில் மூத்தவராகவும் இருந்துள்ளார். இவரது குடும்பம் விவசாயத்தையே நம்பியுள்ளது. அதிலும் தந்தையார் நோய்வாய்ப்பட்ட நிலையில் உள்ளார். சகோதரிகளில் ஒருவர் யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்திற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் இவரையே அந்தக் குடும்பம் நம்பியிருந்தது. இனி அந்தக் குடும்பம் யாரை நம்புவது? பொதுநலன் சார்ந்து செந்தூரன் எடுத்த முடிவால் அவரது குடும்பம் தாங்கொணா சோகத்தில் ஆழ்ந்துள்ளதுடன் ஆறுதல் தெரிவிக்கவும் எவரும் இல்லை. அவரது இறுதி ஊர்வலத்தில் எல்லோரும் கலந்துவிட்டு சென்றுவிட்டனர். அடுத்தகணம் அந்தக் குடும்பத்தைப் பற்றி யோசிப்பவர்கள் யார்?


இந்த நிலையில் செந்தூரனின் மரணம் தொடர்பாக அவரது வீட்டிற்கே சென்று தினச்செய்தி அவரின் தந்தை, சகோதரி மற்றும் அவர் கல்வி கற்ற ஆசிரியரிடம் வினாவியது. அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு.

**செந்தூரனின் தந்தை செல்லையா இராஜேஸ்வரன் என்ன கூறுகின்றார்?**

எனக்கு ஐந்து பிள்ளைகள். முதலிருவரும் பெண்பிள்ளைகள். அவர்களில் மூத்தவர் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும், மற்றையவர் திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலையிலும் கல்வி கற்கின்றனர். எனது மூன்றாவது பிள்ளைதான் செந்தூரன், நான்காவது பிள்ளை வினோத் இவர் கோப்பாய் சரவணந்தா வித்தியாலயத்தில் கல்வி பயில்கின்றார் ஐந்தாமவர் கார்த்திகாயினி. வேம்படி மகளிர் கல்லூரியில் கல்வி கற்கின்றார்.

செந்தூரன் இயல்பாகவே பயந்த சுபாவமுடையவர். நண்பர்கள் என்று குறிப்பிடத்தக்க வகையில் எவருமில்லை. எம்மிடம் பெரிய வசதி எதுவுமில்லை. நான் கூலி வேலை செய்தே என் பிள்ளைகளை வளர்த்து வருகின்றேன். தோட்டம் செய்த போதிலும் அதன் மூலமான வருமானம் போதாது.

சம்பவம் நடந்த கடந்த வியாழக்கிழமையும், தாயாரே இவரது சப்பாத்துக்கள் எல்லாம் துடைத்து சாப்பாடு கொடுத்து பரீட்சைக்கு அனுப்பி வைத்தார். பரீட்சை காரணமாக கடந்த ஆறுமாத காலமாக அவரை தோட்டத்தில் வேலை செய்யுமாறு கேட்கவேயில்லை.



செந்தூரன்

சம்பவம் நடந்த இடத்திற்கு நாம் சென்று, எமது மகன் அப்படி எல்லாம் செய்யமாட்டான் என்று கூறியபோது, அங்கு நின்றவர்கள் எம்முடன் சண்டைபிடித்தனர். அவர் தான் ரயிலின் முன் பாய்ந்தவர் என்றுகூறினர். சம்பவ இடத்தில் உறவு முறையான பெண் (தங்கை) ஒருவர் நின்றவர். இவர்தான் அப்படிச் செய்தவர் என்று தனக்குத் தெரியாது எனக் கூறினார். ஏனெனில் தொப்பியால் முகத்தை மறைத்தபடி நின்றதால் அவர்தான் எனத் தெரியவில்லை எனக் கூறினார்.

சைக்கிளை கரையாகச் சாத்தி வைத்துவிட்டு ரயில் வருகிறதா என இவர் பார்த்துள்ளார். இதன் போது, அங்கு பணியில் இருந்த ரயில் கடவையாளரும் ஏனையோரும் 'தம்பி தலை போகப்போகுது' எனக் கூறி அவரை வெளியே இழுத்து விட்டுள்ளனர். பின்னர் அவர் வடி(சிறிய கன்ரர்) வாகனமொன்று அவ்விடத்தில் நின்றது. அதன்பின்னர் ஒழித்து நின்றுவிட்டு ரயில் வரும்போது இரண்டு கைகளையும் உயர்த்திக்கொண்டு பாய்ந்துள்ளார் என அங்கு நின்றவர்கள் தெரிவித்தனர்.

எனது மகன் இவ்வாறான ஒரு செயலைச் செய்வான் என நாம் ஒருபோதும் நினைக்கவே இல்லை. எனது மகன் ரயில் முன் பாய்ந்த உடனேயே அவரது கடிதம் போட்டோ பிரதி செய்யப்பட்டு அங்கிருந்தவர்களிடம் கொடுக்கப்பட்டது தொடர்பாகவே எமக்கு சந்தேகமாக உள்ளது. அவரே அந்த கொப்பியில எழுதியுள்ளார். பொலிஸாரும் அந்தக் கொப்பியுடன் வீட்டிலிருந்த அவரது வேறு கொப்பிகளையும் எடுத்துப் பார்த்துள்ளனர். நாமும் அவரது எழுத்துத்தானென பொலிஸாரிடம் கூறிவிட்டோம்.

**செந்தூரனின் மூத்த சகோதரி என்ன கூறுகிறார்?**

செந்தூரன் கா.பொ.த சாதாரண தரப் பீரட்சையில் சித்தியடைந்து த்ன உயர்தரம் பெரிய பாடசாலையில் படிக்க வேண்டுமென ஆசைப்பட்டார். அவரது ஆசையை நிறைவேற்றும் வகையில் அவரை நாம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் சேர்த்து வைத்தோம். அங்கு அவரது படிப்பு உயர்வடைந்ததுடன் வகுப்பிலும் முதலிடத்திற்கு வந்தார். தேர்ச்சி அறிக்கை வாங்குவதற்கு மேடைக்கு கூட போகமாட்டார். தாயாரே அதனை வாங்க வேண்டும். அவ்வளவிற்கு அவரிடம் கூச்ச சுபாவம் இருந்தது.

சம்பவம் நடந்த அன்றுகூட பொது அறிவுப் பரீட்சை இன்று நான் பத்தரை மணிக்கே வந்து விடுவேன் என்று அம்மாவிடம் கூறியே சென்றார்.

கொப்பிகளிலும் ஏதாவது எழுதினாலும் சரி, பிழை பார்க்க என்னிடமே காட்டுவார். இவர் இப்படிச் செய்வார் என அவரது நடத்தையில் கூட எவ்வித வித்தியாசத்தையும் நாம் காணவில்லை. அவர் பத்திரிகைகளை நாளாந்தம் வாசிப்பார். இந்த கைதிகள் விடுதலை தொடர்பாகவும் அவர் வீட்டில் ஒன்றும் கதைக்கவே இல்லை. பாடசாலையில்கூட இவருக்கு விரோதிகள் என்று எவருமே இல்லை. எல்லோருடனும் சகஜமாகவே பழகுவார்.

சம்பவம் நடந்தது தொடர்பாக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபரே எமக்கு தகவல் தந்தார். சம்பவம் நடந்த உடனேயே, தம்பி எழு

*(தொடர்ச்சி 04 இல்......)*



செந்தூரனின் இல்லம்

**வர்ச்சி, ஜனனி**



# வெளியேறினார் சந்திரகுமார்?

சிவகரன்

ஈ.பி.டி.பி கட்சியிலிருந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் வெளியேறி விட்டதாகவே நம்பத்தகுந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் ஈ.பி.டி.பியின் கிளிநொச்சி திருநகரில் அமைந்துள்ள மாவட்ட அலுவலகத்தில் இதுநாள்வரை தனது பணிகளை மேற்கொண்டு வந்த சந்திரகுமார் கடந்த புதன், வியாழன் நாட்களில் அங்கிருந்த தனது உடைமைகளை ஏற்றிக் கொண்டு கிளிநொச்சி கனகபுரத்திற்கு சென்றுவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.



கடந்த நாடாளுமன்ற தேர்தலின் பின் புகையத்தொடங்கிய உள்வீட்டுப் பிரச்சினை பின்னர் பூதாகரமாகி தற்போது கட்சியைவிட்டு வெளியேறும் நிலைக்கு சென்றுள்ளது.

கட்சி கடந்த காலங்களில் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்த வேளைகளிலெல்லாம் கட்சியை களத்தில் நின்று காப்பாற்றியவர்களை உதாசீனம் செய்துவிட்டு லண்டனில் இருந்துவந்த சந்திரகுமாருக்கு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு கட்சியின் செயலாளர் என்றவகையில் டக்ளஸ் தேவானந்தா அனுமதி வழங்கியமை தொடர்பாக கட்சிக்குள்ளேயே புகைச்சல் இருந்தது.

எனினும் ஈ.பி.டி.பி அமைப்பில் தன்னை ஒரு வித்தியாசமானவராக காட்டிக்கொண்ட சந்திரகுமார் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று எம்.பியானவுடன் கட்சியின் பணிப்பிற்கமைய கிளிநொச்சியில் தனது அரசியல் செயற்பாட்டை முன்னெடுத்தார். இதன்போது அவர் மக்களுக்கான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்ததாக அம்மாவட்ட மக்களே தெரிவித்திருந்தனர்.

குடிநீர்ப் பிரச்சினை, நெல் கொள்வனவு, மீள்குடியேற்றம், பாடசாலைகள் புனரமைப்பு போன்ற பல்வேறு செயற்பாடுகளை கிளிநொச்சியில் இவர் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிள்றது.

இந்தநிலையில் நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலுடன் கட்சிக்கும் இவருக்குமான உறவு கசந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

கட்சியின் கட்டுப்பாட்டை இவர் மதிப்பதில்லையெனவும் கட்சியின் உறுப்பினர்களைக்கூட இவர் மதிப்பதில்லையெனவும் கட்சிக்குள்ளேயே புகைச்சல் கிளம்பியது.

இந்தநிலையில் கட்சியின் செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கியிருக்கத் தொடங்கினார் சந்திரகுமார். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வி இவருக்கும் கட்சிக்கும் இடையிலான விரிசலை மேலும் அதிகரித்தது.

எனினும் இவர் கட்சியிலிருந்து தான் விலகியதாகவோ அல்லது கட்சி இவரை நீக்கியதாகவோ எவ்வித அறிவித்தலையும் விடவில்லை. அவரவர் தம்பாட்டிற்கு தமது அரசியலை முன்னெடுத்தனர்.

இந்தநிலையில் தான் தொடர்ச்சியாக கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து தனது அரசியல் பணியை மேற்கொள்ளப் போவதாகவும் லண்டனுக்கு செல்வதற்கான உத்தேசம் இல்லையெனவும் தனது ஆதராவாளர்களிடம் தெரிவித்திருந்தார். அவ்வாறே தனது அரசியலையும் முன்னெடுத்தார்.

தற்போது தொடர்ச்சியாக பெய்த மழையினால் கிளிநொச்சி மாவட்டத்தின் பொன்னகர் பகுதியில் மக்கள் பல்வேறு கஷ்ரங்களை அனுபவித்த வேளையில் அம்மக்களுக்கு அண்மையில் நேரடியாகச் சென்று உதவிசெய்தார் சந்திரகுமார்.

இவ்வாறான நிலையில் கட்சிக்கும் இவருக்குமான பிரிவு நிரந்தரமானது என்பதுபோலவே தெரிகிறது. இரண்டு பகுதியினரும் உத்தியோக பூர்வமாக எதுவும் தெரிவிக்காத நிலையில் அவர் கடந்த புதன், வியாழன் நாட்களில் கட்சியின் கிளிநொச்சி மாவட்டப் பணிமனையிலிருந்து வெளியேறிச் செல்வதென்பது அவர் கட்சியிலிருந்து விலகியதையே காட்டுவதாக விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

அவ்வாறெனில் ஈ.பி.டி.பிக்குள் தன்னை வேறுபட்ட நபராக அடையாளப்படுத்திக் கொண்ட சந்திரகுமார் எதிர்காலத்தில் தனது அரசியலை தனித்துவமாக மேற்கொள்ளப்போகின்றாரா? அல்லது இலங்கையிலுள்ள இரண்டு பிரதான தேசியக் கட்சிகளுடன் இணைந்து மேற்கொள்ளப்போகின்றாரா? என்பது அவருக்குத்தான் வெளிச்சம்.

இவ்வாறான ஒருவரை வெளியில் விடுவதென்பது ஈ.பி.டி.பிக்கே பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். ஏனெனில் ஈ.பி.டி.பி தொடர்பான மக்களின் அபிப்பிராயங்களை மாற்றியதில் சந்திரகுமாருக்கு முக்கிய பங்குண்டு.

எனவே அவரை கட்சியிலிருந்து நீக்குவதென்பது கட்சியின் உறுப்பினர்கள் என்னதான் விமர்சனம் செய்தாலும் கட்சிக்கே பாதகமாக அமையும்.

யுத்தம் முடிவடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் ஈ.பி.டி.பிக்கென ஒரு ஆதரவுத் தளத்தை தனது செயற்பாட்டின் மூலம் ஏற்படுத்தியவர் சந்திரகுமார்.

எனவே பிரிந்தவர்கள் ஒன்று கூடுவார்களா? அல்லது பிரிவு நிரந்தரமானதா? காலம்தான் பதில்சொல்லும்.

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## செந்தூரனின் மரணம்...

திய கடிதம் போட்டோ பிரதி செய்யப்பட்டு உடனேயே அங்கு நின்றவர்களிடம் கையளிக்கபட்டுள்ளது. பின்னர் இந்தக் கடிதம் கொடுத்தவர்களைக் காணவில்லை. இரண்டு பேர் அந்தக் கடிதங்களை கொடுத்ததாகவும் உறவினரான அவரின் தந்தையின் தங்கை தெரிவித்தார்.

மேலும் அவர் பரீட்சைக்கு செல்லும் போதுகூட கொப்பி எதுவும் கொண்டு செல்லவில்லை. கடிதம் எழுதிய கொப்பி கூட கடையிலேயே வாங்கியதாக தெரிவிக்கப்படுகிறது. ஆனால் அந்தக் கொப்பியில் எழுதப்பட்ட கடிதம் எனது தம்பியினுடைய கையெழுத்து தான் என்பதனை நாம் பொலிஸாருக்கு தெரிவித்தோம்.

எனது சகோதரன் ரயில் முன் பாய்ந்து இறந்தநிலையில் அவரது கடிதம் உடனேயே போட்டோ பிரதி செய்து கொடுக்கப்பட்டதென்பது புரியாத புதிராகவே உள்ளது.

இவ்வாறான ஒரு கடிதத்தை போட்டோ பிரதி செய்வதற்கு கடைக்காரரே பயப்படுவார்கள். இவ்வாறிருக்கையில் அது எப்படி போட்டோ பிரதி செய்யப்பட்டது?

பரீட்சைக்கு செல்வதாக கூறிச சென்றவர் பாடசாலைக்கு போகாமலேயே இந்தச் சம்பவம் காலை வேளை நடந்துள்ளது. வழமையாக வீட்டிலிருந்து காலை 7.30 மணிக்கு பாடசாலைக்கு செல்லும் அவர் அன்றையதினம் 20 நிமிடம் முந்தியே புறப்பட்டார்.

சம்பவம் நடந்த இடத்திற்கு நாம் சென்றவேளை அங்கு நின்றவர்களும், சில ஊடகங்களும் என்று தந்தை நீண்டகாலமாக தடுப்புக் காவலில் இருந்ததாக தேவையற்ற விதத்தில் தெரிவித்தனர். ஆனால் இதெல்லாம் வெறும் வதந்தி. கடந்த 46 வருடங்களாக எனது தந்தை கோப்பாயிலேயே வாழ்கின்றார்.

இதேவேளை எனது தம்பியான செந்தூரனின் கடிதத்தை போட்டோ பிரதி செய்து சம்பவம் நடந்த இடத்தில் விநியோகித்தவர் எனத் தெரிவித்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டவருக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. அவர் யார் என்பதே எமக்குத் தெரியாது.

### இவருக்கு சிறுவயதில் கற்பித்த ஆசிரியர் என்ன கூறுகின்றார்?

இவர் ஆரம்பத்தில் கல்வியில் பின்தங்கியே காணப்பட்டார். ஆனால் பின்னர் இவரது கல்வி மேம்பட்ட நிலைக்கு வந்துவிட்டது. இவருக்கு நண்பர்கள் எவருமில்லை. தானும் தன்பாடுமென இருந்தவர். இவரது பெற்றோர் எவ்வித பிரச்சினைகளுக்கும் சொல்லாதவர்கள். பிள்ளைகளும் அப்படித்தான். பிள்ளைகளின் கல்வியில்பெற்றோர்கூடிய கவனமெடுப்பவர்கள். நான் சிறுவயதில் அவருக்கு ஒருமுறை அடித்த போது பாடசாலைக்கு தந்தை வந்துவிட்டார். அவ்வாறு பிள்ளைகளில் அவர் கூடிய அக்கறை எடுப்பார் என்றார்.

கடந்த 26ஆம் திகதி காலை 7.20 மணியளவில் வீட்டிலிருந்து புறப்பட்ட செந்தூரன் அன்றைய தினம் பொது அறிவு பரீட்சை எனவும் முற்பகல் 10 மணிக்கு தான் வீடு வந்துவிடுவேன் எனவும் தாயாரிடம் கூறிச்சென்றுள்ளார்.

இவ்வாறு சென்றவர் பாடசாலைக்குகூட செல்லாமல் காலை 8 மணியளவில் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக புதிதாக வாங்கிய கொப்பியில் எழுதி வைத்துவிட்டு ரயில்முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார் என வெளிவந்த செய்தியை இன்னமும் நம்ப மறுக்கின்றனர் பெற்றோர்.

ஏனெனில் வீட்டில் பயந்த சுபாவமுடைய தமது பிள்ளை இவ்வாறு ஒரு காரியத்தை செய்யத் துணிந்தார் என்பது அவர்களால் ஜீரணிக்கமுடியாமலேயே உள்ளது.

# தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அநாதரவாக புற்றுநோய் சிகிச்சைப்பிரிவு!

## காப்பாற்றுமா வடக்கு மாகாணசபை

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து மக்களுக்கு பல்வேறுபட்ட சேவைகளை வழங்கிக் கொண்டிருப்பதால் வைத்தியர்கள், தாதியர்கள், மருந்தாளர்கள், மருத்துவ ஆய்வுகூட தொலில் நுட்பவியலாளர், சிற்றூழியர்கள் என பல்வேறுபட்ட ஆளணி பற்றாக்குறையை எதிர்நோக்குகின்றது. வடமாகாணத்திலேயே புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு, உளநல சிகிச்சைப் பிரிவு என்று இருபெரும் அலகுகளைக் கொண்டு இது காணப்படுவதால் எமது இந்த வைத்தியசாலை ஆளணிப் பற்றாக்குறையால் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றது. வடக்கு மாகாணசபையின் ஆளுகைக்குட்பட்ட இந்த வைத்தியசாலை தொடர்ந்து செயற்படுவது தொடர்பில் வடக்கு மாகாணசபை விரைந்து நடவடிக்கை எடுக்குமா?

யாழ்.போதனா வைத்தியசாலையில் இல்லாத இருபெரும் அலகுகளான உளவளச் சிகிச்சைப் பிரிவும், புற்றுநோய் சிகிச்சைப் பிரிவும் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் காணப்படுகின்றன. புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக்கான விடுதிகள் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஆரம்பத்தில் இருந்தாலும் தற்போது அவை அனைத்தும் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு விட்டன. அத்துடன், யாழ். பல்கலைக்கழகத்தின் உளநலச் சிகிச்சைப் பிரிவு, புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுகளுக்கான விரிவுரைகள் அனைத்தும் தற்போது தெல்லிப்பணை ஆதார வைத்தியசாலையிலேயே நடைபெற்று வருகின்றன.

புற்றுநோய் சிகிச்சைப்பிரிவில் உள்ள புற்றுநோயாளர்களுக்கு இரத்தம் அதிகளவில் தேவைப்படுகின்றது. ஆனால், இங்கு இரத்த வங்கிக்கு ஒரு வைத்திய உத்தியோகத்தர் மட்டுமே உள்ளார். இரத்த வங்கிக்கென பொதுச்சுகாதாரப் பரிசோதகர் என்று எவரும் இல்லை. நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் முயற்சியால் உருவாக்கப்பட்ட மிகவும் சிறிய ஓர் அறையிலேயே இரத்தவங்கி செயற்படுகின்றது. நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் முயற்சியால் இளைஞர் அமைப்புக்கள், பொதுஅமைப்புக்கள் ஆகியவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்தி நடமாடும் இரத்த வங்கி முகாம்கள் ஒழுங்கமைக்கப்படும் போது இந்த இரத்த வங்கிக் குழுவினர் நடமாடும் முகாமுக்குச் செல்லும் போது வைத்தியசாலையின் இரத்தவங்கிச் செயற்பாடுகள் ஸ்தம்பித்த நிலையிலேயே காணப்படும் அவலநிலை உள்ளது.

வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. இது ஒரு மீள்குடியேற்றப் பிரதேசம் என்பதால் மக்கள் மீளக்குடியேற, குடியேற வைத்தியசாலையில் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்த வண்ணம் உள்ளது. ஆனால், மக்கள் தொகை அதிகரிப்புக்கேற்ப வெளிநோயாளர் பிரிவில் அவர்களைப் பார்வையிடும் வைத்தியர்களின் எண்ணிக்கை போதாமலுள்ளது. தாதியர்களின் எண்ணிக்கை போதாமலுள்ளது. மருந்தாளர்களின் எண்ணிக்கை போதாமலுள்ளது. தெல்லிப்பளை – அச்சுவேலி வீதி திறக்கப்பட்டால் வலி.கிழக்கு மற்றும் வடமராட்சியைச் சேர்ந்த மக்களும் தெல்லிப்பணை வைத்தியசாலையை நாடவேண்டிய தேவைப்பாடு நிச்சயம் ஏற்படும்.

புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு நவீனமுறையில் மகரகமவுக்கு இணையாக உருவாக்கப்பட்டு வருகின்றது. இந்த வருட இறுதியில் வடமாகாணத்தைச் சேர்ந்த மக்கள் புற்றுநோய் மேலதிக சிகிச்சைக்காக மகரகமவுக்குச் செல்லவேண்டிய தேவை ஏற்படாது. வடமாகாணத்துக்கு வெளியே அநுராதபுரம், புத்தளம், சிலாபம் போன்ற பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும் இங்கு வந்து புற்றுநோய் சிகிச்சை பெறுவதற்கான ஏதுநிலை நிச்சயம் உருவாகும்.

இவ்வாறாகப் பல்பரிமாண வளர்ச்சியை நோக்கி வீறுநடை போடும் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் சகல தரப்பு ஆளணிகளும் பற்றாக்குறை யாகவே உள்ளனர். தற்போது அமைய அடிப்படையில் கூட்டுறவின் ஊடாகப் பணி புரிந்த 36 சுகாதாரத் தொண்டர்களும் அவர்களது சேவைக்காலம் நீடிக்கப்படாமையால் தொடர் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றார்கள். இது தொடர்பில் அரச அதிகாரிகளோ, அரசியல்வாதிகளோ எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாதமை வேதனை அளிக்கின்றது.

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைக்கென அண்மையில் நியமனம் வழங்கப்பட்ட 30 சுகாதாரத் தொண்டர்களை, எமது வைத்தியசாலை ஆளணிக்கு உட்படுத்தி சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனைகளுக்கு கடமைக்கு விடுவித்திருக்கிறார்கள். பெயரளவில் 160 சிற்றூழியர்கள். ஆனால், கடமையிலுள்ளோர் வெறும் 130 பேர் மட்டுமே. 30 பேர் சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனையில் கடமையாற்றுகின்றார்கள். ஆனால், எமது வைத்தியசாலையின் முழுமையான செயற்பாட்டுக்கு 300 இற்கும் குறையாத ஆளணியினர் தேவையாக உள்ளனர். அதிலும், வெறும் 12 பேர்தான் ஆண் சிற்றூழியர்கள். பெண் சிற்றூழியர்களை வைத்துக் கொண்டு மிகவும் கடுமையான சுகாதாரப் பணிகளை முன்னெடுப்பது என்பது மிகவும் கடுமையான ஒரு விடயம்.



அமைய அடிப்படையில் கடமையாற்றி பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் 36 சுகாதாரத் தொண்டர்களில் 20 பேர் ஆண் சிற்றூழியர்கள். இவர்கள் பல வருடங்களாக தொண்டர்களாக சகல விடுதிகளிலும் கடமையாற்றி நிறைந்த அனுபவம் பெற்றவர்கள். புதிதாக சுகாதாரத் தொண்டர்களை உள்ளீர்ப்பதை விட, கடமையாற்றி அனுபவமிக்க இவர்களை நிரந்தரமாக்கினால் வைத்தியசாலைப் பணிகளை ஓரளவாவது இலகுபடுத்த முடியும்.

ஆகவே, வடக்கு மாகாண சபைக்கு கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதம் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை. இதனைச் சரிவர செயற்படுத்த வேண்டியது வடமாகாண சுகாதார அமைச்சினதும் ஒட்டுமொத்த சபையினதும் பாரிய பொறுப்பு. இந்த வைத்தியசாலையை ஒரு சவாலாக ஏற்று மாகாணசபை சிறப்பான சேவைகளை மக்களுக்கு வழங்க முன்வர வேண்டும். அதைவிடுத்து, மாகாண சபையிலுள்ள அரசியல்வாதிகள் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டத்துக்கும், சுகாதாரத்துறையிலுள்ள சில பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் தமது பிரதேசத்துக்கும் என்று முக்கியத்துவம் கொடுத்துச் செயற்பட்டால் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவை மூடுவதைத் தவிர வேறு வழி கிடையாது.

மாறாக, எமது இந்த வைத்தியசாலையைத் தரமுயர்த்த வேண்டும் என்று மக்களின் பிரதிநிதிகளில் ஒருவன் என்ற வகையில் வலி.வடக்கு பிரதேச சபையிலும் எமது கோரிக்கையின் நியாயாதிக்கத்தை உணர்ந்து வலி.தெற்கு பிரதேசசபையிலும் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை மாகாணப் பொது வைத்தியசாலையாகவோ அன்றி மாவட்டப் பொது வைத்தியசாலையாகவோ தரமுயர்த்தப்பட வேண்டும் என்று ஏகமனதான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதன் பிரதிகள் சம்பந்தப்பட்ட மத்திய, மாகாண அமைச்சுக்களுக்கும் அனுப்பப்பட்டன. அதற்கு மத்தி, மாகாணங்களிலிருந்து எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. அல்லாதுவிடில், எமது வைத்தியசாலையில் அதிசிறப்பு இரு அலகுகள் இருப்பதனால் இதை ஒரு கிழக்கு மாகாணத்தில் அக்ஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை உள்ளமை போன்று அதிசிறப்பு வைத்தியசாலையாக அறிவிப்பு செய்து அதன்மூலம் விசேட தேவைகளைப் பெற்று வைத்தியசாலை அபிவிருத்தியை மேற்கொள்ள முடியும்.

எதுவும் செய்ய இயலாது விடில், மத்திய அரசிடம் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையைக் கையளிப்பதையோ, அல்லது புற்றுநோய் சிகிச்சைப் பிரிவை இழுத்து மூடுவதையோ தவிர வேறுவழி ஏதும் இல்லை என்றே கூறலாம்.

தெல்லியூர் சி.ஹரிகரன்
செயலாளர் – நோயாளர் நலன்புரிச் சங்கம், ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை.

# அதிகரிக்கும் வீதி விபத்துக்கள் கவனம் செலுத்துவது யார்?

அன்புவழியூர்
ச. திருச்செந்தூரன்
திருகோணமலை.

ஒரு காலத்தில் ஷெல்லுக்கு பயந்து ஓடிய காலம் இருந்தது. இப்படியாய்ப்பட்ட காலம் நகர்ந்து இன்று வீதியைக் கண்டு ஓடி ஒளியும் காலகட்டம் வந்திருக்கிறது எனது வயதான நண்பர் ஒருவர் என்னிடம் அளவளாவும் போது சொன்ன விடயம் இது. "மோட்டார் சைக்கிளை வீட்ட விட்டிட்டு இப்ப நடந்துதான் திரியிறன், நடந்து போனாலே தேடிவந்து இடிக்கிறாங்கள், சைக்கிளில் போனால் சொல்லவும் வேணுமே..." இது அவரின் புலம்பல். இது புலம்பல் மட்டுமல்ல இதில் உண்மையும் இருக்கத்தான் செய்கிறது.

இன்று வீதிகள் எங்கும் கொலைக்களமாகத்தான் காட்சியளிக்கின்றன. மக்களை ஆட்டி எடுத்த யுத்தகளம் ஒருவாறாக இப்பொழுது அகன்று இருக்கிறது. வடக்கே செல்லும் வாகனங்கள் A9 வீதியில் இன்று அதிகளவில் விபத்துக்குள்ளாவது பெருகியுள்ளது. காலம் காலமாக தவம் இருந்து உருவாகும் உயிர்கள் கணப்பொழுதில் கருகும் வாடிக்கை இன்று இவ்வீதிகளில் நிகழ்ந்தேறிக் கொண்டுதான் இருக்கின்றன.

இலங்கையைப் பொறுத்த வரையில் வீதி விபத்துக்கள் தொடர்பாக நடாத்தப்பட்ட ஆய்வொன்றில் 2008ஆம் ஆண்டு தொடக்கம் 2014ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் 17, 358 மரணங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிட்டத்தக்கது. ஏன் இவ்வாறு வீதி விபத்துக்கள் அதிகரிக்கின்றன என்றால் அதற்கு பல்வேறுபட்ட காரணிகள் இருக்கத்தான் செய்கின்றன.

முறையற்ற வீதி செப்பனிடுகை, மதுபோதையில் வாகனம் செலுத்துதல், வீதிப்போக்கு வரத்து விதிகள் பற்றிய போதிய தெளிவின்மை, சாரதி அனுமதிப் பத்திரமின்றிய பராயமடையாதவர்களின் முறையற்ற வாகனம் செலுத்துகை, அளவுகடந்த வேகம், கைபேசியில் கதைத்தவாறு வாகனம் செலுத்துதல், மோசமான மன நிலையில் வாகனம் செலுத்துதல், வீதியில் செலுத்தக்கூடிய அளவில் தரம் இன்றிய வாகனங்களை செலுத்துதல் என்பன போன்ற பல்வேறுபட்ட காரணிகள் வீதிப் போக்குவரத்தில் விபத்து நிகழ்த்தாற்றுகையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாகும்.

இதுதவிர வாகன விபத்து ஏற்படுவதற்கு மிகப் பிரதான காரணம் வாகனத்தை ஓட்ட ஆரம்பிக்கு முன்னர் வாகனத்தில் டயர் சரியாகத்தான் இருக்கின்றதா? காற்று அளவு, டயர் தேய்மானம் இவை யாவற்றிலும் கவனம் செலுத்த வேண்டியது மிகவும் முக்கியமான அம்சமாகும். வாகனத்தின் சில்லுகள் பல இடங்களில் விபத்துக்களை அதிகரிப்பதில் செல்வாக்குச் செலுத்தி இருக்கின்றன. இது ஆய்வுகள் தரும் உண்மை. இன்று இலங்கையில் நாளுக்கு சராசரி 8 நபர்கள் வீதி விபத்தினால் மரணமாவதாக அண்மைக்கால புள்ளிவிபரம் ஒன்று கோடிட்டுக் காட்டுகிறது.

இந்த வீதி விபத்துக்கள் இடம்பெறுவதனால் உயிரிழப்புக்கள் ஏற்படுவது துரதிஷ்டவசமான உண்மைதான். இருப்பினும் இதனால் பெருவாரியான இழப்புக்களும் ஏற்படத்தான் செய்கின்றன. இதற்கு ஒரு உதாரணமாக 2012 தொடக்கம் 2013ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் உள்வாங்கப்பட்ட கணிப்பீட்டின் படி 1500 மோட்டார் சைக்கிள்கள், 750 லொறிகள், 450 தனியார் பஸ்வண்டிகள், 470 முச்சக்கர வண்டிகள் என்பன சேதமாகி இருக்கின்றன.

இவ்வாறு ஏற்படும் உயிர் மற்றும் உடைமை இழப்புக்கள் என்பவை சாதாரண தனிப்பட்ட நபர் சார்ந்த விடயமல்ல, அவை நாட்டின் பொருளாதாரத்திலும் தாக்கம் செலுத்தக்கூடிய விடயங்களாகும். இன்றைய புள்ளிவிபரங்களின்படி நாளுக்கு நாள் வீதி விபத்துக்களின்படி ஏற்படும் சேதங்கள் மிகவும் அதிகரித்துக் கொண்டுதான் வருகின்றன. ஏலவே மூன்று தசாப்தகாலமாக இனத்தை தாரை வார்த்துக் கொடுத்தவர்கள் என்ற வகையில் இன்னும் மிஞ்சி இருக்கும் எச்ச சொச்சத்தையும் இழந்துவிட்டு நிற்கப் போகிறோமா? என்பதை சிந்திக்கத் தலைப்பட வேண்டிய கட்டத்திலே இருக்கிறோம். இன்று வடக்கு, கிழக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வாகனக் வாகனப் பெருக்கம் அதிகரித் துள்ளது. இதற்கு லீசிங் கம்பனிகளின் பெருக்கம், பணப் புழக்கம் என்பன காரணமாக இருந்தாலும் இவ்வாறு அளவுக் கதிகமான வாகனப்புழக்கம் ஆரோக்கியமான விடயமல்ல.

வாகனம் என்பது ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு செல்லும் ஊடகமே யன்றி கௌரவத்தை வெளிக்காட்டும் சாதனங்களல்ல என்பதைப் புரிய வேண்டும். அதேவேளை எமது இளைஞர்களிடம் உள்ள தவறான பழக்கம் தலைக் கவசம் அணியாத பழக்கம். அதை என்னவோ வேண்டாத பழக்கம் என்பதைப் போல் விட்டொழித்து செயற்படுகின்றனர். அதேவேளை இளைஞர்களிடம் மாத்திரமில்லாது இது பெரும்பாலானவையாக அனைத்து வயதுப் பிரிவினரிடமும் இருக்கிறது. தலைக் கவசம் அணியாமல் பயணிக்கும் மக்கள் கூட்டம் ஒருபுறமிருக்க, தலைக்கவசம் அணிவோரில் எத்தனை உணர்ந்து தலைக் கவசம் போடுவோர் என்றால் ஒருவீதம் கூட இருக்காது.

ஆய்வுத் தேவைக்காக எம்மால் அண்மையில் திருகோணமலை நகரில் நூறு சாரதிகளிடமும், அவர்களின் மோட்டார் சைக்கிள்களிலும் பயணித்தவர்களிடம் தலைக் கவசம் சம்பந்தமாக எம்மால் சில கேள்விகள் கேட்கப்பட்டு, தலைக்கவசநிலை பார்க்கப்பட்ட போது நூறில் 90 பேர் சொன்ன விடை TRAFFIC (போக்குவரத்து பொலிஸார்) பிடிப்பார்களே என்று தான் தலைக்கவசம் அணிவதாக வெளிவந்த



உண்மை. விடை 10 பேர் மாத்திரமே அணிய வேண்டும் என்று உணர்ந்து போட்ட வயது வந்த தரப்பினர். இதுதான் இன்றைய நிலை, இதேநிலை ஆய்வுவெளிப்பாட்டு விடைதான் வடகிழக்கு உள்ளிட்ட இடங்களிலும் ஏனைய இலங்கைத் திருநாட்டின் பல இடங்களிலும் இருக்கும் உண்மை. இதேவேளை அவர்கள் அணிந்த தலைக் கவசங்களைப் பார்க்கும்போது அவற்றில் 30 மாத்திரமே பொருத்தமானவையாக இருந்தன. மிகுதி 702ஆம் காற்றுக்கே கழன்றுவிடும் நிலையில் பொருத்திகள் இல்லா நிலையில் காணப்பட்டது.

இன்று உலகளாவிய ரீதியில் அனர்த்தத்தை ஏற்படுத்தும் காரணிகளில் இயற்கை அனர்த்தமும், வீதி விபத்துக்களும் அதிகளவில் செல்வாக்கைச் செலுத்துகின்றன. வளர்ந்த நாடுகளைப் பொறுத்தவரையில் முறையான வீதி அபிவிருத்தி திட்டம், வீதிப்போக்குவரத்து முறைகள் நெறியாக அமுல்ப் படுத்தப்பட்டு இருக்கின்றமை, அதேவேளை வீதி விதிமுறைகள் பற்றிய பூரண தெளிவூட்டல்கள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது.

எமது நாடுகளில் கடந்த காலங்களை விட அண்மைக் காலங்களில் வீதி விபத்துக்கள் தொடர்பாக தெளிவூட்டல்கள் வழங்கப்படுவது ஓரளவு மேம்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை சட்டங்களும் இறுக்கப்பட்டு வருகின்றமை வரவேற்கத்தக்க விடயமாகும். இருப்பினும் இச்சட்ட வழக்கங்கள் தெளிவூட்டல்கள் என்பவை மிகவும் அதிக அளவில் பாமர மக்களிடம் எடுத்துச்செல்ல வேண்டியது அரசின் கடமை. அதேவேளை இன்று சிறுவர்கள், சிறுமிகள் வாகனங்கள் செலுத்துகை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது. இவைபற்றி பெற்றோர் கவனம் செலுத்த வேண்டியது மிகவும் முக்கியமான விடய மாகும். இன்னொருபுறம் சாரதி அனுமதிப்பத்திர வழங்கலிலும் இந்த வழக்கங்கள் மிகவும் அதிகளவில் (எ) யாங்கிலும் காணக்கூடியதாக இருக்கிறது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அவதானித்த உண்மைச் சம்பவமொன்று ஒரு சாரதி பயிற்சிப் பாடசாலையில் அன்று ரயல் என்று சொல்லப்படும் முன்னோட்டம் நிகழ்ந்தவேளை இடம்பெற்ற சம்பவம். அனைவரும் மோட்டார் சைக்கிள் செலுத்திக்காட்டியே அனுமதி வழங்கப்பட்டவேளை, ஒரு சொகுசு வாகனமொன்று தலத்திற்கு விரைந்து வந்து நின்றது. விரைந்து வந்த செல்வந்த நபர் வந்தார். அனுமதிப்பத்திர படிவத்தைக் காட்டி அனுமதி பெற்றுக் கொண்டு சென்றார். எந்தவித முன்னோட்டங்களும் நிகழ்த்தப்படவில்லை.

இருப்பவனிடம் ஒரு சட்டம். இல்லாத நம்மவர்களிடம் ஒரு சட்டம். இவை யாவும் நாம் சற்று ஆராய வேண்டிய விடயம். இவை தொடர்பான முழுமையான அக்கறைகள் எங்கும் இல்லாத நிலையே காணப்படுகின்றது.

இது ஒருபுறமிருக்க மோட்டார் போக்குவரத்து பொலிஸார் சில இடங்களில் பணத்தை, கையூட்டல்களை வாங்கிவிட்டு சில குற்றங்களை மன்னிப்பதும் வீதி விபத்தை பெருக்கும் காரணிகளாக இருக்கின்றமை ஆய்வுத்தளம் ரீதியாக வெளிக்கொணரப்பட்ட உண்மை.

இவை பற்றிய சிந்தனைகள் அதிகளவில் மேற்கிளம்பியுள்ள நிலையில், மக்கள் அதிகளவில் கவனம் செலுத்த வேண்டிய விடயமாக இது இருக்கிறது. இல்லையேல் யுத்தப்பேய்க்கு பசி தீர்த்த எம்மினம் வீதிப் பேய்க்கும் பசி தீர்க்கும் இனமாகவும் மாற வேண்டியிருக்கும். இது சம்பந்தமாக அனைவரும் ஒரே நேர்கோட்டில் சிந்திக்க வேண்டிய கட்டத்திலே இருக்கிறோம். சிந்திப்போமா உயிர் கொடுக்காமல் தடுக்க...?

# என்னத்தைச் சொல்லி

"தம்பி டிஸ்ஸூக்கு காசுமுடிஞ்சு போச்சடா".
"காலமை ஒருக்கா கட்டிவிடுறியே"
"என்னஉங்களோடதானனக்கும் போட்டநான் எனக்கு இன்னும் நாலு நாளைக்கு வரும்போல" அவன் என்னைமிரட்டுறான். எடபொடியள் உங்கட கதைவேற என்ர கதைவேற நீங்கள் வாறபடமெல்லாம் சீடிமிலபாக்கிறியள் நான் அப்பிடியே எனக்குத் தேவையானதை நடுராத்திரியிலதானே பாக்கிறன்.
இப்பல்லாம் வீடுகள்ள நிம்மதியா ஒரு ரீவி பாக்கப்போறியோ "றேடியோ கேக்கப்போறியோ ஒண்டும் கிடையாது. அதெல்லாம் பெடிபெட்டையளின்ர கையிலதான். எதெண்டாலும் அறிவுக்கு உதவுறதா புத்திய வளக்கக்கூடியதா பொதறிவை வளக்கிறதா பாக்கினமோ..? ச்சைக் அதுகும் கிடையாது. ஆ "ஆத்தேகாதுபுளிச்சுப்போம் பாருங்கோ" டொங்கு டொங்கெண்டு ட்ரம்மில அடிக்கிற சத்தம் உந்த தாரைதப்பட்டை கணக்கில எதை எதையோ போட்டு அடிச்சு பாட்டாம் பாட்டு. குத்துப்பாட்டு குத்துப்பாட்டெண்டு ஏதோ வாயிலவராத மொழியில யெல்லாம் கத்துறாங்கள்"
"ஏண்டாபோறுதுதான் போடுறியள். எப்பன் தமிழ் பாட்டாப் போட்டாளன்ன?" எண்டுநான் ஒருத்தி கிடக்க மாட்டாமத்தான் கேட்டன்.
"கிழவிகாதும் போச்சே?..." போறதுதமிழ் பாட்டுத்தான் நல்லா காதைக் குடுத்துக் கேள். உலகப்புகழ் பெற்ற பாட்டை பிடிக்கேல்லயெண்ணுறாய்"
நானுமொருத்திகாதை இடுக்கிக் கொண்டு கிட்டவப்போய் கேட்டா "வை திஸ் கொலவெறி கொலவெறி கொலவெறிடீ"
இருந்தாலும் எங்கட காலத்திலும் சந்திரபாபு இப்பிடி இங்கிலீசுப்பாட்டுதமிழ் பாட்டெல்லாம் கலந்துபாடிநான் கேட்டநான்தான் தமிழ் கர்நாடக இசையிலவந்து ஆர் மேடையேறினாலும் பாடுறபாட்டு
"எப்படிபாடினாரோ" அடியார் அப்பிடிப் பாடநான் ஆசை கொண்டேன் சிவன்மேல்...
"இரணைநீசிவன்மேல் ஆசை வைக்க அந்தாள் பாட்டைக் கேட்டு நித்திரையாப் போயிருமே... பின்ன உந்த இழுவை இழுத்தா தொட்டில ஆட்டவே வேண்டாம்.." இவனுக்கென்னத்தைசொல்ல,
"எடேய் இந்தப்பாட்டை இங்கிலீசுமெட்டிலபாடினவர் சந்திரபாபு"அவன் நொடிச்சிட்டுப்போறான்.

மக்கும். கேட்டியளோ அதின்ர நக்கலை. கொஞ்ச மெண்டாலும் கடவுள்ள பத்தியம் தலையால தெறிச்சுதத்தி விழுகுதுகள். இப்பத்தையான் படங்கள்ள ஏதும் வாயில நுழையுற மாதிரி வசனம் இருக்கோ அதைத்தான் விடுங்கோ உந்தப் பாட்டுகளத்தான அங்கின இங்கின பாடுதுகள் பெரியசபையில வேண்டாம் குளிக்கயுக்க பாடுறமாதிரி....
"இச்சுத்தா இச்சுத்தா" எண்டுஅவர் பாடஅவாவும் குறையில்ல 'கத்துத்தாகத்துத்தா' துணிஞ்சு பொடியள் பொது இடங்கள்ள பாடலாமுங்கோ கேட்டா சினிமாப் பாட்டென்பங்கள்..
பிரபல கவிஞர்கள் பாட்டெழுதி வளத்த சினிமாவில இப்ப பாட்டெழுதுறவங்களுக்கு தமிழ் மறந்தேபோச்சு "ஆலுமாகோலுமா... ஐசாலக்கிடிமாலுமா?" இது என்ன மொழியடாப்பா ஆரும் தெரிஞ்சவை எனக்கும் சொல்லுங்க பாப்பம். அங்கால வாற வசனங்களையும் விளங்க வெண்டு அகராதி வரைக்கும் தேடிப்பாத்திட்டன். இனியென்ன எல்லாமேடையும் கதிகலங்கப்போகுது.. ஆலுமா தோலுமாண்டு...
உந்த தமிழ்நாட்டு அரசாங்கம் படங்களுக்கு தமிழ் பெயரில்லாட்டி வரி அதிகமெண்டு சட்டம் போட்டதுக்குப் பழிவாங்கிற மாதிரியெல்லோ கிடக்கு.
உந்த மாற்று மொழியெல்லாம் முதல் கண்டு பிடிச்சது ஆரெண்டு தெரியுமே

அது எப்பவோ எம்.ஜியார் படங்கள்ளயும் வந்ததுதான் சிவாஜி படங்கள்ளயும் வந்ததுதான். 'ஒன்ஸ் எ பாப்பாமெற் எ மாமா' அன்பேவாவிலயும் லவ்இஸ் பைன்ட் டார்லிங் ஒன்யுவாமைன்ட்' தவப்புதல்வனிலயும் வந்துது. பிறகு பிறகு தேவையெண்ட கிளப் டான்ஸ் வழிய ரெண்டொரு இங்கிலீசு தேவைக்குப் போட்டவங்கதான்.
அதைக்கூட விளங்கிற மாதிரி இசையமைச்சான்கள். கதாநாயகி குடும்பப் பெண்ணா வருவா. கவர்ச்சிக்கு தனியா ஒருத்தி வருவா அவ விட்டதான் இந்த மொழி விழங்காத பாட்டுவரும் ஒரு தெரியாத மொழியில பாட்டு வந்தா அதை பத்திரிகைகள் கிண்டி எடுத்திரும். அதே கணக்கள்ள ஒரு பாட்டுக்கு இடையில...பாட்டு அட நல்ல பாட்டப்பா வாயில வருதில்ல...ம்...ஆ 'பொம்பளஒருத்தி இருந்தாளாம் பூதத்தைபாத்துபயந்தாளாம்' இதுதான் அதுக்கு இடையில 'சொட்டிஜா சொட்டிஜா சொட்டிஜா. எண்ட சவுந்தரராசன் பாடாகவன் சொன்னவா சொன்னவா சொன்னவா எண்டு பாடுவார். அதைக்கேட்டு பத்திரிகையள்

குமுறினதில அது சௌராஸ்டிர மொழி எண்டதை சொல்ல வேண்டியதாபோச்சு அந்தப்பாடல் இசையமைப்பாளருக்கு.
எங்கேலுமெண்டா இந்த ஆலுமா கோலுமாவை தூயதமிழில மொழி பெயர்த்து தாங்கோபாப்பம். எண்டா... எங்கடபெடியள் முழி பெயர்க்கிறாங்கள். ஒரு மனிசனுக்கு மாற்றம் தேவைதான். நாகரீக வளர்ச்சியும் தேவைதான் அதுக்கு... எடேய் கேட்டுப் பாருங்கோடா பழைய பாட்டுகள அது நகைச்சுவையாக இருந்தாலும் அதில நாட்டுக்கு தேவையான நாலுகருத்திருக்கும். என.எஸ். கிருஸ்ணன, தங்கவேலு, சந்திரபாபு காலத்துப் பாட்டுகளில கருத்தில்லாதபாட்டு எது? பட்டுக்கோட்டையாரும் கண்ணதாசனும் உடுமலை நாராயணகவியும் நிலைச்சு நிக்கிறதுபாடல் வரியிலதான்டாப்பா...
இதென்ன கறுமமப்பா அஸ்க்கு அஸ்க்குலைமோ.. என்ர்ஈரல் குலைகைமோ எண்டு தளபதி ஆலுமா கோலுமா எண்டுதல.. எடேய் அவங்கள் என்ன வேணுமெண்டாலும் தூசணத்தில ஒரு படிப்போட்டுப் போகட்டன். அதை ஏன்ரா ஒண்டும் விளங்காம நீங்கள் கேக்கிறியள் திருப்பிப் பாடுறியள். உங்களால தானே தொலைக்காட்சிப் பெட்டிக்காறன் தமிழமறந்துபோறான்.
ஒருமனிசன் என்னவா வேணுமெண்டாலும் இருந்திட்டுப் போகலாம். ஆனா அவன் இவன் தானெண்டு அடையாளங் காட்டுறது பேசிற மொழியும் நடை உடை பழக்க வழக்கங்கள்தானே. அதை ஏன்ராமாத்துறியள் குலத்தில பிறந்து குரங்காட்டம் ஆடுறியள். உந்தப்பாட்டைப் போட்டுட்டு வயித்தை எக்கி எக்கித் துள்ள காச்சட்டை கீழால கழண்டு கொட்டுப்பட்டுப் போகுது. இப்பத்தையில் காச்சட்டையும் அதிலதான் பிடிச்சுத்தொங்குது.
படிக்கிற பிள்ளையள் பள்ளிக்கூட கட்டுப்பாட்டை மீறி உடுப்பு உடுத்துகினம். எண்டு போன கிழமை எங்கட பள்ளிக்கூட அதிபர்

பெற்றாரைக் கூப்பிட்டு வைச்சு பிராதுபோட்டா.. பெற்றார் என்ன செய்யிறது இப்ப பிள்ளையளோட எதுகும் கதைக்க ஏலுமே.
"ஜெலி பூசி தலையைக் கிண்டி மேலால கோதிவிட்டிட்டு பள்ளிக்கூடம் வாறாங்கள். பின்னால குடுமி கட்டவோ தெரியா கூந்தல் வளக்கினம். ஒருக்கா உங்கட பிள்ளையளை நீங்களே பாருங்க" எண்டு பொடியளக் கூப்பிட்டு வரிசை கட்டினா...
எனக்குச் சிரிப்புச் சிரிப்பா வருது. ஜிங்கிஜிங்கியெண்டு இங்காலும் இஞ்சாலுமா நடக்க, அவவின்ர பின் முதுகில ஒரு அரைஎக்கர் வெளியால தெரியிது. அநேகமா ரீச்சர்மார் பின்முதுகை காட்டிக்கொண்டு கரும்பலகையில எழுதினா பெடியள் எப்பிடி போட்டைப் பாக்கிறது. அவைக்கு தலைய விரிச்சும் விட ஏலாது கொண்டைதான் போடோணும். பின்ன அவயட மொடலும் சினிமாதானே... ஏ.எல்.ஓ.எல் பெடியள் எல்லாம் காப்பிலிக் கோழியள் மாதிரி வந்து நிக்கிறாங்கள் பெட்டையளின்ர ரவிக்கை மாதிரி சேட்டை அவ்வளவு இறுக்கமா வேற போட்டிருக்கிறாங்கள். எல்லாம் உந்த சினிமா செய்யிறவேலை. ரீவியில எவ்வளவு நல்ல விசயங்கள் போகுது. அதுகளப் பாக்கிறதில்ல. பள்ளியால வந்த உடன பாட்டுத்தான் குத்துப்பாட்டு காதல்பாட்டு... பழைய பாட்டெல்லாம் கண்ணில கண்டேலாது. பெட்டையள் லெக்கிங் போடுறாளவை எண்டதை பெரிசா கதைச்ச பத்திரிகையள், பெடியள் அவசரத்துக்கு தாச்சட்டை கழட்ட மாட்டாம தடுக்கி விழுற தப்பத்தி எதுவும் சொல்லேல.
பொம்பிளைப் பிள்ளையள் அப்பிடித்தான் உடுப்பு போடவேணும் அது அவயட பாதுகாப்புக்குத்தான். எண்டு சிவில் பாதுகாப்புக் கூட்டத்தில ஒரு பொலிசு சொல்லிப் போட்டான். சினிமாவப் பாருங்க பாட்டைக் கேளுங்க ரசியுங்க நீங்க அப்பிடி மாறவெணுமெண்டு கனவு காணாதையுங்க எவ்வளவுதான் நாங்கள் இங்கிலீசை தூக்கி நிமித்தினாலும் நாங்கள் இங்கிலீசுக் காறனா மாற ஏலாது ஏனென்டாதோல் காட்டிக் குடுத்திரும். போய் வாழுற வழியப்பாருங்கடா..



**தமிழ்க்கவி**

# தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியை போராளிகள் இயக்கம் ஓரம்கட்டிற்று

ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் தலைமையில் உள்ள அரசாங்கம் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியிலுள்ள தலைவர்களை பிரபாகரனின் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் இதர போராட்ட இயக்கங்களை மடக்கிப் பிடிக்கத் திட்டமிட்டு செயற்பட்டது.

அந்தத் திட்டத்தின் அடிப்படையில், அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஜூன் 10, 1978 ஆம் ஆண்டு தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். ஆனால் இந்தக் கூட்டத்திற்கு போகக்கூடாது என்று போராளி குழுக்களின் தலைவர்கள் கூறினார்கள்.

ஜூன் 9, 1978 ஆம் ஆண்டு தங்கத்துரையின் தலைமையிலான ரெலோ அணியினர் புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கொள்ளைச் சம்பவத்தை விசாரணை செய்த உடுப்பிட்டியைச் சேர்ந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் குட்டிகுமாரை வல்வெட்டித்துறைச் சந்தியில் வைத்து துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தினார்கள். குமாரின் கொலை ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கும், அமிர்தலிங்கத்திற்கும் விடுக்கப்பட்ட ஓர் எச்சரிக்கையாகவே எடுத்துக்கொள்ள வேண்டும்.

இருந்தபோதும் அ.அமிர்தலிங்கம், எம்.சிவசிதம்பரம் மற்றும் இரா.சம்பந்தன் ஆகியோர், ஜெயவர்த்தனாவின் அழைப்பை ஏற்று ஜூன் 10 ஆம் திகதி அவரைச் சந்திக்கச் சென்றார்கள்.

அந்த சந்திப்பின் போதுதான் மாவட்ட அளவில் நிர்வாகத்தை பரவலாக்கத் திட்டமிட்டுள்ளதாகவும், மாவட்ட ரீதியாக அமைச்சர்களை நியமிக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

"நாங்கள் இணைந்து செயற்பட்டால் இந்த மாவட்ட நிர்வாகப் பரவலாக்கத் திட்டத்தை உருவாக்கலாம்," என்றும் ஜெயவர்த்தன கூறினார். மேலும், "என்னால் உங்களுக்கு மாவட்ட அமைச்சர் பதவிகள் சிலவற்றையும் தர முடியும்" எனவும் கூறினார்.

இதற்கு அமிர்தலிங்கம் பதிலளிக்கையில், "இந்த நிர்வாக பரவலாக்கத் திட்டத்தைப் பற்றி மேலதிகமாக விபரங்கள் சமர்ப்பித்தால் இந்த நிர்வாக பரவலாக்கத் திட்டத்தை ஆராய்ந்து முடிவு கூறுவோம்," எனக் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், ஜே.ஆர். ஜெயவர்த்தனாவிற்கும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்குமிடையில் நடைபெற்ற சம்பாசனை ஜெயவர்த்தனாவினால் ஏரிக்கரை பத்திரிகைகளான ஆங்கிலப் பத்திரிகை "டெய்லி நியூஸ்", சிங்களப் பத்திரிகையான "தினமின", மற்றும் தமிழ்ப் பத்திரிகையான "தினகரன்" ஆகியவற்றிற்கும் திட்டமிட்டு இச்செய்தி கசிய விடப்பட்டது.



இதன்மூலம் தமிழ்ப் போராளிகளுக்கும் தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியினருக்கும் இடையில் பிளவினை ஜெயவர்த்தன உருவாக்கினார். தமிழ்ப் போராளிகள் அமிர்தலிங்கம் குழுவையும், அரசாங்கத்தையும் கடுமையாக விமர்சித்தார்கள். தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் இடையில் ஒரு வெறுப்பு மனப்பான்மை படிப்படியாக உருவாகிற்று.

யூலை 29, 1978 ஆம் ஆண்டு புத்தூரிலுள்ள ஆவரங்காலில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் வருடாந்த மாநாடு நடைபெற்றது. தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணித் தலைவர்கள் போராளிகளின் கோபத்திற்கு இலக்காகினார்கள். முந்நூறுக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் முத்துக் குமாரசாமியின் தலைமையில் அச்சுவேலி சந்தியிலிருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலமாக ஆவரங்காலுக்கு வந்தார்கள். அதையடுத்துப் பொலிஸாரின் தடையையும் மீறி, யூலை 30ஆம் திகதி ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் மீண்டும் ஓர் ஆர்ப்பாட்ட ஊர்வலமாக ஆவரங்காலில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக் கட்சியின் மாநாடு நடைபெற்ற பகுதிக்கு–ஒரு பகுதியினர் அச்சுவேலியில் இருந்தும், மறுபகுதியினர் புத்தூரிலிருந்தும் வந்தார்கள். 'உடனடியாகத் தமிழீழத்தை எந்த விதமான தாமதமுமின்றி உருவாக்குங்கள்," என்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளுடன் ஊர்வலமாக இளைஞர்கள் வந்தார்கள். அதே விடயத்தை கோசங்களாகவும் எழுப்பிக் கொண்டு வந்தனர்.

அவ்வாறு ஊர்வலத்தில் வந்த ஓர் இளைஞன் மாநாட்டு மேடையில் ஏறி "தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணித் தலைவர்கள் எல்லோரும் துரோகிகள். அவர்கள் உடனடியாக தமது நாடாளுமன்ற பதவிகளை இராஜிராம செய்ய வேண்டும்," என்று உரத்த குரலில் கத்தினான். இவ்வாறு குழப்பங்களின் மத்தியில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் ஆவரங்கால் வருடாந்த மாநாடு முடிவுற்றது.

படிப்படியாக இளைஞர்கள், தமிழ் அரசியல் தலைமைக்கு தங்களுடைய பூரண எதிர்ப்பை வெளிக்காட்டினார்கள். அவர்களது எதிர்ப்பின் மூலம் அவர்கள் ஜெயவர்த்தனாவால் வழங்கப்பட இருந்த மாவட்ட அமைச்சுப் பதவியை ஏற்கவிடமாட்டார்கள் என்பதை அமிர்தலிங்கம் மற்றும் இதர தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி உறுப்பினர்களுக்கு உணர்த்திற்று.

அதையடுத்து செப்ரெம்பர் 7ஆம், 8ஆம் திகதிகளில் புதிதாக இயற்றப்பட்ட, '1978 ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தை' நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தும் கோலாகலமான நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. இந்த அமர்வுக்கு தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினர் பங்குபற்றக்கூடாது என்று தமிழ் இளைஞர்கள் ஏற்கனவே கோரிக்கை விடுத்திருந்தார்கள்.

அமிர்தலிங்கத்தினால் இளைஞர்களின் எதிர்ப்பை சமாளிக்க முடியவில்லை. புதிய அரசியல் சட்டங்களை எதிர்த்து வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டன. மட்டக்களப்பில் பஸ் வண்டி ஒன்றிற்கு குண்டு வீசப்பட்டது. ஊர்காவற்றுறையில் ஒரு பஸ் தீமிட்டு எரிக்கப்பட்டது. மேலும் இன்னொரு பஸ் வண்டிக்குள் குண்டு வைத்து வெடிக்க வைத்தார்கள்.

இந்தக் கலவரங்கள் நடைபெற்ற பொழுது அரசாங்கம் மட்டக்களப்பைச் சேர்ந்த கவிஞர் காசி ஆனந்தனைக் கைது செய்தது. ஆனால் அந்த ஆர்ப்பாட்டங்களில் எல்லாம், தமிழீழ விடுதலைப் புலிகள் பங்குபற்றவில்லை.

அவர்கள் 'ஏயார் லங்கா' விமானத்திற்கு குண்டு வைக்கத் திட்டமிட்டார்கள். அக்காலத்தில் பாலஸ்தீனர்கள் பயணிகளின் விமானங்களுக்குக் குண்டு வைத்து வெடிக்க வைத்தபோது, அச்செயல் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்தது. அதே போலவே விடுதலைப் புலிகளும் செயற்படத் திட்டமிட்டார்கள். இந்தத் திட்டத்தை செயற்படுத்த நான்கு பேர் கொண்ட ஒரு குழுவை தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்திய குழு நியமித்தது. அந்தக் குழுவில் பிரபாகரன், உமாமகேஸ்வரன், பேபி சுப்பிரமணியம் மற்றும் இராகவன் ஆகிய நால்வரும் அங்கம் வகித்தார்கள்.

விமானத்தில் குண்டு வைத்து தகர்க்கும் வேலையை அரசியல் சட்டம் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்ட செப்ரெம்பர் 7ஆம் திகதி வைக்கத் தீர்மானித்தார்கள். இந்தக் குண்டு வைக்கும் பொறுப்பை பேபி சுப்பிரமணியம் என்று அழைக்கப்படும் இளங்குமரனிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் அவ்ரோ 748 (Avro– 748) என்ற விமானத்தில் பயணம் செய்வதற்கு இரண்டு ஆசனங்கள் பதிவு செய்து கொண்டார். பலாலியில் இருந்து புறப்பட்ட விமானத்தில் பேபி சுப்பிரமணியமும், இராகவனும் பயணம் செய்தார்கள். விமானம் இரத்மலானையை விமான நிலையத்தை வந்தடைந்தவுடன் அவர்கள் இருவருமே கடைசியாக இறங்கினார்கள். அவர்கள் இறங்குவதற்கு முன்னர் 'ரைம் பாம்' (Time bomb) வெடிப்பதற்கான ஒழுங்குகளைச் செய்துவிட்டு வெளியே வந்தார்கள். அவர்கள் வெளியில் வந்த சில நிமிடங்களில் அந்த அவ்ரோ விமானம் வெடித்துச் சிதறியது.



விமானம் வெடித்துச் சிதறியதை அடுத்து லண்டனிலிருந்து வெளிவந்த செய்தி அறிக்கை ஒன்று குண்டு வெடிப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள்தான் பொறுப்பு எனத் தெரிவித்தது.

இதற்கிடையில் தமிழ் இளைஞர்களின் கை ஓங்கி வருவதைக் கண்டு தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினர் கவலையடைந்தனர்.


அதேநேரம் விடுதலைப்புலி உறுப்பினர்களை பாலஸ்தீனத்திற்கு அனுப்பி பயிற்சிகளை வழங்கும் நடவடிக்கைகளை பிரபாகரன் மேற்கொண்டார்.

ஈரோஸ் இயக்கத்தினர் விடுதலைப் புலிகள் நால்வரை பாலஸ்தீனத்திற்கு அனுப்பி பயிற்சிகள் வழங்க ஏற்பாடுகள் செய்தார்கள். பிரபாகரன் அந்த நான்கு பேருக்குமான விமான பயணச்சீட்டு, கடவுச்சீட்டு ஆகியவற்றுக்கென ஒரு லட்சம் ரூபா வழங்கினார். ஈரோஸ் இயக்கத்தினர் அந்த நான்கு பேருக்கும் இந்தியா கடவுச்சீட்டு செய்தனர். சிரியா நாட்டின் அவர்களின் தொடர்புகள் மூலம் செல்வதற்கான வீசாக்களைப் பெற்றுக் கொண்டார்கள். அவ்வாறு பெறப்பட்ட கடவுச் சீட்டுக்களை அவர்களுக்கு வேண்டிய ஒருவரினூடாக லண்டனிலிருந்து அனுப்பி வைத்தார்கள். அதனைக் கொண்டு வர முன்வந்தவர், அந்த நான்கு கடவுச்சீட்டுக்களையும் தட்டச்சுக்குள் மறைத்து வைத்துக் கொண்டு வந்தார். ஆனால், அதை விமான நிலையத்தின் சுங்க அலுவலர்கள் அவர் கொண்டுவந்த தட்டச்சு இயந்திரத்தை சோதனை செய்யும் போது மறைத்துக்கொண்டு வந்த நான்கு கடவுச்சீட்டுக்களையும் கண்டுபிடித்து பறிமுதல் செய்தார்கள்.

அதையடுத்து, ஈரோஸ் இயக்கத்தினர் மேலும் நான்கு இந்திய கடவுச் சீட்டுக்களை இந்தியாவில் வைத்து தயாரித்தார்கள். இறுதியில் இருவரே பாலஸ்தீனத்திற்குச் செல்லக்கூடியதாக இருந்தது. அதில் ஒருவர் உமாம கேஸ்வரன் ஆகும். அவர் பாரசீகமூடாக பாலஸ்தீனத்திற்குச் சென்றார். பயிற்சிக்கு சென்ற உமா மகேஸ்வரன் மூன்று மாதத்திற்குள் வெறுங்கையுடன் திரும்பி வந்தார். அவர் திரும்பி வரும்போது பிரபாகரன் கேட்டிருந்த போராயுதங்கள் எதையுமே உமா மகேஸ்வரனால் கொண்டுவர முடியாமல் போய்விட்டது.

இதையடுத்து ஈரோசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பணம் சம்பந்தமாகப் பெரும் சச்சரவு மூண்டது. செலவு செய்த பணத்தைத் திரும்பத் தருமாறு பிரபாகரன் ஒற்றைக் காலில் நின்றார்.

ஆனால் சங்கர்ராஜி கொடுக்க மறுத்து விட்டார். இறுதியில் ஒரு முக்கிய அரசியல் தலைவர் ஒருவரின் தலையீட்டை அடுத்து 285 பிரித்தானிய பவுன்சை மட்டும் சங்கரர்ராஜி திரும்பக் கொடுத்தார்.



தொடரும்

# லங்கா ராணி

(கடந்தவார தொடர்ச்சி.....)

எதுவும் சொல்லமுடியாமற் கோபத்தால் முகம் முட்டிப்போயிருந்தது. சற்று நேரம் நின்றும் பதில் வராததால் குமார் கதவைத் திறந்துகொண்டு தேவன் காலையுணவு பரிமாறிய தளத்திற்கு இறங்கினான். அங்கே ஒருவரைப் பலர் சுற்றிவளைத்து ஆறுதல் சொல்வது போல் தெரிந்தது. அவரைப் பார்க்கும் போது அரசில் உயர் பதவியில் இருந்தவர் போல் தெரிந்தது. அங்கு நின்றவர்களில் ஒருவிடம் குமார் அணுகினான். தேவன் ஒரு பக்கத்தில் இருந்து ஒவ்வொருவராக ரொட்டிகளைக் கொடுத்து வந்திருக்கிறான். கடைசியில் ஐந்து ரொட்டிகள் இருந்தன. அதை முறைப்படி ஒரு குடும்பத்திற்கு கொடுத்திருக்கிறான். அந்தச் சமயம் அந்தப் பெரியவர் தனது இரும்புப் பெட்டியின் மேல் இருந்தவாறே தேவனை நோக்கி "தம்பி... அவங்க இந்த ஊர் உலகமெல்லாம் பட்டினி கிடந்து பழக்கப்பட்டவங்க. அவங்களுக்கு என்ன அவசரம்"...

ஏதோ பெரிய ஆலோசனை வழங்குபவர் போல கூறியிருக்கிறார். தேவன் இதைச் சற்றும் பொருட்படுத்தாமலே ரொட்டிகளை அந்தக் குடும்பத்திற்கு வழங்கிய பின் மெதுவாக அந்த பொலித்தீன் உறையைக் கீழே வைத்துவிட்டு பெரியவரை அணுகி அவரது மேற்சட்டையைப் பிடித்து தூக்கியிருக்கிறான். ஏதோ பெரியவர் எழும்புவதற்கு உதவி செய்கின்றான் என நினைத்தவர்கள் தேவன் மேலும் பெரியவரைத் தூக்கி தொப்பென்று கீழேதள்ளியதுதான் விடயத்தைப் புரிந்து கொண்டனர்.

பெரியவர் பதறத் தொடங்கினார். "இல்லைத்தம்பி தெரியாமற் சொல்லிப்போட்டன் ராத்திரியும் சாப்பிடல்ல"

"அது எங்களுக்குத் தெரியும்தானே உங்களுக்கு அடி காணாது முறையா கிடைத்திருந்தால் திருந்தியிருப்பீங்க என்று பலதையும் கூறிவிட்டுத் தேவன் மேலே சென்றிருக்கிறான்.

கொழும்பிலும் அதையடுத்த பகுதிகளிலும் உள்ள தமிழர்கள் பல்வேறு வாழ்க்கை நிலைகளைக் கொண்டவர்கள். சேரிப்புறங்களையும் காடையர்கள் விட்டு வைக்கவில்லை. அடுக்கியிருந்த சட்டிபானைகளையும் கொள்ளையடித்துவிட்டு அவர்களைத் துரத்திவிட்டனர். அவர்களும் வந்து அகதிகள் முகாமில் தஞ்சம் புகுந்து கொண்டனர். அங்கே எல்லோரும் ஒன்றாக இருந்தனர்.


அருளர்

குமார் திரும்பி வந்தபோது, தேவன் யாருடனும் போசாமல் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

"உன்னுடைய உணர்ச்சிகளை கண்மூடித்தனமாக வெளியிடுவதால் எந்தப் பிரச்சினையும் தீராது தேவன். இது அவ்வளவு சுலபமாக தீர்ந்து விடக்கூடிய பிரச்சினையல்ல. எதற்கும் பொறுமை வேண்டும். நீ அதைக்காதில் போடடுக்கொள்ளாது பேசாமல் வந்திருக்கவேண்டும்." என்று கூறி வேறு தொண்டர்களை உணவு பரிமாற அனுப்பிவைத்தான்.

மதிய நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. முத்தையா சாம்பார் செய்து முடித்திருந்தார். உறைப்பு கூடுதலாக இருந்தது. குமார் சாம்பாரை சுவை பார்த்து உறைப்பைக் குறைக்க வேண்டுமென்று கூறிவிட்டான். எப்படிக் குறைக்க வேண்டுமென்று பலர் ஆலோசனை கூறினர். தண்ணீர் ஊற்ற வேண்டுமென்றனர், கத்திரிக்காய் கரட்டில் வெட்டிப்போடவேண்டுமென்றனர், புளிவிட வேண்டுமென்றனர். பலத்த ஆலோசனையின் பின் முத்தையா சாம்பாரைத் தெளித்து குழம்பை வேறொரு பாத்திரத்தில் அகப்பையால் அள்ளிவிட்டுக் கொண்டிருந்தார்.

"இல்லைத்தம்பி... நான் இது கடைத்தூளாக்குமெண்டு அள்ளிப்போட்டிட்டன். இவங்க வெறும் மிளகாயை இடித்து வைத்திருக்கிறாங்களெண்டு யார் கண்டது." என்று குமாரைப் பார்த்துக்கொண்டு கூறி




னார். இந்தப் பிரச்சினைகளுக்கு மத்தியில் அங்கு நின்று கொண்டிருந்த இளைஞர்களுக்கு தனிநாட்டுப்போராட்டம் பற்றி தனது கருத்துக்களை கூறிக்கொண்டிருந்தார். இரும்புக் கதவைப் பிடித்து நின்ற இளைஞன் பல குறுக்கு கேள்விகளைப் போட்டு முத்தையாவை ஆவேசத்துடன் போர் விவகாரங்களைப் பேச வைத்திருந்தான்.

"தம்பி முதலில் பனை மரங்களை எல்லாம் தறித்து றோட்டுக்கு குறுக்கை போடு. ஒரு வாகனமும் ஓடக்கூடாது. பாப்பம் எத்தனை நாளைக்கு நிண்டு பிடிக்கிறாங்களெண்டு".

தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவு கொடுக்கத்தொடங்கிய நாள்முதல் முத்தையா இதைப்பற்றி சிந்தித்ததுண்டு.

"முத்தையா அண்ணை இப்ப பீரங்கி வாகனம் எல்லாம் கொண்டுபோய் வச்சிருக்கிறாங்க. தூரத்தில் இருந்து குண்டு குண்டாய்ப் போடுவான். போவோரையும் வருவோரையும் சுட்டுத் தள்ளுவான்கள். விமானத்தில இருந்து குண்டு போடுவாங்க.

போடுவாங்க பாப்பம் எத்தனை நாளைக்கு? அப்படி குண்டுகள் போட்டால் கிடங்குகளை வெட்டி ஒளிய வேண்டியதுதானே. இந்த துவக்குகளை பீரங்கிகளைக் காட்டி ஆட்களை வெருட்டி அடிக்கிற காலம் போயிட்டுது. அது ஒருகாலத்தில் வெள்ளைக்காறன் செய்தான். இப்ப வேறகாலம்"

கதவு தட்டப்பட்டதும் கதவைத் திறந்து கொண்டு ராணி உள்ளே நுழைந்தாள்.

"பிள்ளை.. இங்கபார் பிள்ளை உறைப்பு கூடிப்போச்சுதெண்டு நிக்கிறாங்கள். இங்க ஒருக்காப்பார் என்னெண்டு நான் சொல்றன் பாணோட சாப்பிட்டால் தெரியாதெண்டு"

ராணி கையை நீட்டவே முத்தையா அகப்பையால் கொஞ்சம் சாம்பாரை உள்ளங்கையில் விட்டார். ராணி நாக்கில் அதை தடவிப பார்த்தாள். முகத்தை சுழித்துக்கொண்டாள். கண்கள் கலங்கின. முத்தையா எந்த மறுமொழியையும் எதிர்பார்க்காமல் தொடர்ந்து சாம்பாரைத் தெளித்து வேறு பாத்திரத்தில் ஊற்றிக் கொண்டிருந்தார்.

"கொஞ்சம் தண்ணீர் விட்டுக் கொதிக்க வைச்சால் எல்லாம் சரியாய்ப்போய்விடும்" என்று கூறிக்கொண்டார்.

கதவுக்கு வெளியில் பெல்பொட்டம் அணிந்த மங்கை நின்று கொண்டிருந்தாள்.

குமாரைப்பார்த்து ராணி "கிளிக்கும், நாய்க்கும் சாப்பாடாம்" என்றாள்.

"என்னவேணும் பாணா?"

ராணி வெளியில தலையை நீட்டி கதைத்து விட்டு மீண்டும் கூறினாள்

"பாண் தின்னாதாம் கிளிக்கு வாழைப் பழமும் நாய்க்கு பிஸ்கட்டும்இருக்கா?"

"கீழே இருக்கவேணும் என்று கூறி உணவுப்பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும் அறைக்கு அழைத்துச் சென்றான். அங்கு குழந்தைகளுக்கு வைக்கப்பட்டிருக்கும் பிஸ்கெட் பெட்டியை உடைத்து சில பிஸ்கட்டும் ஒரு வாழைப்பழமும் கொடுத்து அனுப்பினான்.

"தங்கச்சி வேணுமெண்டா பிறகும் வாங்கோ" கதவை பிடித்துக் கொண்டு நின்ற இளைஞன் கூறி அனுப்பினான். பின்பு குமாரிடம் "குமார் ஆச்சி உன்னோட கதைக்க வேணுமாம் என்னெண்டுகேளு"

குமார் வெளியே வந்ததும் கிழவி தன்னை அறிமுகம் செய்து கொண்டாள்." தம்பி.. இந்தா இதில இரண்டு விலாசம் இருக்கு கப்டனிட்டக் கொடுத்து நான் சுகமாயிருக்கிறனெண்டு தந்தியில் செய்தி கொடுக்கச் சொல்லு"

அந்த முகவரிகளை குமார் வாங்கிப் பார்த்தான். ஒன்று அமெரிக்கா, ஒன்று லண்டன். இருவரும் டாக்டர்கள்.

"ஆச்சி ஒரு செய்தியும் இங்க இருந்து அனுப்ப ஏலாது யாழ்ப்பாணம் போன பின்பு அனுப்பலாம் எண்டாலும் கப்டனோட கதைச்சுப் பாக்கிறன்."

இந்நேரத்தில் சரவணனும் ஒரு சோடி கையுறைகளுடன் வந்து சேர்ந்தான்.

"ஆச்சி சுகமாயிருக்கிறீங்களா?"

"ஓம்... தம்பி" பாட்டி தலையை அசைத்தாள். ஆச்சியுடன் உதவிக்கு ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

ஆச்சிக்கு இரண்டு பிள்ளைகள். இருவரும் படித்து உயர் பதவிகளில் இருந்தனர். கொழும்பை அடுத்த இரத்மலானையில் பெரிய வீடு. பிள்ளைகள் மாதா மாதம் பணம் அனுப்புவார்கள். பக்கத்து வீடுகளில் உறவினர்களும் இருந்தார்கள். கலவரம் தொடங்கியதும் உறவினர்கள் பலர் அகதி முகாமிற்கு போய்விட்டனர். பாட்டியையும் வந்து கூப்பிட்டனர். பாட்டி அசைமறுத்துவிட்டாள். "நான் இந்த இரத்மலானையில் தான் பிறந்து வளர்ந்தது எனக்கு யாழ்ப்பாணத்தில் ஒருவரையும் தெரியாது. நான் செத்தாலும் இங்கேதான் சாவன்." என்று அடம் பிடித்தாள்.

பாட்டியும் வேலைக்காரனும் தான் வீட்டில். பாட்டியின் வீட்டில் ஏராளமான பொருட்கள் இருந்தன. விலையுயர்ந்த நகைகள், சிலைகள், தளபாடங்கள் வீட்டை நிறைத்திருந்தன. கலவரம் தொடங்கி இரத்மலானையில் காடையர்களின் அட்டகாசம் மோசமடைந்திருந்தது. பாட்டியின் வீடு தாக்கப்படுவது நிச்சயமாகிவிட்டது. தயாராக வேலைக்காரன் வீட்டின் பின் வளவில் வைத்திருந்த பீப்பாவில் பாட்டியை மறைத்துவிட்டு தானும் காடையர் போல் நடித்துக்கொண்டு அகதிகள் முகாமிற்கு வந்துசேர்ந்தான். வரும் வழியில் தமிழர்களை துண்டு துண்டாக வெட்டி தெருநெடுகிலும் போட்டிருந்தார்கள். எங்கும் ஒரே ஓலம். நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. அடுத்தநாள் ஊரடங்குச் சட்டம் அமுலாகி இருந்தது. பாட்டியின் நிலை பற்றி வேலைக்காரன் அகதிகள் முகாமில் செய்தி கொடுத்திருந்தான். சரவணன் பொலிஸ் பாதுகாப்புடன் வேலைக்காரனையும் கூட்டிக் கொண்டு பாட்டி இருந்த இடத்திற்குப் போனான். வீடு வெறிச்சோடிப்போய்க் கிடந்தது. தூக்கிக்கொண்டுபோகக் கூடியதைத் தூக்கிக்கொண்டு மிகுதிக்கு நெருப்பு வைத்திருந்தார்கள். பாட்டியைத் தார்ப்பீப்பாவில் இருந்து சரவணனும் வேலைக்காரனுமாகத் தூக்கி அகதிகள் முகாமிற்கு கொண்டு வந்தனர். அங்கு டாக்டர்கள் சிகிச்சை அளித்தனர்.

"ஆச்சி நீங்க போங்க நாங்க கப்டனோட கதைச்சுப் பார்க்கிறம்என்று கூறிவிட்டு குமாரிடம் "ஒரு சோடிதான் கிடைத்தது எல்லா இடமும் தேடிப்பார்த்தாயிற்று" என்றான் சரவணன்.

கழிவிடங்களைத் துப்புரவு செய்யும் பணிக்கு யாரையும் தேடிப்பிடிக்கஅதிகம் முயலவில்லை. இந்த வேலைகளைச் செய்யக்கூடியவர்களைக் கப்பலில் தேடிப்பிடிக்கக்கூடியதாக இருந்தும் அதை வேறு யாரிடமும் ஒப்படைப்பது சரியெனப்படவில்லை. வளாக மாணவர்களை உதவிக்கு அழைத்துப்பார்த்தான்.

"ஏன் நாங்கள் செய்யவேண்டும்? நீ செய்தாலென்ன?" என்று வினவினார்கள்.

"சரி நான்தான் செய்யப்போகிறேன்" எனகூறி வேறு யாரிடமும் ஒப்படைக்கும் முயற்சியைக் கைவிட்டான். இதற்கு குமாரையும் அழைத்துக்கொண்டான். அந்தக் கையுறை ஒருபக்கம் தோலாலும் மறுபக்கம் தடித்த புடவையாலும் செய்யப்பட்டிருந்தது. இதனைக் கப்பலில் பல இடங்களில் தேடியபின் கப்பல் சிப்பந்தி ஒருவன் சரவணனிடம் கொடுத்திருந்தான்.

"சாப்பாட்டிற்கு எல்லோரையும் கீழ்ப்பகுதிக்கு அனுப்பியபின் இதைச்செய்வோம்" என்று கூறி சரவணன் சமையலறையில் நுழைந்தான்.

நேரம் ஒருமணியாகிவிட்டது.

"தம்பிமாரே பீங்கான்களை எடுத்துக் கழுவுங்கோ, சாப்பாட்டுவேலை முடிந்துவிட்டது" முத்தையா சாம்பாரை அகப்பையால் கிண்டிய வண்ணம் தொடர்ந்து கதைத்துக்கொண்டிருந்தார்.

கதவை மூடிநின்ற இளைஞன் "சண்டைக்கு போக இயலாது முத்தையாண்ண, அவங்க பத்துப்பேர் நாங்க நாலு பேர். அதுபோல் உயிர்களைக்கொலை செய்யக்கூடாது. அவங்க செய்யிறாங்க எண்டு நாங்களும் செய்யவேண்டுமா?"

(தொடர்ச்சி 19 இல்......)

1977 ஆம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தின் போது கொழும்பில் இருந்து 1200 தமிழ் அகதிகளைச் சுமந்தவாறு காங்கேசன்துறை வந்து சேர்ந்தது "லங்காராணிக்" கப்பல். அந்தக் கப்பலில் வந்தவர்களை வைத்தும் அன்றைய அரசியல் நிலவரத்தைப் பின்னணியாக வைத்தும் "லங்கா ராணி" என்ற நூலை அருளர் எழுதியுள்ளார். "தினச்செய்தி" வாசகர்களுக்கு அருளரின் நூலை வாரா வாரம் தரத் திட்டமிட்டுள்ளோம்.

# சிறுவர்களின் வாழ்விற்கு நல்லூரில் ஒரு எஸ்.ஓ.எஸ்

உலகின் 133 நாடுகளில் அமைந்திருக்கும் எஸ்.ஓ.எஸ். நிறுவனங்களின் மூலம் 670,994 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் நன்மை பெற்று வருகின்றனர்.

இலங்கையில் 1981ஆம் ஆண்டு பிரியந்தலையில் எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமம் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் நுவரெலியா, காலி, அனுராதபுரம், மொனராகலை ஆகிய பிரதேசங்களில் இதன் செயற்பாடுகள் தொடங்கப்பட்டன. 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 05ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நல்லூர் பிரதேசத்தில் உள்ள நாயன்மார்கட்டு என்னும் இடத்தில் 2.5 ஏக்கர் நிலப்பரப்பில் எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமம் அமைந்துள்ளது.

இங்கு அழகான அதேசமயம் அளவான 11 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 11 வீடுகளுக்கும் 11 நட்சத்திரங்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு வீட்டிலும் 10 பிள்ளைகளும் அவர்களை அங்கு வைத்து பராமரிப்பதற்கு ஒரு அம்மாவும் உள்ளனர்.

இந்த அம்மாக்கள் இங்கு பணிக்கு சேர்ந்து கொள்ளும் போது 28 வயதிலிருந்து 45 வயது உடையவர்களாக இருத்தல் வேண்டும் என்பது அவசியம். நல்ல தேகாரோக்கியம் உடையவர்களாகவும், குறைந்த பட்சம் க.பொ.த.சாதாரண தரம் சித்தியடைந்தவராகவும், வீட்டு வேலைகள் நன்றாகத் தெரிந்தவராக இருப்பதுடன் சிறுவர்களை அன்புடனும், ஆதரவுடனும் அரவணைப்பவராகவும் இருத்தல் வேண்டும். இவர்கள் திருமணம் செய்யதாவர்களாக, இங்கேயே தங்குபவர்களாகவும் இருத்தல் கட்டாயமாகும். இவர்களுக்குப் போதிய சம்பளம் கொடுக்கப்படுகிறது. அத்துடன் தங்குமிட வசதி, உணவு போன்றவையும் வழங்கப்படுவதுடன் ஓய்வுபெறும் காலத்தில் இவர்களுக்கான மாதாந்த ஓய்வூதியமும், இவர்களைப் பராமரிப்பதற்காகப் பெண் ஒருவரும் நியமிக்கப்படுவார். அத்துடன் சேமலாபநிதி, மருத்துவபீட வசதி உட்பட சகல வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. வீடுகளிலும் ஒரே சமையல் என்பதில்லை. ஒவ்வொரு வீட்டிலும் அவரவர் தமக்கு விரும்பிய உணவுகளைச் சமைத்து சாப்பிட்டுக கொள்ள முடியும்.

நீதிமன்றங்கள் மற்றும் நன்நடத்தைத் திணைக்களங்கள் மூலமே சிறுவர்கள் இங்கு இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். எந்தவிதப் பயமுமின்றி மிகவும் பாதுகாப்பான சூழலில் சிறுவர்கள் எஸ்.ஓ.எஸ் கிராமத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் சிறுவர் கிராமம் அப்போதைய சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகாரங்கள் அமைச்சர் திஸ்ஸ கரலியத்த மற்றும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோரால் சர்வதேச எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமத் தலைவர் சித்தார்த்த கோலினி அவர்களின் ஆசியுடன் திறந்து வைக்கப்பட்டது. இக் கிராமத்தின் தேசிய இயக்குனராக ஆனந்த பீ.கருணரட்னாவும், உதவி இயக்குனராக திவாகர் ரட்ணதுரையும் உள்ளார்கள். பு.செல்வராஜா நாயன்மார்கட்டு சிறுவர் கிராமத்துக்குப் பொறுப்பாகவுள்ளார்.



இங்குள்ள சிறுவர்களுக்கான உணவு, தேநீர், உடுபிடவை, தங்குமிடம், கல்வி என சகலதுமே இலவசமாக வழங்கப்படுகின்றன. பாலர் முதல் 19 வயதிலான பிள்ளைகள் இங்குள்ளார்கள். பிள்ளைகள் பாடசாலை சென்று வர எஸ்.ஓ.எஸ் கிராமத்திலுள்ள வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. சில ஆண் பிள்ளைகளும், பெண்பிள்ளைகளும் துவிச்சக்கரவண்டியிலும் வருகின்றார்கள்.

35 பணியாளர்கள் இங்கு பணியில் உள்ளனர். எல்லோரும் மிகவும் சுறுசுறுப்பாகவும், கலகலப்பாகவும் செயற்படுவதைப் பார்க்க முடிகிறது.

14 வயதுக்கு மேற்பட்ட ஆண் சிறுவர்கள் வயது வந்தவர்களாகக் கருதப்பட்டுத் தனியான விருத்தியில் தங்க வைக்கப்படுகின்றார்கள்.

வர்த்தக வங்கியினால் இக் கிராமத்துக்கு 10 கணனி அறை குளிரூடப்பட்டுள்ளது. பிள்ளைகள் தமக்கான கணனிப் பயிற்சியை இங்கே பெற்றுக்கொள்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. வைத்தியக கலாநிதி ஒருவர் மாதத்துக்கொரு தடவை இங்கு விஜயம் மேற்கொண்டு சகலரையும் பரிசோதனைக்குட்படுத்தி மருந்துகள் வழங்குகின்றார்.



தாயின் பாசத்துக்காகத் துடிக்கும் சிறுபிள்ளைகளின் தாகத்தைப் போக்கும் வகையில் இங்குள்ள 11 வீடுகளில் உள்ள அம்மாக்களும் பிள்ளையின் மீது அன்பைக் கொட்டி வளர்ப்பதைக் காண முடிகிறது. அப்பிள்கைளும் அம்மாக்கள் மீது அளவற்ற பாசம் கொண்டிருப்பதையும் பார்க்க முடிகிறது.

பல முன்னணிப் பாடசாலைகளில் எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமப் பிள்ளைகள் கல்வி கற்கின்றனர்.

பல்வேறுபட்ட காரணங்களினால் கைவிடப்பட்ட சிறுவர்களும், நடந்து முடிந்த உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட பல பிள்ளைகளும் இச் சிறுவர் கிராமத்தில் தங்கி வாழ்கின்றனர். சிறுபிள்ளைகளாக வந்த சிலர் தற்போது பெரியவர்களாகி க.பொ.த உயர்தரம் படித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆண் பிள்ளைகள், பெண் பிள்ளைகள் என இங்கு தங்கியிருந்தாலும் எல்லோரும் சகோதரத்துவத்துடன் பழகி வாழ்வதைப் பார்க்கும்போது மகிழ்ச்சியாக உள்ளது.

யாழ் எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமக் கட்டடப்பணி 2012 ஆம் ஆண்டு மாசி மாதம் ஆரம்பமானது. பிலியந்தலை எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமத்தின் முன்னாள் திட்டமிடல் பணிப்பாளரும், தற்போதைய சர்வதேச எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமத்தின் தலைவருமான சித்தார்த்த கோல், முப்பது வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் சிறுவர் கிராமம் ஒன்றை அமைப்பதற்காக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டார். ஆனால், அப்போதைய சூழ்நிலை காரணமாகவும், நாட்டின் நிலைமை சரியில்லாமையினாலும் அது முடியாமற் போனது.

இங்குள்ள பிள்ளைகள் தாய் அல்லது தந்தை அல்லது இருவரையுமே இழந்தவர்களாவர். இவர்களுக்குப் பெற்றோரின் பாசம் என்பது தெரியாது. பாசத்துக்காகவும், பரிவுக்காகவும் ஏங்குபவர்கள் இவர்கள். இவர்களது ஏக்கத்துக்குப் புத்துயிர் அளிப்பதுபோல இங்குள்ள அம்மாமார்கள் இப் பிள்ளைகளின் மீது பாசத்தைக் கொட்டி வளர்ப்பதினால், பிள்ளைகளும் அவர்களையே தமது அம்மாக்களாகப் பார்க்கின்றனர். தாயின் பாசம் மேலானது என்பார்கள். அந்த நேசத்தையும், உறவையும் எஸ்.ஓ.எஸ் கிராமத்தில் காண முடிகிறது.

இங்குள்ள அம்மாமார் ஒவ்வொருவருக்கும் 10 பிள்ளைகள் உள்ளார்கள். இவர்கள் வயிற்றில் சுமந்து பெற்றெடுக்காத பிள்ளைகள் என்றாலும் இப் பிள்ளைகள் இவர்களையே அம்மா என்று அன்புடன் அழைக்கும்போது இந்த அம்மாமார் தங்களையே மறந்து அப்பிள்ளைகளை ஓடி வந்து கட்டிஅணைத்துக் கொள்கின்றார்கள். பிள்ளைகளுக்கு அம்மாமார் அவர்களே. அம்மாமார்களுக்கும் பிள்ளைகள் இவர்களே. சிறு சிறு பிள்ளைகளுக்கு சோறு ஊட்டி அன்புடன் பராமரிக்கும் இந்த அம்மாமார்களைப் பார்க்கும்போது அன்னையின் வடிவம் அங்கே தெரிகிறது.

11 வீடுகளிலும் 110 பிள்ளைகளும், 11 அம்மாமார்களும் மிகவும் சந்தோஷமாக தாயும், பிள்ளைகளுமாக இங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமம் மிகவும் அமைதியாகவும், அழகாகவும் காட்சியளிக்கிறது. கராத்தே போட்டியிலும் இச் சிறுவர் கிராமத்தில் பிள்ளைகள் சாதனை படைத்துள்ளார்கள். புகழ் பூத்த கராத்தே பயிற்றுவிப்பாளரின் பயிற்சியின் கீழ் இம் மாணவ மாணவிகள் போட்டியின்போது பரிசினை வென்றெடுத்துள்ளமை பாராட்டுக்குரியது.

எல்லா அம்மாமாரும் பொறுமையுடனும், அன்புடனும், ஆதரவுடனும், அரவணைப்புடனும் செயற்பட்டுப் பிள்ளைகளுடன் அன்னியோன்யமாகப் பழகி வருவதைப் பார்க்கும்போது பரவசம் ஏற்படுகிறது.

எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமம் சமூக சேவை அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டதாகும். பெற்றோரை இழந்த பிள்ளைகளை வைத்து பராமரிப்பது மட்டுமல்ல, பெற்றோர்களினால் கைவிடப்படும் நிலையில் அவதானத்துக்குட்பட்ட பிள்ளைகளுக்கு அவர்களின் இயற்கையான குடும்பத்திலேயே வளர அக் குடும்பங்களுக்கு ஆதரவு வழங்குவதும் இச் சிறுவர் கிராமத்தின் செயற்பாடாகும்.

அனைத்து சிறுவர்களுக்கும் அன்பான ஒரு இல்லமாக எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமம் விளங்குகிறது. ஒவ்வொரு இல்லத்திலும் இருக்கும் அம்மாமார் மற்றும் பிள்ளைகளோடு இங்கு பணி புரியும் உத்தியோகத்தர்கள் கருணைமிக்கவர்களாகவே காணப்படுகின்றார்கள். இவர்களின் பணி போற்றுதற்குரியது. இங்கு தங்கி வாழும் பிள்ளைகளுக்கு எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமம் ஒரு வரப்பிரசாதமாகுமே என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய மறுக்க முடியாத உண்மை.

**என்.கே.குலசிங்கம்**



# அமெரிக்காவில் சேர். பொன். இராமநாதன்

ஆரம்பத்திலேயே அமெரிக்க மக்கள் காட்டிய அன்பு வெள்ளத்தில் இராமநாதன் திக்குமுக்காடிப் போனார். ஒரு சணம் பேசுவதற்கு வார்த்தை வராது தடுமாறினார். மக்கள் காட்டிய அன்பு அவரை திக்குமுக்காடச் செய்தது.

அதையடுத்து அவர் சுதாகரித்துக் கொண்டு மெதுவாகப் பேசத் தொடங்கினார். ஒருசில சணங்களில் அவர் தன்னிலையடைந்தார். வார்த்தைகள் சரளமாக வெளிவரத் தொடங்கின. அவர் "எங்கள் ஆண்டவன் ஓர் தீச்சுவாலை" என்ற தலைப்பில் பேசத்தொடங்கினார். அவருடைய ஒன்றரை மணித்தியாலப் பேச்சு மக்களை அப்படியே கட்டிப்போட்டது.

அவ்வாறான ஒரு பிரசங்கத்தை தாங்கள் இதுவரை கேட்கவில்லை என அனைவரும் பின்னர் குறிப்பிட்டார்கள். அங்கிருந்த அனைவரும் அவரைச் சுற்றிச் சூழ்ந்து நின்று தங்கள் நன்றியைத் தெரிவித்தனர்.

மக்களினால் சூழப்பட்ட இராமநாதனை டாக்டர் பில்மோர் மூர், "எங்களுடைய மதிப்புக்குரிய விருந்தினருக்கு இரவுப் பேசனம் அருந்த நேரமாகிவிட்டது," என்று கூறி அவர்கள் மத்தியிலிருந்து பிரித்து அவர் தங்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றார். அதையடுத்தே மக்கள் அங்கிருந்து வெளியேறினார்கள். டாக்டரும் ஒரு சிலரும் இராமநாதனை அவரது தங்குமிடத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

இராமநாதன் கிறீன்ஏக்கரில் ஐந்து வாரங்கள் தங்கியிருந்து, 50 இற்கும் மேற்பட்ட பிரசங்கங்களைச் செய்தார். அவருடைய பிரசங்கங்கள் எல்லாம் ஆண்டவனுடைய உண்மைப் பாதையைக் காட்டுவதாக அமைந்திருந்தது.

கிறீன்ஏக்கரை அடுத்து இராமநாதன் பொஸ்டனுக்கும், நியூ யோர்க்கும் சென்று அங்கே நிறைய பிரசங்கங்கள் செய்தார்.

பொஸ்டனில் யூதர்களின் சியோனிஸ்ஸ அமைப்பின் தலைவரும், உறுப்பினர்களும் இராமநாதனை அழைத்து அவரை சில வார்த்தைகள் பேசுமாறு மன்றாடினார்கள். அவர் பேசத் தொடங்கியதும் அங்கு பூரண அமைதி நிலவிற்று. அவருடைய கண்கள் ஒளிமயமாகத் திகழ்ந்தது. அவருடைய முகம் அன்று மலர்ந்த தாமரை போல மலர்ந்திருந்தது. அவருடைய பேச்சு நிறைவடைந்ததும், கூட்டத்திலிருந்த அனைவரும் எழுந்து நின்று கரகோசம் எழுப்பத் தொடங்கினார்கள். மறுநாள் பொஸ்டனிலுள்ள பத்திரிகைகளில் எல்லாம் 'பிரசங்கி இராமநாதன்' எனக் குறிப்பிட்டு அவருடைய பேச்சை வானளவிற்கு புகழ்ந்து எழுதினார்கள்.

அதையடுத்து நியூ யோர்க்கிலுள்ள பூறுக்ளின் கலை விஞ்ஞான நிலையத்தில் 1905/1906 ஆம் ஆண்டு ஆரம்பமான கல்வியாண்டின் முதல் பிரசங்கத்தைச் செய்ய இராமநாதன் அழைக்கப்பட்டார். எதிர்பார்க்காத அளவிற்கு நிறையப்பேர் அவருடைய பேச்சைக் கேட்க குழுமியிருந்தார்கள்.



பேராசிரியர் பிறாங்கிலீன் டபிள்யூ கூப்பர், இராமநாதனை சபையினரிற்கு அறிமுகப்படுத்தி வைத்து, மேலைத்தேசம், கீழைத்தேசத்திலிருந்து நிறைய விடயங்களைக் கற்றுவருவதாகக் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் "இன்று எம்மத்தியில் தாய்நாடு என்று கருதப்படும் இந்தியா/ இலங்கை ஆகிய தேசத்திலிருந்து சிறந்த கீழைத்தேச கல்விமானும், நாட்டுப்பற்றாளரும், மிகவும் பக்தி பூர்வமானவருமான பொன்னம்பலம் இராமநாதன் எம்மத்தியில் வந்துள்ளார். அவர் கிழக்கு/ மேற்கு சம்பந்தப்பட்ட நிலைப்பாடுகள் பற்றிப் பேசினார். அது ஒரு நீண்ட பிரசங்கம். எல்லா அமெரிக்கர்களும் அப்பிரசங்கத்தை ஒரு பொக்கிஷமாகக் கருதினார்கள். அப்பிரசங்கம் உலக மதங்களின் உண்மைத் தன்மையையும், அவருடைய கல்வியின் திறமையையும் வெளிக்காட்டுவதாக அமைந்திருந்தது. அவரது அந்தப் பிரசங்கம் அமெரிக்காவிலிருந்து வெளிவரும் சகல பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டு, அனைவராலும் பாராட்டப்பட்டதாகும்.

அவர் நியூ யோர்க்கில் தங்கியிருந்த பொழுது கொலம்பியா பல்கலைக்கழகத்திற்குச் சென்று அங்குள்ள கல்வி முறைகளை ஆராய்ந்தார். அவர் எங்கு எல்லாம் சென்றாரோ அங்கு எல்லாம் பெரிய மக்கள் கூட்டம் நிறைந்திருந்தது. அவர் பேசிய சபைகளில் எல்லாம் சிறந்த கல்விமான்கள் நிறைந்த கூட்டமாகவே நிரம்பிவழிந்தது.

ஒரு கல்லூரியில் அவர் பேசிமுடித்ததை அடுத்து அந்தக் கல்லூரி அதிபர் "இவ்வளவு நேரமும் எங்கள் மத்தியில் பேசியவரின் பெயர் உங்களுக்குத் தெரியுமா?" எனக் கேட்டார். அதற்கு அந்த மாணவர்களால் இராமநாதனின் பெயரைச் சரியாகக் கூறமுடியாமல் இருந்தது. ஏனென்றால் அவரது பெயரை அவர்களால் உச்சரிக்க முடியாதிருந்தது. அதையடுத்து அந்தப் பாடசாலை அதிபர் இராமநாதனின் எழுத்துக்களை ஒவ்வொன்றாக உச்சரித்து அவரது பெயரை ஒரு பாடலாக பாடுமாறு அங்கிருந்த சங்கீத ஆசிரியரைக் கேட்டுக்கொண்டார்.

அதையடுத்து அக்கல்லூரி மாணவர்கள் தங்கள் பாடசாலைக் கீதத்தைப் பாடி, இறுதியில் 'இரா–ம–நா–தன், இரா–ம–நா–தன், இரா–ம–நா–தன்' என்று கோஷம் எழுப்பிப் பாடினார்கள்.

தொடர்ந்து அவர் பொஸ்டனிலுள்ள ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் பிரசங்கம் செய்தார். அதையடுத்து பில்லா டெல்பியாவுக்குச் சென்றார்.

தொடர்ந்து பால்டிமோரிலுள்ள யோன் ஷொப்பிங்ஸ் பல்கலைக்கழகத்திற்குச் சென்றார். மோல்ரிமோரில் பல இடங்களில் பிரசங்கம் செய்ததை அடுத்து அமெரிக்காவின் நிர்வாகத் தலைநகரான வாஷிங்டனுக்குச் சென்றார். அங்கே அவர் ஐந்து வாரங்கள் தங்கினார்.

பிரபலம் வாய்ந்த அமெரிக்கத் தலைவர்களுக்கு வாஷிங்டனில் நான்கு பிரசங்கங்களைச் செய்தார். அதைவிட பல பிரபலமான அமெரிக்கத் தலைவர்கள் இராமநாதனை தனித்தனியாக சந்தித்து ஆண்டவன் சம்பந்தமாகவும், மதம் சம்பந்தமாகவும் அவர்களிற்கு இருந்த ஐயப்பாடுகளை இராமநாதனிடம் கூறி தெளிவு பெற்றனர்.

வாஷிங்டனில் அவர் இருந்த போது "காங்கிரஸ்" என்று அழைக்கப்படும் அமெரிக்க நாடாளுமன்றத்தின் பிரதிநிதித்துவ சபையின் கோலகலமான ஆரம்ப வைபவத்தில் அவர் அவருக்கு என்று விசேடமாக ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்திருந்து பார்வையிட்டார்.

அதையடுத்து அந்தக் "காங்கிரஸ்" கட்டடத்தின் முக்கியமான இடங்களை எல்லாம் இராமநாதனுக்கு அவர்கள் சுற்றிக்காட்டினார்கள். அங்கிருந்த "காங்கிரஸ்" நூலகத்திற்குச் சென்ற போது, அந்த அழகான நூலகத்தின் நூலகப் பொறுப்பாளர் ஒரு கட்டுப் புத்தகங்களை பரிசீலனை செய்யுமாறு இராமநாதனிடம் கொண்டுவந்து காட்டினார்.

அந்த நூலகப் பொறுப்பாளர் காட்டிய அத்தனை புத்தகங்களுமே இராமநாதனால் இலங்கையில் எழுதப்பட்ட சட்ட அறிக்கைகள் ஆகும். அதையடுத்து இராமநாதனிடம் அந்த நூலகப் பொறுப்பாளர், "நீங்கள் எழுதிய ஏனைய பிரதிகளையும் எங்களுக்கு அனுப்பிவையுங்கள்," என்று கேட்டுக் கொண்டார். இலங்கை திரும்பியதும் அவற்றை அனுப்பி வைப்பதாக இராமநாதன் உறுதியளித்தார்.

வாஷிங்டனை அடுத்து இத்தாக்காவிலுள்ள கோர்ணல் பல்கலைக் கழகத்திற்குச் சென்று சொற்பொழிவாற்றினார். அங்கு மண்டபம் நிறைந்து வழிந்த கேட்போர் மக்கள் மத்தியில் அவர் கிழக்கு/ மேற்கு நாகரீகம் பற்றிப் பேசினார்.

இராமநாதன் அமெரிக்காவிலுள்ள சகல முக்கிய நகரங்களுக்கும் சென்று, அங்குள்ள சகல பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும், பாடசாலைகளிலும் மற்றும் தேவாலயங்களிலும் சொற்பொழிவாற்றினார்.

அங்குள்ள சிலர் "இந்த பேச்சாளரின் பேச்சு எமது மனதை உசுப்பிவிட்டது. நாங்கள் பரிசுத்தமான பைபிளைப் படித்தோம். ஆனால் அது எங்களுக்கு ...ந முன்பு தரவில்லை. ...களால் முன்பு புரிந்து கொள்ள முடியாதிருந்தது. ஆனால் இராமநாதனின் சொற்பொழிவு பைபிலுள்ள வார்த்தைகளுக்கு புதிய அர்த்தங்களையும் தந்துள்ளது. எனவே, இனி எமக்கு பைபிள் புதிய அர்த்தங்களையும், வழியையும் காட்டும் புனிதநூலாக மாறிவிட்டது," என்று கூறினார்கள்.


ஒருவருட காலம் அமெரிக்காவில் இராமநாதன் தங்கியிருந்தார். அவர் அங்கு தங்கியிருந்த காலம் முழுவதும் ஓய்வின்றி பிரசங்கங்கள் செய்தும், மக்களின் மத ஐயங்களை போக்கியும் வந்தார். அமெரிக்கா மக்கள் பலரும் இராமநாதனின் காலடியில் தங்கியிருந்து "உண்மை, ஒளி" பற்றியும் தெரிந்து கொண்டார்கள்.

அமெரிக்காவில் அவர் தங்கியிருந்த பொழுது அவரது சேவைக்கு பிரதியுபகாரமாக பெருந்தொகையான பணத்தைக் கொடுக்க முன்வந்தார்கள். ஆனால், பெருமகன் இராமநாதனோ, அமெரிக்க மக்கள் கொடுக்க முன்வந்த பெருந்தொகையான பணத்தை ஏற்க மறுத்துவிட்டார்.

அமெரிக்காவிற்கு அவர் பணம் சேகரிக்கும் நோக்குடன் செல்லவில்லை என எடுத்துக் காட்டினர். மதம் சம்பந்தப்பட்ட தனது கருத்துக்களை எடுத்துக் கூறவே அவர் அமெரிக்கா சென்றார். அவருடைய பேச்சுக்கள் ஒருவரும் முழுவது அமெரிக்க பத்திரிகைகளில் வெளிவந்த போது தனது நோக்கம் நிறைவேறிவிட்டதாக உணர்ந்தார்.

ஏப்ரல் மாதம் 1906ஆம் ஆண்டு அமெரிக்க மக்களின் அன்பையும், ஆதரவையும், நல்லெண்ணத்தையும், பாராட்டுகளையும் ஏற்றுக்கொண்டு அமெரிக்க கரையை விட்டு வெளியேறினார். யூன் 3 ஆம் திகதி 1906ஆம் ஆண்டு இலங்கை வந்தடைந்தார்.

(தொடரும்)



# மீண்டும் பக்தி மயம்

கவர்ச்சி, காதல், ஆக்சன், பக்தி, குடும்பப்பாங்கு, கொமெடி என அனைத்து விதமான வேடங்களில் தனது திறமையை நிரூபிக்கும் விதமாக நடித்து வருவதால் லேடி சூப்பர் ஸ்டார் என்று ரசிகர்களால் அன்புடன் அழைக்கப்பட்டு வரும் நயன்தாரா தற்போது மீண்டும் ஒரு பக்திப் படத்தில் நடிக்கவுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளது.

ஏற்கனவே தெலுங்கு நடிகர் பாலகிருஷ்ணாவுடன் இணைந்து "ராமராஜ்ஜியம்" என்ற படத்தில் சீதையாக நடித்து பெரும் வரவேற்பை பெற்றதோடு அந்தப் படத்திற்காக ஆந்திர அரசின் நந்தி விருதையும் நயன்தாரா பெற்றார். இந்நிலையில் பிரபல தெலுங்கு நடிகர் வெங்கடேசுடன் இணைந்து ஒரு பக்திப் படத்தில் நயன்தாரா நடிக்கவுள்ளதாகவும், அந்தப் படம் தமிழ், தெலுங்கு என இரண்டு மொழிகளிலும் தயாரிக்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது. "ராதா கிருஷ்ணா" என்ற தலைப்பு வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் இந்தப் படத்தில் வெங்கடேஷ் "கிருஷ்ணன்" வேடத்திலும் நயன்தாரா "ராதா" வேடத்திலும் நடிக்கவுள்ளதாகவும் கூறப்படுகிறது. எந்த வேடம் கொடுத்தாலும் தனது நடிப்புத் திறமையால் அசால்ட்டாக கலக்கும் நயன்தாரா, இந்த ராதை வேடத்திலும் கலக்குவார் என எதிர்பார்க்கலாம்.







# சூர்யாவின் 174

கார்த்திக் சுப்பராஜின் 'இறைவி' படத்தில் நடித்து முடித்த கைாடு புதிய படமொன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார் எஸ்.ஜே.சூா. இப்படத்திற்கு '174' என்று பெயர் வைத்துள்ளனர். செல்வராகவனிடம் உதவியாளராக இருந்த மணிகண்ட இயக்கும் இப்படத்தில் புலனாய்வு அதிகாரியாக நடிக்கிற எஸ்.ஜே.சூர்யா. சட்டப்பிரிவில் உள்ள '174' என்பதை தனைக கொண்டு எடுக்கப்படும் இப்படத்தில் கொமெடிக்கும் அதி முக்கியத்துவம் இருக்குமாம்! இரண்டு, 3, 555, 6, மற்ற விரைவில் ரிலீசாகவிருக்கிற 144, சூர்யாவின் '24' ஆகிய பகள் வரிசையில் '174' என்ற பெயரில் உருவாக இருக்கும் இப்படன் படப்பிடிப்பு அடுத்த ஆண்டு தொடக்கத்தில் ஆரம்பமாக உள். இப்படத்தை எஸ்.ஜே.சூர்யாவே தயாரிக்கிறார்ராம்.

# விஜய் போட்ட கண்டிஷ்

இளைய தளபதியின் தெறி படத்தின் பர்ஸ்ட் லுக் எல்லோர வெகுவாக கவர்ந்துள்ளது. இதனால், படக்குழு மிகவு சந்தோஷமாக இருக்கின்றது. இது குறித்து மனம் திறந்த இப்படம் திடீரென்று ஆரம்பிக்கவில்லை, ராஜா ராண முடிந்தவுடன் விஜய் சாரை சந்தித்தேன். அதன்பின் மூ முறை அவரைச் சந்தித்து கதை கூறினேன். இப்படம் ஆரம்பிக்கும் போதே விஜய் சார் ஒரு கண்டிஷன் விதித்தார். இப்படத்தை எல்லோரும் குடும்பம் குடும்பமாகப் க வேண்டும் என்றார், அவர் கூறியது போல் கண்டிப்பாக இ குடும்ப ரசிகர்களை வெகுவாக கவரும் எனக் கூறியுள்ள




# சிம்புவின் குறும்பு

"என்னை அறிந்தால்" வெற்றி ப்டத்திற்கு பின்னர் இயக்குனர் கௌதம்மேனன் இயக்கி வரும் திரைப்படம் "அச்சம் என்பது மடமையடா". சிம்பு, மஞ்சிமா உட்பட பலர் நடித்து வரும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு தற்போது இறுதிக்கட்டத்தில் உள்ளது. இந்நிலையில் சிம்புவுடன் நடித்தது குறித்த அனுபவங்களை சமீபத்தில் அளித்த ஒரு பேட்டியில் நடிகை மஞ்சிமா தெரிவித்துள்ளார். சிம்பு படப்பிடிப்பின்போது மிகவும் ஜாலியாகவும், சுறுசுறுப்பாகவும் இருப்பார் என்றும், சீரியஸான காட்சிகளில் நடித்து கொண்டிருக்கும்போது திடீரென ஏதாவது ஜோக் சொல்லி தன்னை சிரிக்க வைத்துவிடுவார் என்றும், பின்னர் மீண்டும் தான் சீரியஸ் மூடுக்கு வர அதிக சிரமப்பட வேண்டிய நிலை வரும் என்றும் கூறியுள்ளார். ஆனாலும் சிம்புவுடன் நடிப்பதில் வேறு எந்த பிரச்சனையும் தனக்கு ஏற்பட்டதில்லை என்று கூறியுள்ளார்.




# இணையத்தில் கபாலி



ரஜினி நடிப்பில் தற்போது உருவாகிவரும் படம் 'கபாலி'. இப்படத்தை ரஞ்சித் இயக்கி வருகிறார். சென்னையில் தொடங்கிய முதற்கட்ட படப்பிடிப்பு தொடர்ந்து மலேசியா, தாய்லாந்து உள்ளிட்ட இடங்களில் நடந்தது. அடுத்தகட்டமாக கோவா செல்ல படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர். இந்நிலையில் இப்படத்தின் பாடல் ஒன்று இணையத்தளத்தில் திருட்டுத்தனமாக வெளியாகியுள்ளது. இது படக்குழுவினரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. மலேசியாவில் ஒரு பாடல் படமாக்கப்பட்ட போது, அங்குள்ள படப்பிடிப்பில் இருந்து பாடலை பதிவுசெய்து இணையத்தில் யாரோ வெளியிட்டு இருக்கிறார்கள். 2 நிமிடங்கள் அடங்கிய அப்பதிவு வாட்ஸ்-அப் மூலமாக பகிரப்பட்டு வருகிறது.. இதனால் படக்குழு மிகவும் அதிர்ச்சியில் இருக்கிறது.

# கமலின் அப்பா அம்மா விளையாட்டு

தூங்காவனம்' படத்தையடுத்து தமிழ், தெலுங்கு, மலையாளத்தில் உருவாகும் புதிய படத்தில் நடிக்கிறார் கமல்ஹாசன். டி.கே.ராஜீவ் குமார் இயக்குகிறார். சத்யா படத்தில் இணைந்த கமல், அமலா ஜோடி நீண்ட இடைவெளிக்கு பிறகு இணைகிறது. இப்படத்துக்கு வைக்கப்பட்ட தலைப்புப் பற்றிய விபரம் கசிந்துள்ளது. சமீபத்தில் ஹைதராபாத் வந்திருந்தார் கமல். அப்போது தனது நெருங்கிய நண்பர்களிடம் பேசிக்கொண்டிருந்தபோது புதிய படத்துக்கு 'அப்பா அம்மா விளையாட்டு' என பெயரிட உள்ளதாகவும் தெலுங்கில் 'அம்மா நானா ஆட்டா' என தலைப்பு வைக்கவிரும்புவதாகவும் தெரிவித்தார். சமீபத்தில் இந்த தலைப்பு பதிவு செய்யப்பட்டது. இதுவொரு குடும்ப பின்னணியிலான கதையாக உருவாக உள்ளது.



# வாழ்வாதாரத்தை உயர்த்த வாழை நார் பயிற்சி நெறி

வாழை செய்வோரின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் வாழைநார் பயிற்சியை முன்னெடுத்துள்ளது நீர்வேலி வாழைக்குலைச் சங்கம்.


இதன் மூலம் பல பெண் பிள்ளைகளுக்கு வேலைவாய்ப்பை வழங்க முடியுமென நம்பிக்கையுடன் தெரிவிக்கின்றார் விக்கினேஸ்வரன்.

வாழை உற்பத்தி தென்னிலங்கை வியாபாரிகளின் வாழைக்குலை கொள்வனவு மற்றும் தமது சங்கத்தால் முன்னெடுக்கப்படும் வாழை நார் பயிற்சி நெறி தொடர்பாக ''தினச்செய்திக்கு'' வழங்கிய செவ்வியில் அவர் மேலும் கூறியவை வருமாறு–

***நீர்வேலியில் வாழைக்குலைச் சங்கம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது. அதன் செயற்பாடு பற்றிக் கூறமுடியுமா?***

1948 ஆம் ஆண்டு எமது சங்கம் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் 1951 ஆம் ஆண்டு சட்ட ரீதியாக பதிவுசெய்யப்பட்டு இயங்கிவருகின்றது.

ஆரம்ப காலங்களில் நாம் வாழைத்தோட்டங்களுக்குச் சென்றே



வாழைக்குலைகளைப் பெற்றுவந்தோம்.

எமது பகுதியில் யுத்தம் நடைபெற்றுவந்த காலப்பகுதியான 1988 –1990வரையான காலப்பகுதியில் சங்கம் செயற்படாமல் இருந்தது. பின்னர் 1999முதல் மீண்டும் சங்கம் ஆரம்பித்து செயற்பட்டுவருகின்றது.

இப்பொழுது நாம் இந்த சங்கத்தை சந்தை வடிவத்திலேயே நடாத்தி வருகின்றோம். இங்கு தோட்டக்காரர்கள் வாழைக்குலைகளை கொண்டுவந்து தருவார்கள். நாம் அதனைப் பெற்று எம்மிடம் வரும் வெளிவியாபாரிகளுக்கு விற்பனை செய்து வருகின்றோம்

மேலும் எமது சங்கத்திற்கான பதிவு ஆரம்பத்தில் வலிகாமம் கிழக்கு என்றுதான் இருந்தது. அதனால் எமது ஊர்களில் மட்டுமல்ல எல்லா ஊர்களில் இருந்தும் வாழைக்குலைகளை கொண்டு வருவர்களிடம் கொள்வனவு செய்து விற்பனை செய்து வருகின்றோம்.

***இப்பொழுது நீங்கள் செய்யும் வாழையில் என்னென்ன இனங்கள் உள்ளன?***


கதலி, கப்பல், இதரை, மொந்தன் ஆகியன. இதில் அதிகமாக கதலி, இதரைதான் செய்வார்கள். கப்பல் இனமும் செய்வார்கள். அது நோய்க்கு பெருமளவில் அழிவதால் அந்த இனம் செய்வது மிகவும் குறைவாகவே உள்ளது.


***வாழைகளில் பல்வேறு இனங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதனால் அவ்வாறான இனங்களை உங்களது பிரதேசங்களில் வைத்துள்ளீர்களா? இந்த புதிய இனங்களினால் நீங்கள் வழமையாக வைக்கும் வாழைகளுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டுள்ளதா?***

இல்லை. இதனால் எந்த தாக்கமும் எமக்கு இல்லை. முன்னர் **"கவன்தீஸ்"** என்றொரு வாழை இனம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அது எமது சந்தையில் விற்பனையாவதில்லை.

இந்த **"கவன்தீஸ்"**இனத்தை செய்வதனால் ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்புள்ளது. எனவே இந்த வாழை இனத்தை நீங்கள் நடலாம் என்றார்கள். எனினும் இந்த இனத்தை நட்டு வளர்த்து முடிய அதனை கைவிட்டுவிட்டார்கள். ஆனால் ஆய்வின்போது எமது பகுதியில் வைக்கப்பட்ட **"கவன்தீஸ்"** வாழையின் குலைகளை பொதி செய்யும்போது அது கறுத்துபாவனைக்கு உதவாமல் போய்விடுவதாகத் தெரிவிக்கப்பட்டது. அதனால் ஏற்றுமதி செய்யமுடியாமல் போய்விட்டது. எமது மக்களும் அந்த இன வாழையை அழித்துவிட்டுதாம் வழமையாக வைக்கும் வாழையையே வைத்து வருகின்றனர்.

இந்த **"கவன்தீஸ்"** பழம் பார்வைக்கு அழகானதாக இருக்கும். இது இனிப்பு குறைவு. சலரோக நோயாளிகளுக்கு சிறந்தது. ஆனால் எமது மக்கள் அதனை விரும்பி உண்ணுவதில்லை.





அதுமட்டுமன்றி எமதுமக்கள் பழைய முறையில்தான் இருக்கிறார்கள். நாங்கள் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தோம். ஆனர்ல **"கவன்தீஸ்"** வாழைப்பழம் விற்பனையாகாமல் இருந்ததனால் அதனைக் கைவிட்டுவிட்டோம்.

***தற்போது மழை காலமாகையால் முன்னரைவிட வாழைப்பழங்களின் விலைகள் எந்த நிலையிலுள்ளன? அதனால் உங்களுக்கு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளனவா?***

மாரி காலத்திற்கு முன்னர் விலை அதிகரித்திருந்த நிலையில் தற்போது வாழைப்பழங்களின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அத்துடன் கடந்த காலத்தைவிட இந்த வருடம் வாழைப்பழங்களின் விலை குறைந்துள்ளன. ஏனெனில் தென்னிலங்கையில் உள்ள வாழைகள் மழையால் சேதமடையாததால் எமது பழங்களுக்கான கேள்விகள் தென்னிலங்கையில் குறைந்துள்ளன. அதுமட்டுமன்றி இம்முறை எமது ஏற்றுமதி வவுனியாவுடனேயே நின்றுவிட்டது. அங்கும் விலைகள் குறைவாகவே உள்ளன.

மேலும் எமது சங்கம் இருந்த காலப்பகுதியில் வாழைக்குலை செய்கையாளர்கள் தமது வாழைக் குலைகளை விற்பதற்கு பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். ஆனால் அந்த நிலை தற்பேர்து எவருக்கும் இல்லை.

***வாழைக்குலைகளை எவ்வாறு பெற்றுக்கொள்கிறீர்கள்?***

வாழைக்குலை செய்கையாளர்கள் கொண்டுவரும் குலைகளை நிறுத்து எமது சங்கத்தில் தீர்மானிக்கப்படும் விலைகளின்படி கிலோவுக்கான விலைகளைப்பேசி பெற்றுக்கொள்வோம்.

***தென்னிலங்கையில் இருந்து வரும் வியாபாரிகள் தோட்டங்களுக்கே சென்று நேரடியாக வாழைக்குலைகளை கொள்வனவு செய்வதாக கூறப்படுகின்றது. இதனால் உங்களுடைய வியாபாரம் பாதிக்கப்படுகின்றதா?***

எமக்கு பாதிப்பு என்று கூறமுடியாது. ஏனெனில் சில வியாபாரிகள் தோட்டங்களுக்குநேரடியாகச் சென்று வாழைக்குலைகளை கொள்வனவு செய்வதற்கு காரணம் வாழைக்குலைகளில் சேதம் குறைவாக காணப்படும் என்பதால்தான். எம்மிடம் கொண்டுவரப்படும் குலைகளை தோட்டங்களில் இருந்து கட்டி ஏற்றி வந்து பின்னர் இங்கு வந்து நிறுத்துத்தான் நாம் பெற்றுக்கொள்கிறோம். அதன் பின்னர் வியாபாரிகளிடம் கொடுக்கும் போதும் நாம் நிறுத்துத்தான் ஏற்றுகின்றோம். இதனால் குலைகளில் உள்ள காய்களுக்கான சேதங்கள் அதிகரிக்கின்றன. இதனாலேயே அவர்கள் அங்கு சென்று பெற்றுக்கொள்கின்றார்கள். அதனால் எமக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. அதுமட்டுமன்றி அவர்களை நாம் கட்டுப்படுத்தவும் இல்லை.

ஏனெனில் தோட்டக்காரர்களிடம் பெற்றுக்கொள்ளும் வாழைக் குலைகள் முழுவதனையும் எம்மால் விற்பனை செய்வது கடினம். அதனால் நாமும் விட்டுவிட்டோம்.

ஆனால் முன்னர் சங்கம் பதிவு செய்யப்பட்ட காலத்தில் சங்கத்தின் அங்கத்தவர்கள் எவரும் வெளி வியாபாரிகளிடம் குலைகளை விற்பனை செய்யமுடியாது. அவ்வாறு விற்பனை செய்தால் குலையின் விலை மலியும்போது சங்கம் பொறுப்ப



பெடுத்து குலைகளை வெட்டாது. அதற்கு காரணம் குலைகளை சந்தைப்படுத்தல் திணைக்களத்திடம் நேரடியாக விற்கலாம் என்பதால்.

ஆனால் இப்பொழுது எவருமே இல்லை. நாம் வெளி வியாபாரிகளைப் பிடித்தே விற்று வருகின்றோம். இதனால் கொடுக்கல் வாங்கல் பிரச்சினைகள் ஏற்படும். சங்கத்தின் கட்டளை இடம்கொடுக்கக்கூடாது என்பதே. கடன் கொடுபபவர்கள் தாமாகவே கடனைக் கொடுத்து பெற்றுக்கொள்ளவேண்டும். இதற்கு சங்கம் பொறுப்பெடுத்துக் கொள்ளாது. இப்படியான நிலைமையிலேயே இந்தச் சங்கம் ஓடிக் கொண்டிருக்கிறது.

அதுமட்டுமன்றி நாம் எவ்வளவோ முயற்சிகள் எடுத்துள்ளோம். ஒரு நிறுவனத்தின் ஊடாக இந்த வாழைக்குலைகளை விற்பனை செய்வதற்கு. அது முடியாமல் உள்ளது. ஒரு நிறுவனம் பொறுப்பெடுத்தால் அவர்கள் மூலம் எமது வாழைக்குலைகளை விற்பனை செய்யமுடியும். இதனால் எமது சங்கமும் மக்களும் வளர்ச்சி பெற முடியும் என்பது எமது எதிர்பார்ப்பாக உள்ளது.

***நீங்கள் தென்னிலங்கை வியாபாரிகளை தோட்டங்களில் கொள்வனவு செய்ய விட்டுள்ளீர்கள். இதனால் எதிர்காலத்தில் உங்களது சங்கத்திற்கு வருமானத்தில் பாதிப்பை ஏற்படுத்தாதா?***

பாதிப்பு ஏற்படும் என்று கூற முடியாது. ஏனெனில் தோட்டத்திற்கு தென்னிலங்கை வியாபாரிகள் சென்றால் அவர்கள் எம்முடன் தொலைபேசியில் பேசி விலைகளைக் கேட்டறிந்த பின்னரே விற்பனை செய்வார்கள். ஏனெனில் வாழைக்குலைகளின் விலைகளை நாம்தான் நிர்ணயிப்பது. அதனால் எமக்கு யார் வந்து பெற்றுக் கொள்கின்றார்கள் என்ன விலை

(தொடர்ச்சி 23 இல்......)

நேர்காணல்: லக்ஷா

"அன்னசத்திரம் ஆயிரம்"...

இது பாரதியாரின் கவிதையில் வருவது. பண்டைய காலத்தில் அன்னசத்திரங்கள் அமைத்தார்கள். ஏன் மடமும் அமைத்தார்கள். இவைகளின் நோக்கங்கள் இன்றைய தலைமுறையினருக்கு முழுமையாகத் தெரியும் என்று சொல்வதற்கில்லை.

வீடு வாசல் அற்றவர்கள், நாடோடிகள், வழிப்போக்கர்கள் ஆகியோர் தங்கிச் செல்வதும், தங்கிக் கொண்டுஉறங்குவதும் அணியாமலே செல்வார்கள். இன்றுபோல் அன்று செருப்போ சப்பாத்தோ இல்லை ஒருசிலர் மட்டும் அதுவும் முதியோர் மிதிதடிபோட்டு நடப்பார்கள். இவை மரத்தினால் செய்யப்பட்டவை. இந்த மிதிதடிகள் கிராமங்களிலே செய்யப்பட்டவை. இதனைச் சில தனவந்தர்கள் மட்டும் போடுவார்கள்.

ஏனையோர் எல்லோரும் அதாவது மாணவர்களாய் இருந்தாலும் சரி மற்றும் நிரப்புவார். சங்கடப்படலை இல்லாத வீட்டுக்காரரும் குடிமனையில் உள்ளே இருப்பவர்களும் சங்கடப் படலையில் தங்களுக்கு வேண்டிய பொருட்களை வாங்குவார்கள். அன்றைய காலங்களில் சீனர்களும் சரி உள்ளூர் வியாபாரிகளும் சேலை போன்ற உடுக்கும் துணிகளை மூட்டையிலே சுமந்து வந்து விற்பார்கள். இந்தச் சங்கடப் படலைத் திண்ணையில் உடுபிடவைகளைப் பரவி

# சங்கடப் படலை

இங்கு இடம்பெறும் நிகழ்வுகளாகும்.

மேற்கூறியவற்றின் மறுவடிவங்களே சங்கடப் படலையாகும். இது வீதியோரங்களில் வீட்டின் படலை (கேற்றில்) யில் அமைந்த சிறுகொட்டகையாகும். இதனை சிறு ஒழுங்கைகளிலும். அமைத்திருந்தார்கள். அதாவது படலைக்கு மேல் ஒரு கொட்டகை போல கூரை வைத்திருப்பார்கள். நடுப்படலை தவிர்ந்த இருபக்கமும் மண்ணினாலோ சீமெந்தினாலோ இரு திண்ணைகள் அமைத்திருப்பார்கள். திண்ணையின் ஒரு மூலையில் மண்குடத்தில் குடிக்கும் தண்ணீரும் பேணியும் வைத்திருப்பார்கள்.

வீதியால் போவோர் வருவோர்களுக்கு இது தங்கித் தாகந் தீர்த்து களைப்பாறிச் செல்லுமிடமாக இருந்தது.

பண்டைய மக்களின் வாழ்க்கைமுறை அதையொட்டி இச்சங்கடப் படலை அமைவதற்குரிய காரணங்களைச் சற்று விரிவாகப் பார்ப்போம். அந்தக்காலத்தில் 1920 30 களில் வடபகுதியில் பெரும்பாலும் மணல் வீதிகளே. ஓரிரு பெரிய வீதிகள் கல்வீதிகளாக இருந்தன. கிராமப்புற ஒழுங்கைகள் தொடக்கம் மற்றைய வீதிகள் எல்லாம் மண் வீதிகளாகவே அமைக்கப்பட்டிருந்தன.

மக்களின் போக்குவரத்து பெரும்பாலும் கால்நடையாகவே இருந்தது. கிராமத்தில் ஓரிருவர் மட்டும் ஒற்றை மாட்டு வண்டிலோ திருக்கல்வண்டிலோ இரட்டை மாட்டுவண்டிலோ வைத்து இருந்தனர். சைக்கிளும் ஓரிருவரிடம்தான் இருந்தது. இரண்டு மூன்று ஊர்களுக்கு ஒரு குதிரை வண்டிலும் இருந்தது.

மேற்கூறிய வகைகளைத் தவிர எல்லோரும் வேண்டிய இடங்களுக்கு கால்நடையாகவே செல்வார்கள். கால்நடையாகச் செல்வோர் காலில் எதுவும் தொழில் செய்பவர்களாய் இருந்தாலும் மண்ணிலே வெறும் காலுடன் நடந்து செல்வார்கள். காலையில் வெயில இல்லாதிருந்தாலும் மாலை மூன்று மணிவரை கால் நடையாகப் போவார்கள். பெண்க்ள தலையை சேலைத் தலைப்பால் மூடியும் ஆண்கள் தலைப்பாகை யுடனும் நடந்து செல்வார்கள்.

இந்த வேளையிற்றான் சங்கடப் படலையில் தங்கி நீர் குடித்து ஆறிச் செல்வார்கள். சந்தைக்கோ பிற இடங்களுக்கோ செல்பவர்கள் சங்கடப் படலையில் தங்கித் தாகந் தீர்த்து தாம்பூலம் தரித்துச் செல்வார்கள். மாணவர்கள் காலையில் சங்கடப்



படலைக்கு வரமாட்டார்கள். பாடசாலை விட்டதும் சங்கடப் படலைகளில் தண்ணீர் குடித்துத்தான் செல்வார்கள். ஒரு மைலுக்கு கிட்டத்தட்ட நான்கு சங்கடப் படலைகளாவது இருந்தன.

காலை 10 மணி தொடக்கம் மாலை 2 மணி வரை அந்தச் சுற்றாடல் மக்களின் சிறு சந்தையாகக் கூட இந்தச் சங்கடப் படலைகள் சிறிது நேரம் ஆகிவிடும். மரக்கறி வியாபாரி வந்து தண்ணீர் குடிப்பார். அவ்வேளை அயலவர்கள் வந்து மரக்கறிகள் வாங்குவார்கள் இதேபோன்று மீன் வியாபாரி வருவார். வியாபாரம் நடக்கும் நல்லெண்ணெய் வியாபாரி வருவார். இப்படிப் பல வியாபாரங்கள் சங்கடப் படலைகளில் நடப்பதுண்டு. வீட்டுக்காரர் அடிக்கடி பானையைப் பார்த்து நீரினை வைத்து விற்பார்கள். வியாபாரம் நன்றாய் நடக்கும்.

யாழ் குடாநாட்டில் இன்றும் கூடச் சில கிராமங்களில் சங்கடப் படலைகள் இருப்பதைக் காணலாம். குறிப்பாக புங்குடுதீவு, நயினாதீவு போன்ற தீவுப் பகுதிகளில் சங்கடப் படலைகள் இன்றும் காணப்படுகின்றன. சில இடங்களில் பேணப்படாது இருப்பது குறிப்பிடத்தக்கது.

முன்பெல்லாம் ஒரு வீட்டில் மரணம் சம்பவித்தால் நிரந்தரப் படலையாலோ சங்கடப் படலையாலோ பிரேதத்தைக் கொண்டு போகமாட்டார்கள். வளவின் ஒரு வேலிப்பகுதியை வெட்டித்தான் கொண்டு போவார்கள். இந்த வழக்கம் இப்பொழுது அருகிவந்து விட்டது. முன்பு வைசூரி பேதி போன்ற நோய்களால் கிராமங்களில் நூற்றுக்கு மேற்பட்டோர் இறந்த காரணத்தால் இந்த வேலி வெட்டிப் பிரேதம் கொண்டு போகும் முறை வந்ததெனலாம்.

வடமராட்சியில் அமைந்த தெருமூடி மடங்கூட சங்கடப் படலையின் நோக்கத்தை நிறைவுசெய்ய அமைந்ததே எனலாம். இப்பகுதிகளில் இன்றும் சங்கடப் படலைகளைக் காணலாம்.

இன்று ஊர்களிலே சங்கடப் படலைக்குப் பதிலாக கம்பியினாலான வளைவுகளும் மல்லிகைப் பந்தல்களும் அழகையும், சுகத்தையும் கொடுப்பதில் முன்னிற்கின்றன.

தொகுப்பு : கலாபூஷணம் சு.துரைசிங்கம்

# இலக்கியத் துளிகள்

**சுன்னாகத்தில் பல பத்திரிகை**

சுன்னாகத்திலிருந்து அவ்வவ்போது பல மாத வாரப்பத்திரிகைகள் வெளிவந்திருக்கின்றன. அவற்றில் வித்தகம் பத்திரிகை தென்கோவைப் பண் ஈழகேசரி வாரஇதழ் இராஜஅரியத்திரனம் ஆசிரியராகக் கொள்ளும் கலைச்செல்வி மாத இதழ் சி.சரவணபிள்ளை ஆசிரியராகப் கொண்டும் நம்நாடு நாவேந்தனை ஆசிரியராகக் கொண்டும் வெளிவந்தன. இப்பொழுது தினச்செய்தியும் வெளிவருகிறது.

1960 களில் வித்துவான் ஆறுமுகம் ஆசிரியர் குழுவினரால் கலைமதி இலக்கிய பத்திரிகையும் வெளிவந்தது. வலிதெற்கு பிரதேச சபையினரால் வெள்ளிமலை பத்திரிகையும் வெளிவந்தது.

---

இலங்கையில் தமிழில் முதலில் 66 நூல்களை எழுதியவர். கந்தரோடையைச் சேர்ந்த அறிஞர் நா.சி.கந்தையாபிள்ளை இவரின்நூல்கள் பெரும்பாலானவை சங்ககால நூல்களை ஆதாரமாகக் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

---

**டாக்டர் நந்தி**

டாக்டர் நந்தி என்று சொல்லப்படும் சிவஞானசுந்தரம் அவர்கள் பல நாவல்களின் ஆசிரியராவார். கண்டி பல்கலைக்கழக விரிவுரையாளராக இருந்து இலக்கியத்திற்கும் மருத்துவத்திற்கும் சேவை செய்தவர் மலைக்கொழுந்து இவரின் பிரபல நாவலாகும். இலங்கையில் எல்லா இன எழுத்தாளர்களுடனும் நேயம் வைத்தவர். இவருக்கு நந்தி என்ற புனைபெயரை வைத்தவர் தமிழ்நாடு கவர்னர் ராஜாதியாவார். (இராஜகோபாலச்சாரியார்)

---

**நடித்தார்கள் பெனடிக் பாலனும் செ.யோகநாதனும்**

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் பாரதி விழா நடைபெற்றபொழுது "நீ ஒரு பெக்கோ" எனும் சிறு நாடகத்தில் நடித்தார்கள். செ.யோகநாதன் 60இற்கும்மேற்பட்ட நூல்களை ஆக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**செல்வி சற்சொரூபவதிநாதன் எப்படி சொற்சொரூபவனாதியானார்.**

பண்டிதர் க.பொ.இரத்தினம் அவர்கள் கொழும்பில் திருக்குறள மகாநாட்டை நடத்தினார். அவ்விழாவில் செல்வி சற்சொரூபவதி விசேட பேச்சாளராக அழைக்கப்பட்டார். பல நாடுகளைச் சேர்ந்த பேச்சாளப் பெருமக்கள் விழாவில் கலந்து பேசினார்கள். பேச்சிலே வல்லாளனான இரா.பி.சேதுப்பிள்ளையும் அவ்விழாவில் கலந்து உரையாற்றினார். அவ்வேளை இலங்கை வானொலியைச் சேர்ந்த சற்சொரூபவதி பேசினார் அவரின் உச்சரிப்பும் சொல் வளத்தையும் கண்டேன். அவர் சற்சொரூபவதியல்ல சொற்சொரூபவதியே எனப் பாராட்டினார் இந்தியாவின் இரா.பி.சேதுப்பிள்ளை

---

"தமிழ் புளூராக்" என்னும் நூல் புத்தளம் காசிச் செட்டியாரால் வெளியிடப்பட்ட பொழுது வாழ்ந்து கொண்டிருந்தவர்தான் நீர்வேலி சிவசங்கரபண்டிதர் இவர் 18 நூல்களை எழுதியுள்ளார்.

**பாரதியாரின் ஞானகுரு யாழ்ப்பாணம் அருளம்பலம்**

சுப்பிரமணிய பாரதியார் இந்தியாவில் புதுச்சேரியில் வாழ்ந்து கொண்டிருந்தவேளை யாழ்ப்பாணத்து அருளம்பலசாமியும் நேயம் கொண்டிருந்தவேளை பாரதியாரும் அருளம்பலமும் மனம்விட்டு பேசிக் கொள்வார்கள். அந்தவேளை அருளம்பத்தாரின் போதனைகளால் ஈர்க்கப்பட்டு தன்னுடைய ஞானகுருவாக அருளம்பலத்தை ஏற்றுக் கொண்டார் பாரதியார் இத்தகவலை பாரதியார் தனது பாடலிலே குறிப்பிடுகிறார்.

# தவறு

பாம்புப் புற்றுக்குள் நுழைந்த தவளை
எட்டிப் பிடிக்க நினைக்கிறது பாம்பு
தவளையின் அதட்டல் – ஏய்
மூடனே – நீயே அடுத்தவன்
கட்டிவைத்த வீட்டில்
மழைக்கு ஒதுங்கி வசிக்கும்போது
வம்புக்கு வராமல் நானும் இதற்குள்
ஒதுங்கத்தான் வந்தேன்
ஆனால் நீ மானிடர்போல்
அடுத்தவன் வீட்டிற்குள்
இருந்துகொண்டு
தஞ்சம்புகவந்தவனை தவித்த
முயல் அடிப்பதுபோல் கொல்வது
எவ்வகை நியாயம்?
ஓ! மாண்புள்ள மானிடனிடம்
இல்லாத உணர்வு என்னிடம்
நான் எதிர்பார்ப்பது தவறுதான்



கார்த்தி

## குட்டீஸ் பக்கம்



# உழைப்பின் மகிமை

அளவெட்டி எனும்கிராமத்தில் வதிவோர் பெரும்பாலும் விவசாயிகள். நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தப் பாடுபட்டுழைக்கும் பண்புடையவர்கள். ஆதவனும் மாதவனும் இக்கிராமத்தைச் சேர்ந்தவர்கள். ஒரே பாடசாலையில் பயின்றவர்கள் க.பொ.த.சாதாரண வகுப்பில் படித்துச் சித்தி பெற்றவர்கள். இருவராலும் அதற்கு மேல் படிப்பைத் தொடர முடியவில்லை.

ஆதவன் உத்தியோகம் தேடிக் கொழும்பு சென்றான். மாதவன் வயது முதிர்ந்த தன் தாயைக் காப்பாற்ற வேண்டிய நிலையில் இருந்தான். அதனால் அவன் பிறவூருக்குச் செல்ல விரும்பவில்லை. சொந்த ஊரில் இருந்து கொண்டே பாடுபட்டுழைத்துத் தன் தாயைக் காப்பாற்ற விரும்பினான். வேறு எந்தவித வசதியும் அவனுக்கு இருக்கவில்லை. சிறிய ஓலைக் குடிசை ஒன்றிலேயே அவர்கள் வாழ்ந்து வந்தனர். எந்தநாளும் தன் குடும்பநிலை பற்றியே அவன் சிந்திப்பான். எவ்வாறு உழைத்து முன்னேறலாம் என்று யோசிப்பான்.

ஒருநாள் காலைவேளை மாதவன் வீட்டுத் திண்ணையில் அமர்ந்துகொண்டு எப்படி முன்னேறலாம் என்று சிந்தித்துக் கொண்டிருந்தான். அவ்வேளையில் அவனது வீட்டின் அயலில் உள்ள ஒழுங்கையில் மாட்டுவண்டியொன்று வந்து கொண்டிருந்தது. வண்டியில் அநேக நெல் மூடைகள் அடுக்கப்பட்டிருந்தன. வண்டியின் பாரம் காரணமாக மணல் ஒழுங்கையில் எருதுகள் அவ் வண்டியை இழுக்க முடியாமல் திண்டாடின. வண்டிச்சாரதி எருதுகளைத் தூண்டிய வண்ணம் இருந்தான். எருதுகள் கால்களை மடக்கி மிண்டி இழுத்தன. வண்டி நகரவில்லை. எருதுகள் சோர்வுறாது மீண்டும் மீண்டும் மிண்டி இழுத்தன. அவற்றின் முயற்சி பலித்தது. வண்டி நகர்ந்து சென்றது.

இக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த மாதவனுக்கு ஓர் எண்ணம் உதயமாயிற்று. மீண்டும் மீண்டும் முயற்சித்தால் எடுத்த காரியம் வெற்றி தரும் என்பதை உணர்ந்து கொண்டான். தானும் சோம்பிராமல் விவசாயத்தில ஈடுபட்டால் பயன் கிட்டும் எனக் கருதினான். வீட்டு வளவில் பயன்படுத்தாது கிடந்த நிலத்தைக் கொத்தி பண்படுத்தினான்.

குப்பை கூழங்களைப் பசளையாகப் புதைத்தான். பாத்திகள் ஆக்கினான். தனக்குத் தெரிந்த ஆசிரியர் ஒருவரிடம் பணம் கடனாகப் பெற்று மரவள்ளித் தடிகளை வாங்கினான். அவற்றை துண்டுகளாக்கிப் பண்படுத்திய பாத்திகளில் நாட்டினான். ஒழுங்காக நீர் இறைத்து அவற்றை நன்கு வளரச் செய்தான்.

அவை நன்கு செழித்து வளர்ந்தன. மூன்று மாதங்களில் மரவள்ளிக் கிழங்கு பிடுங்கக்கூடிய நிலையை அடைந்தன. மாதவனின் கடின உழைப்பும் பயனளித்தது. பெருந்தொகையான கிழங்குகளைச் சந்தைக்கு கொண்டுசென்று விற்றான். எதிர்பார்த்ததிலும் பார்க்க அதிக பணம் கிடைத்தது.

அவனது விடாமுயற்சியைப் பார்த்த ஆசிரியர் அன்பரசன் தனது தோட்டத்தை மாதவனுக்கு குத்தகைக்குக் கொடுத்தார். அத் தோட்டத்தில் மிளகாய், கத்தரி, பாகல் போன்ற பயிர்களைப் பயிரிட்டான். வாரந்தோறும் பெருமளவு வருமானம் கிடைத்தது. தோட்டச் செய்கையில் மாதவன் தொடர்ந்து ஈடுபட்டான். இரண்டு வருடங்களில் அவன் கல்வீட்டுக்காரனாகவும் மாறிவிட்டான்.

கொழும்பு சென்ற ஆதவன் இரண்டு ஆண்டுகளின் பின் தன் சொந்தக் கிராமத்திற்குத் திரும்பினான். மாதவனைச் சந்தித்தான். அவனது முன்னேற்றம் கண்டு பெரும் ஆச்சரியமுற்றான். கொழும்பில் வேலை தேடி அலைந்தேன். எனக்கேற்ற தொழில எதுவும் நிலையாகக் கிடைக்கவில்லை. கடைகள் தோறும் படியேறி அலுத்துவிட்டேன். எனக்கு வாழ்க்கையே வெறுத்துவிட்டது என்று கண்ணீர் விட்டு அழுதான்.

ஆதவனின் நிலைகண்டு மாதவன் பெரிதும் வருந்தினான். கவலைப்படாதே ஆதவா, நமக்கு உறுதியான உடல் உண்டு. கைகளில் பலமுண்டு. நாம் வேலை தேடி வேறூர் சென்று அலைய வேண்டியதில்லை. பிறரிடம் அடிமையாக வேலை செய்வதைவிடச் சுதந்திரமாகத் தன்னம்பிக்கையுடன் சுயமாக உழைத்து வாழ முடியும். என்னைப்போல் தோட்ட வேலையில் ஈடுபடு. இரண்டு வருடங்களில் பெரும் செல்வந்தனாகி விடுவாய். உனக்குத்தான் தோட்ட நிலமிருக்கிறதே. பின்னர் ஏன் கவலை? இன்று முதல் தோட்ட வேலையில் ஈடுபடு. என்னாலான உதவியனைத்தையும் செய்வேன் என்றான் மாதவன்.

மாதவன் கூறிய அறிவுரையினை ஆதவன் முழுமனதுடன் ஏற்றுக் கொண்டான். தோட்ட வேலையில் முழுமூச்சுடன் ஈடுபட்டான். கடுமையாக உழைத்தான். கவலை நீங்கியது. செல்வம் சேர்ந்தது.

ஆண்டுகள் பல சென்றன. அவன் அளவெட்டி கிராமத்தின் சிறந்த விவசாயியாகவும் தெரிவு செய்யப்பட்டான். உழைப்பின் மகிமையை இவர்கள் இருவரும் நிலைநாட்டினார்.

மு.கமல[illegible]
தரம் - 10
(யா/மகாஜனக் கல்லூரி)

# வாரமொரு குறள்



*கோளில் பொறியின் குணமிலவே*
*எண்குணத்தான்*
*தாளை வணங்காத் தலை.*

**பொருள் : உடல், கண், காது, மூக்கு, வாய் எனும் ஐம்பொறிகள் இருந்தும், அவைகள் இயங்கா விட்டால் என்ன நிலையோ அதே நிலைதான் ஈடற்ற ஆற்றலும் பண்பும் கொண்டவனை வணங்கி நடக்காதவனின் நிலையும் ஆகும்.**

# விடுகதை

01. அரிவாள் போல இலை விடும். கவரிமான் போல் பூப்பூக்கும். தின்னக் காய் காய்க்கும். தின்னப் பழம் பழக்கும் அது என்ன?
02. அழுக்கு மூட்டை சுமக்கும், அலங்கார நடை நடக்கும். சந்தோஷம் மீதி வந்தால் சங்கீதம் உரக்கப்பாடும். அது என்ன?
03. அடியில் உள்ளவன் அடக்கமாயிருப்பான். மேலே உள்ளவன் நறுக்கென்று கடிப்பான். கமுகின் மகளைக் கண்டதுண்டமாக்குவான் அவன் யார்?
04. அந்தத் தாய்க்கு ஐம்பது குஞ்சுகள். ஐம்பதின் வாயிலும் நெருப்புச்சுடர் விடும் அவை என்ன?
05. அடங்கிக் கிடப்பான். திடீரென்று அலறி அலறிக் குரல் செய்வான். எடுத்துக் காதில் வைத்தாலோ ஏதோ சொல்லிக் கதை அளப்பான். அவன் யார்?
06. அங்கமுத்து தோட்டத்திலே தங்கமுத்து தொங்குது. அதை எடுத்து வாயில் போட்டால் அடிவயிறும் எரியுது. அது என்ன?
07. அந்தி கிழக்கே, அதிகாலை மேற்கே வந்தபோது வர்ணங்கள் வகைவகையாய் எண்ணங்கள் அது என்ன?
08. அம்மியின் கீழே கும்மியும் அடிப்போம். கப்பலில் ஏறிக் கூத்துமடிப்போம். பட்டுப் புடைவையில் பொத்தலும் செய்வோம் பார்வையில் பட்டால் ஓடி மறைவோம். நாங்கள் யார்?
09. அந்தரமான குகைக்குள்ளே அங்கே ஒருத்தி இருக்கிறாள். முப்பத்திரண்டு காவலர்கள் முன்னே நின்று காக்கிறார். அவர் யார்?
10. அடித்து நொறுக்கி அனலில் போட்டாலும் அருமையாய் மணந்திடும் அது என்ன பிராணி?
11. அத்திவாரம் இல்லாத கட்டிடம் ஆழ் கடலில் நீந்துகின்ற கட்டிடம். ஆட்களையும் பொருட்களையும் சுமந்து அதிக தூரம் போகும் கட்டிடம் அது என்ன கட்டிடம்?
12. அக்கனியும் இக்கனியும் முக்கனியும் சர்க்கரையும் அக்கரையும் சேர்த்து வைத்த அமிர்தம் என்ன அமிர்தம்?

**விடைகள் :**

| | | |
|---|---|---|
| 1. வேம்பு | 2. கழுதை | 3. பாக்குவெட்டி |
| 4. தீப்பெட்டி, தீக்குச்சிகள் | 5. தொலைபேசி | 6. மிளகாய்ப்பழம் |
| 7. வானவில் | 8. எலிகள் | 9. நாக்கு |
| 10. சாம்பிராணி | 11. கப்பல் | 12. பஞ்சாமிர்தம் |

கு.கோகுலா
இடைக்காடு மகா வித்தியாலயம்

# அம்மா



பத்து மாதம் சுமந்து உன்னை
முத்துப்போலப் பெற்றவள் அன்னை
நித்தம் சோறு ஊட்டுவாள் அன்னை
முத்தம் தந்து வளர்ப்பாள் அன்னை
உன்னை நித்திரை செய்ய
வைப்பாள் அன்னை
உன்னை வளர்த்த அன்னை
தன்னை
முன்னை எழுந்து வணங்கு

ந.தனுஷ்
யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம்

# யானைகளின் குணாதிசயங்கள்

1. உயிரினங்களில் யானையால் மட்டுமே துள்ளிக் குதிக்க முடியாது.

2. யானை தண்ணீர் இருக்கும் இடத்தை சுமார் 5 கிலோ மீட்டர் தூரத்தில் வரும்போதே வாசனை மூலம் தெரிந்து கொள்ளும்.

3. யானையின் பற்கள் சுமார் 5 கிலோ எடை வரை இருக்கும்.

4. ஆபிரிக்கன் யானைக்கு நான்கு பற்கள்தான். ஆறு முறை பற்கள் விழுந்து முளைக்கும். கடைசி நேரம் பல் விழும்போது சரியாக சாப்பிடாது.

5. நன்கு வளர்ந்த ஆபிரிக்கன் யானையின் தந்தத்தின் நீளம் சுமார் ஏழு அடிகள் வரை இருக்கும்.

6. யானை துதிக்கையின் மூலம் 7.5 லிட்டர் தண்ணீரை ஒரே முறையில் எடுத்து குடிக்கும் திறனுடையது.

7. யானை ஒரு நாளைக்கு சுமார் 350 லிட்டர் தண்ணீரை குடிக்கும்.

8. ஆபிரிக்கன் யானைகள் சூரிய வெப்பத்தில் இருந்து தம்மை காத்துக் கொள்வதற்கு முதலில் தண்ணீரை எடுத்து தனது உடலில் தெளிக்கும்.பின் புழுதியை எடுத்து உடம்பில் தூற்றிக் கொள்ளும். அந்த சகதி லேயர் மூலம் வெப்பத்தில் இருந்து காத்துக்கொள்ளும். இம்முறையால் பூச்சிக்கடியில் இருந்தும் தம்மைக் காத்துக்கொள்ளும்.

9. யானையின் துதிக்கையின் நுனியில் உள்ள இரண்டு விரல்கள் மூலம் சின்ன குண்டு ஊசியைக் கூட எடுத்துவிடும்.

11. சராசரியாக சுமார் எழுபது வருடம் வரை உயிர்வாழும்

12. யானையின் communication பூனையை போன்றே இருக்கும்.

13. பொதுவாக ஒரு யானை கூட்டத்தில் ஒன்று முதல் ஆயிரம் யானைகள் வரை இருக்கும், கூட்டத்தை வழிநடத்தி செல்வது வயதான பெண் யானைதான்.

14. பொதுவாக யானைக் கூட்டத்தில் பெண் யானைகளும் குட்டிகளும்தான் இருக்கும். வயது வந்த ஆண் யானைகள் கூட்டத்தை விட்டு பிரிந்து விடும்.

15. நான்கு வருடத்திற்கு ஒரு முறைதான் குட்டி போடும், அதிசயமாக சிலநேரங்களில் இரண்டு குட்டிகள் கூடப்போடும்.

16. 24 மணிநேரம் தண்ணீர் அருந்தவில்லை எனில் உயிரை விட்டுவிடும்.

17. யானை துதிக்கை சுமார் 1,50,000 தசைகளால் ஆனது. மனிதன் உடம்பில் மொத்த தசைகளே 640 தான்.

18. தாய்லாந்து நாட்டின் தேசிய விலங்கு யானைதான்.

19. யானைகள் அறுபது கட்டளை வார்த்தைகளை புரிந்து கொள்ளும்.



ஹம்சி

# தன்வினை

## (தொடர்கதை - 5)

சரி சேர் இப்ப உடனடியாய் தேடிப்பிடிக்கிறது கஸ்ரம். இருந்தாலும் என்னுடைய சில கேள்விகளுக்கு பதில் வேண்டும். ஓடிப்போன பொடியனின் விபரம் ஏதாச்சும் தெரியுமா என பொலிஸ்காரன் முதலாவது கேள்வி கேட்டான்.

இல்லை சேர் அவள் காதலிக்கிறாள் எண்டதே தாய்க்கு ஒரு கிழமைக்கு முன்னம்தான் தெரியும். எனக்கு முந்தநாள்தான் தெரியும். அதுவும் வீட்டு ரெலிபோனுக்கு இந்த நம்பரில் இருந்து மெசேச் ஒன்று வந்தது என கந்தப்பர் ரெலிபோனையும் மெசேச் வந்த நம்பரையும் கொடுத்தார். உடனே பொலிஸ்கான்ஸ்ரபிள் ஒருவரை அழைத்து இந்த நம்பரை உடனடியா ரேஸ் பண்ண சொல்லிட்டு அடுத்த கேள்வியை கந்தப்பரிடம் பொலிஸ் ன்ஸ்பெக்ரர் கேட்டார்.

ஐயா அவா ஓடிட்டா என்டு என்னண்டு தெரியும் என கேட்க, வீட்டில தலகணிக்கடியில கடிதம் கிடந்தது. தானும் தான் விரும்பி கதைச்ச பொடியனும் இஸ்ரப்பட்டு திருமணம் செய்யப்போறம் அதால நான் இனிமேல் வரமாட்டன். என்ன தேட வேண்டாம் எண்டு எழுதி இருக்கு தம்பி. ஐயா நாங்க கண்டுபிடிச்சாலும் உடன உங்களிட்ட ஒப்படைக்க முடியாது. ஏன்னா பல சட்டச் சிக்கல் இருக்கு. முறைப்படி கேஸ் போட்டு கேஸ் மூலம் நீதிமன்றில சமர்ப்பித்து நீதிமன்ற ஆணைப்படிதான் எங்களால பிரிக்க முடியும் மற்றபடி சட்டரீதியா இடமில்லை. இப்பகூட இந்த நம்பரை றேஸ் பண்ணுறதுகூட சட்டப்படி பிழை. கோட்ஸ்




ஆணைப்படிதான் ஒருவரை றேஸ் பண்ணி ரெலிபோன் தொடர்புகளை வைச்சு கைதுசெய்ய முடியும். ஆனா மாஸ்ரருக்காக இப்படி செய்ய வேண்டி இருக்கு. இதுமட்டுமல்ல உங்கட பிள்ளை சட்டப்படி இன்னும் விவாக வயது எட்டலை எண்டு நீங்க சொல்லுறதை நம்பித்தான் நாங்கள் இப்ப தேடுதல்ல இறங்கி இருக்கிறம். சரி நீங்க பிள்ளையை நாங்க இப்ப பிரிச்சுதரலாம் வயசு வந்தாப்பிறகு பிள்ளை விருப்பப்பட்டபடி கட்டி வைப்பிங்கதானே என பொலிஸ் கேட்க ஐயோ தம்பி நாங்களும் அந்தப் பொடியனும் ஒரே சாதிதான். ஆனா நாங்க அடுத்தவன் வீட்டில செம்பு எடுக்காத உயர்ந்த சாதி. அந்த பொடியனின்ர சாதி குறைஞ்ச சாதி அந்த பொடி வீட்ட சம்பந்தம் வைச்சுகிட்டாலே என்ர சாதிக்காறர் என்னை மதிக்கமாட்டாங்கள். இப்ப நான் அடுத்தவர் அறிய முன்னம் பிரிக்க நினைக்கிறதே என்ர மீதி இரண்டு பொம்புளை பிள்ளையளின்ர வாழ்க்கை நாளைக்கு இந்தப் பிள்ளையால கேள்விகுறியாகிடும். அடுத்தவனுக்கு செய்தி தெரியாம என்ர மானத்தை காப்பாத்துங்க தம்பி பிளீஸ்.

ஐயா சாதி என்னையா சாதி "சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால் மேதினியில் இட்டார் பெரியார் இடாதார் இழிகுலத்தார் பட்டாங்கில் உள்ளபடி" என்று ஔவையார் சொல்லி இருக்கிறார் என்று எங்களுக்கு அடிக்கடி சொல்லித்தந்தவரே இந்த முருகேசு மாஸ்ரர்தான். அவரிட்டைக் கேளுங்க சாதியை மையப்படுத்தி இரண்டு காதலரை பிரிப்பது சரியா என பொலிஸ்காரன் கதைத்துக் கொண்டிருக்கும்போது பொலிஸ் கான்ஸ்ரபிள் ஒருவன் வேகமாக வந்து ஐயா அந்த நம்பரை ரேஸ் பண்ணி பார்த்ததில அது இப்ப முருகேசு மாஸ்ரரின்ர கிராமத்தை கடந்து போய்க்கொண்டிருக்கு என கூற அப்படின்னா நம்முடைய கட்டுப்பாட்டு எல்லைக்குள்தான் இப்பவும் இருக்கா. சரிவா அந்த லொக்கேசன் ஏரியாவை ஜி.பி.ஆர் எஸ் மூலம் பாரப்பம். அதுக்கு முதல் வீதி காவலுக்கு போன பொலிசுக்கு போன் போட்டு லொக்கேசன் ஏரியா பற்றி தகவல் குடுக்க ஏற்பாடு பண்ணு என்றபடி பொலிஸ் இன்ஸ்பெக்டர் அங்கிருந்து நகர என்ன சேர் இந்தாளின்ர கதைய பாத்தா என்ர மானம் காத்தில போகப் போகுது அப்பிடிப் போனா நான் நாளைக்கு தூக்கிலதான் தொங்கோணும் வள்ளுவரே சொல்லியிருக்கிறார். "மயிர்நீப்பின் வாழா கவரிமாவன்ன உயிர்நீப்பர் மானம்வரின்" உண்மையான மானமுடையவன், மானத்துக்கு அஞ்சி வாழ்பவன் தன்னுடைய மானத்துக்கு இழுக்கு வரும்போது கவரிமான் ஒரு மயிர் பிரிந்தாலும் இறப்பதைப் போல் இறக்க வேண்டும். ஆனால் என்னுடைய இரண்டு பொம்புளை பிள்ளையளும் அனாதரவாகிடும். வீட்டுத் தலைவன் இல்லையென்றால் சொத்து சீரழிந்து நாளைக்கு அதுகள் கஸ்ரப்படும் எண்டதுக்காகத்தான் நான் இன்னும் உயிரோட இருக்கிறன். இவ்வளவு ஏன் செய்திகேட்ட கையோட மருந்துப் போத்தலை எடுத்து குடிக்க எண்டு போக இவன்தான் அதை தட்டிவிட்டு என்ன சமாதானப்படுத்தி அங்கை இஞ்சை எண்டு கூட்டி கொண்டுபோய் கடைசியில உங்களிட்ட தேடி வந்து இஞ்ச வந்திருக்கிறேன் இதுக்குப்பிறகும். கோட்டு கேசு என்று என்னால அலையேலாது.

(தொடரும் .....)

# அரசகேசரியின் பதில்கள்



**கேள்வி:** ***கோத்தாவை கைது செய்யுமாறு மேலதிக சொலிஸிற்றர் ஜெனரல் வசந்த நவரட்ண பண்டார சட்டமா அதிபருக்கு பரிந்துரை செய்துள்ளாரே?***

**பதில்:** பரிந்துரை நிறைவேற்றப்படுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

முருகதாஸ், கோண்டாவில்.

**கேள்வி:** ***விசேட நீதிமன்றம் வேண்டாம் விடுதலைதான் வேண்டுமென தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனரே?***

**பதில்:** இந்த விடயம் செவிடன் காதில் சங்கு ஊதியதைப் போன்றதாகும்.

விஜயன், யாழ்ப்பாணம்

**கேள்வி:** ***நோர்வேயில் வசிக்கும் ஜெயபாலனுக்கு நல்லாட்சி அரசிலும் நுழைவிசைவு மறுக்கப்பட்டுள்ளதே?***

**பதில்:** கொம்பியூட்டரில் ஏதோ கோளாறு.

துஷீந்தினி, திருநெல்வேலி.

**கேள்வி:** ***இலங்கைக்கு படையெடுக்கவுள்ள ஐ.நா உயர் மட்டம் குறித்து?***

**பதில்:** சொல்வதற்கு ஒன்றுமே இல்லை.

நிரூஜன், வவுனியா



**கேள்வி:** ***இந்திய இராணுவத் தளபதியின் இலங்கை விஜயத்தின் நோக்கம் தான் என்ன?***

**பதில்:** இலங்கையைத் தன் பக்கம் ஒரேயடியாகவளைத்துப்போடத்தான்.

சிறிதரன், மண்டைதீவு.



**கேள்வி:** ***இலங்கை இல்லாத சீனாவின் பட்டுப்பாதை திட்டம் வெற்றியளிக்காது என சீன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளாரே?***

**பதில்:** சீனஅதிகாரி சொல்லியிருந்தால் சரியாகத்தான் இருக்கும்.

கிருத்திக்ஷன்,யாழ்ப்பாணம்.

**கேள்வி:** ***தமிழ் அரசியல் கைதிகளை விட மறுக்கும் அரசு தமிழரின் பிரச்சினையை தீர்க்குமா என சித்தார்த்தன் எம்.பி கேள்வி எழுப்பியுள்ளாரே?***

**பதில்:** சித்தார்த்தன் எம்பி க்கு வேறு வேலையில்லை.

சுரேஸ்குமார், அளவெட்டி

**கேள்வி:** ***யாழில் அதிகரிக்கும் எயிட்ஸ்?***

**பதில்:** யாழ்ப்பாணமும் ஏனைய பகுதிகளைப் பின்பற்றுகிறது என்பதுதான் அர்த்தம்.

கவிதாசன்,நீர்வேலி.

**கேள்வி:** ***இந்திய இராணுவத் தளபதியின் இலங்கை விஜயத்துடன் தமிழக மீனவர்களின் பிரச்சினைக்கும் தீர்வு காணப்பட வேண்டுமென கருணாநிதி கூறியுள்ளாரே?***

**பதில்:** முழங்காலுக்கும் மொட்டந்தலைக்கும் கருணாநிதி முடிச்சுப்போடுகிறார்.

கருணாகரன், கிளிநொச்சி.

**கேள்வி:** ***சுன்னாகம் நிலத்தடி நீர் இழுபட்டுச்செல்லும் தொடர் கதையா?***

**பதில்:** மக்களின் தாகம் வேகமாகின்றது.

கபிரா,சுன்னாகம்.

# சலரோக நோய் பாதிப்பு குறைக்கும் வழிகள்

தினந்தோறும் பாதங்களைக் காரத்தன்மை குறைந்த சவர்க்காரத்தைப் பயன்படுத்தி நன்றாகக் கழுவவும். பின்னர் மென்மையான துவாயினால் துடைக்கவும். துடைக்கும்போது விசேடமாகப் பெருவிரல் பகுதி விரல் இடைவெளிகளில் கவனம் செலுத்தவும் பாதங்களை உலர்வான நிலையில் பேணவும். ஆயினும் அதிகம் உலர்வான நிலை காணப்படுமாயின் வெடிப்புக்கள் ஏற்பட்டு பகறீரியாக்கள் பரவலாம்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் அதிக உலர்தலைத் தடுக்க lanolin or Waseline பாவிக்கவும். களிம்புகள் படுக்கை விரிப்பில் படுவதைத் தடுப்பதற்காகப் பழைய காலுறையை அணிந்து கொள்ளவும்.

இயல்பாகவே கால்களில் அதிக வியர்வை உள்ளவர்களின் பாதங்கள் அதிகம் ஈரலிப்புத் தன்மை உடையவையாகக் காணப்படும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் முகத்துக்குப் பாவிக்கும் முகப்பவுடரைப் பாவித்து பாதங்களை உலர்வாகப் பேணவும்.

மேலும் நகங்கள் வெட்டும்போது நேராக வெட்டவும். மூலைப்பகுதியில் வளைவானதாகக் காணப்பட்டால் நகங்கள் உள்நோக்கி வளரக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமாக ஏற்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் மூலைப் பகுதியில் சிறு பஞ்சை உயர்த்தி வைப்பதன் மூலம் நகத்தை வெளிநோக்கி வளரச்செய்யலாம்.

மிகவும் கடுமையான உடையக்கூடிய நகங்கள் எனின் அவற்றை மென்மையாக்குவதற்குப் பஞ்சுத் துண்டுகளில் தோய்க்கப்பட்ட கனிய எண்ணெய்களை நகங்களை வெட்டுவதற்கு 20 நிமிடங்களுக்கு முன்னர்இடவும். இதன்பின்னர் இலகுவாக நகங்களை வெட்டலாம்.

ஒவ்வொருநாளும் பெருவிரல் பகுதியில் சிவப்பு புள்ளிகள் புண்கள் கொப்பளங்கள், கண்டல்கள் என்பன காணப்படுகின்றனவா எனப் பரிசோதிக்கவும். மேலும் கால்களின் பகுதியின் நிறம், வெப்பநிலை என்பவற்றையும் அவதானிக்கவும். காலின் அடிப்பகுதியை அவதானிப்பதற்குச் சிறிய தளவாடியை உபயோகிக்கவும். பாதப் பகுதியில் வெடிப்புக்கள் காணப்படுமாயின் அடிக்கடி இளஞ்சூட்டு நீரினால்காரத்தன்மை குறைந்த சவர்க்காரத்தைப் பாவித்துக் கழுவவும்.

பாதணிகளைத் தெரிவு செய்யும்போது அதிகம் இறுக்கம் இல்லாமலும் அதிகம் தளர் வில்லாமலும் சரியான அளவில் தெரிவுசெய்யவும்.

மேலும் பாதணிகளைத் தெரிவு செய்வதற்கு மாலை நேரங்களையே பயன்படுத்துவது சிறந்தது. பாதப் பகுதியில் அதிகளவு அமுக்கம் ஏற்படுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்கு அதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட சப்பாத்தை (shoe) பாவிக்கவும்.

பாதப்பகுதியில் கண்டல்கள், ஆணிக்கூடு, நோ வீக்கம் என்பன காணப்படின் தகுந்த வைத்திய ஆலோசனை பெறவும். புதிதாக வாங்கிய சப்பாத்தை அணியும்போது முதல்நாள் ஒரு மணித்தியாலத்துக்கும் மறுநாள் இரண்டு மணித்தியாலத்திற்கும் என படிப்படியாக அணியும் நேரத்தை அதிகரித்துச் செல்லவும். கூரான முனையுள்ள சப்பாத்துக்களை அணிவதைத் தவிர்க்கவும். சப்பாத்துக்களை மாற்றி மாற்றி அணிவது சிறந்தது.

முதல்நாள் பாவித்த சப்பாத்தை நன்கு உலர விட்டு மறுநாள் அணியலாம். சப்பாத்துக்களை பகல் நேரங்களில் அடிக்கடி கழற்றி மீளவும் அணிந்து கொள்ளவும். இதன் மூலம் பாதங்கள் சௌகரியமாக இருப்பதுடன்போதிய குருதி விநியோகத்தையும் பெறும்.

உட்புறம் உள்ள மென்மையான போர்வைகள் பழைய சப்பாத்துக்கள் அணிவதைத் தவிர்க்கவும். எக்காரணம் கொண்டும் சப்பாத்துக்களோ அல்லது பாதணிகள் இன்றி வெறும் காலுடனோ நடப்பதை தவிர்க்கவும்.

மேலும் சப்பாத்துக்களை அணிய முன்னர் அதன் உட் பகுதியில் முள், சிறுகற்கள் போன்றன. காணப்படுகின்றனவா என்பதை பரிசீலிக்க வேண்டும். காலுறைகளைத் தெரிவு செய்யும் போது பருத்தியினால் அல்லது கம்பளித் தன்மையானதாகக் காணப்படின் அது விரைவாக ஈரத் தன்மையை உறிஞ்சக் கூடியதாக காணப்படும்.

ஒவ்வொரு நாட்களும் வெவ்வேறு காலுறைகளை மாற்றிமாற்றி அணிவதன் மூலம் பக்றீரியாக்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாம்.

அடிக்கடி இருக்கும் நிலையில மாற்றம் ஏற்படுத்த வேண்டும். நீண்டநேரம் காலின் மேல் கால் போட்டிருப்பதனால்(cross legs) காலின் கீழ் பகுதிக்கான குருதி விநியோகம் தடைப்படும். இவ்வாறான நிலையில் கீழ்ப்பகுதி விறைப்புத் தன்மையாக மாறி காயங்கள் ஏற்படுவது தெரியாமல் நிகழலாம்.

காலின் எப்பகுதியிலும் குருதி விநியோகம் குறைந்து நீலநிறமாக மாறினால் அல்லது கறுப்பு நிறமாக மாறினால், அதிகளவு குளிர்வாகக் காணப்பட்டால் உடனடியாக வைத்திய ஆலோசனை பெறவேண்டும்.

உங்களது பாதங்களை நீங்கள் வாங்கி வைத்திருக்கும் ஒரு வசதி நிறைந்த நவீன (car) காரைக்கவனிப்பதைப் போன்று கவனிக்க வேண்டும். கால்களுக்கு ஒவ்வொரு நாளும் 20–30 நிமிடம் வரை அப்பியாசம் கொடுத்தல் வேண்டும்.

இதன்மூலம் குருதி விநியோகத்தை அதிகரிக்க முடியும் சரியான உணவுப் பழக்கத்தையும், நீரிழிவு நோய்க்குரிய மருந்துகள் இன்சுலின் என்பவற்றையும் ஒழுங்காக எடுப்பதன் மூலமும் சீரான வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்வதன் மூலமும் சலரோகத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கலாம். எனவே பாதங்களைச் சீரானமுறையில் பேணி எமது ஆயுட்காலத்தை அதிகரித்துக் கொள்வோமாக.


-கோ.நந்தகுமார்-
விரிவுரையாளர்,
தாதியர் பயிற்சிக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.


# கிரமமான மருந்துப்பாவனை

தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் மருந்துகளைப் பாவிப்பது கடினமான விடயம் என்றால் பிழையாகாது. அது எவ்வளவு கடினமானதோ அவ்வளவு முக்கியமானதும்கூட சலரோகம், உயர்குருதி அமுக்கம், வலிப்பு, நரம்புத் தளர்ச்சி போன்ற நோய்களுக்கு நீண்ட காலம் மருந்து பாவிக்க வேண்டி இருக்கின்றது. ஆனால், கணிசமான எண்ணிக்கையான நோயாளிகள் மருந்துகளை ஒழுங்காகப் பாவிப்பதில் கவனக் குறைவாக இருக்கின்றனர்.

***இதற்கான முக்கிய காரணங்களாவன:***

* மருந்துகளின் அவசியத்தை உணராமை.
* நோயாளியின் குடும்ப உறுப்பினர்கள் கவனயீனமாக இருத்தல்.
* மருந்து பாவிக்கும் முறை பற்றியும், அதன் அவசியம் பற்றி உரிய விளக்கம் அளிக்கப்படாமை.
* வைத்தியசாலையில் இல்லாத மருந்துகளை வெளியில் வேண்டும்பொழுது அதிக செலவாகின்றமை.
* பெண்களுக்கு குடும்பச் சுமை அதிகமாக இருத்தல்

**மருந்துகளை ஒழுங்காகப் பாவிக்காமல் விடுவதால் ஏற்படும் விளைவுகள் மிகவும் பாரதூரமானவையாகும்.**


**உதாரணமாக:** சலரோகத்துக்குப் பாவிக்கவேண்டிய மருந்து ஒன்றைப் பாவிக்காமல் விடுவதால் சலரோகம் கட்டுப்பாட்டுக்கு வருவதில்லை. நோயைக் கட்டுப்படுத்துவதற்காக வைத்தியர் மருந்துகளின் அளவைக் கூட்ட நேரிடுகிறது. இதனால் நோய் குணமடையாமல் விடுவதோடு மருந்துகளின் பக்க விளைவுகளினால் நோயாளி பாதிக்கப்படுகின்றார்.

இதைத் தடுப்பதானது நம் அனைவரினதும் கரங்களிலேயே உள்ளது. இதனைத் தடுப்பதற்கு என்ன செய்யலாம்? —

பாவிக்கும் மருந்துகளின் அவசியத்தையும், அவை ஒவ்வொன்றையும் என்ன அளவுகளில் பாவிக்க வேண்டும் என்பதையும் வைத்தியரிடம் இருந்து அறிந்துகொள்ள வேண்டும்.

நோயாளி தானாக இவற்றைச்செய்யமுடியாதவராயின், நோயாளியின் குடும்பத்தினரோ அல்லது உறவினரோ இவற்றைப்பற்றிப்பூரணமாக அறிந்து கொள்ளவேண்டும்.

ஒவ்வொருவகையான மருந்துகளையும் தனித்தனியே சிறிய போத்தல்களில் போட்டு, போத்தலில் மருந்தின் பெயரையும், பாவிக்கும் அளவையும் குறித்துவைக்க வேண்டும். அடுத்த தடவை மருந்தாளரிடம் போத்தல்களைக் கொடுத்து மருந்தைப் பெற்றுக்கொள்ளலாம்.




வைத்தியசாலையில் இல்லாத மருந்துகளை வெளியில் வேண்டும்போது விலை அதிகமாக இருப்பின் ஒரே தடவையில் நீண்ட காலத்துக்கு மருந்துகளை வேண்டாமல் குறுகிய இடைவெளியில் மருந்துகளை வேண்டலாம்.

ஒவ்வொரு நாளும் குறித்த நேரத்துக்கு மருந்துகளை உட்கொள்ள வேண்டும்.

குறித்த ஒரு நோய்க்குப் பல இடங்களில் வைத்தியம் செய்வதைத் தவிர்த்தல் அவசியமானது. மருந்துகளினால் பக்கவிளைவுகள் உருவாகுமிடத்து தன்னிச்சையாக மருந்துகளைப் பாவிக்காமல் விடுவதைவிட வைத்தியருடன் கலந்தாலோசித்து வேறு மாற்று மருந்துகளைப் பாவிக்கலாம்.

மேற்சொன்ன விடயங்களைக் கடைப்பிடிப்பதன்மூலம், மருந்துகள் ஒழுங்கீனமாகப் பாவிப்பதைத் தவிர்க்கலாம். ஒரு நோயாளி மருந்துகளை ஒழுங்காகப் பாவிப்பது நோயாளி, வைத்தியர், மருந்தாளர், தாதியர், முக்கியமாகக் குடும்ப உறுப்பினர்கள் எனப்பலரிலும் தங்கியுள்ளது.

மருந்துகளை ஒழுங்காகப் பாவித்து நோயற்ற வாழ்வை அனுபவிப்போம்.

"மருந்து கால் மதி முக்கால்"


R .எஸ். வருண்பிரசாந்,
விடுதி வைத்தியர்,
யாழ். போதனா வைத்தியசாலை.


# கேள்விக்கு என்ன பதில்

எனக்கு வயது ٦٥. சிறிது காலமாக எனக்கு முதுகுவலியும், முழங்கால் மூட்டு வலியுமாக உள்ளது. கல்சியம் மாத்திரைகள் அல்லது கல்சியம் உள்ள பால்மா வகைகள் எதாவது பாவிக்கலாமா?

கல்சியமானது உடலுக்கு மிகவும் அதியாவசியமான கனியுப்பாகும். இது என்புகளின் உருவாக்கம். தசைச்சுருக்கம், நரம்பு கணத்தாக்கம், ஓமோன் சுரப்பு, நரம்பு, மூளை போன்றவற்றின் தொழிற்பாடுகளுக்கு அத்தியாவசியமானதாக உள்ளது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் நீரில் அதிகளவு கல்சியம் காணப்படுகின்றது. எனவே அன்றாடம் உள்ளெடுக்கும் நீரின்மூலமாகவும், உணவின் மூலமாகவும் உடலுக்குப் போதுமான கல்சியம் கிடைக்கின்றது.

பால், பால் உற்பத்திப் பொருள்களான யோக்கட், சீஸ், மீன், முட்டை, மரக்கறிவகை, தானியவகை, பழச்சாறு என்பவற்றில் போதியளவு கல்சியம் காணப்படுகின்றது. எனவே கல்சியம் கூடிய அளவுகளில் உள்ள பால்மா வகைகளையும், மாத்திரைகளையும் பாவிக்கவேண்டிய அவசியம் பொதுவாக இல்லை.

நாளொன்றுக்கு உடலுக்குச் சராசரியாகத் தேவையான கல்சியத்தின் அளவு 1000 – 1300mg ஆகும். சாதாரணமாகக் குருதியில் உள்ள கல்சியத்தின் அளவு 8.5 – 10.2mg/dl ஆகும். கல்சியம் அதிகளவு உள்ள பால்மா வகைகளையோ அல்லது மாத்திரைகளையோ உள்ளெடுக்கும்போது கல்சியமானது இரத்தக்குழாய்கள், மென் இழையங்கள் போன்றவற்றிற் படிவடைகின்ற தன்மை அதிகரிக்கின்றது.

இருதயக் குருதிக் குழாய்களிற் படிவதன் மூலம் மாரடைப்புப் போன்ற ஆபத்தான நிலைகளும், சிறுநீரகங்களில் தொடர்ந்து படிவதன் மூலம் சிறுநீரகக் கற்கள் உருவாகின்ற நிலையும் ஏற்படுகின்றது.

கல்சியம் மாத்திரைகள் வேறு சில மருந்துகளுடன் இடைத்தாக்கத்தில் ஈடுபடுவதன் மூலம் அவற்றின் செயற்றிறனைப் பாதிக்கின்றது. அதுபோல் சிலவகை மருந்துகளின் அகத்துறுஞ்சலையும் பாதிக்கின்றது.

சில நோய்களைப் பொறுத்தமட்டில் ( உதாரணம் – Osteoporosis) மேலதிகக் கல்சியமானது தேவைப்படுகின்றது. எனவே கல்சியம் மாத்திரைகளை மருத்துவர்களின் ஆலோசனையின்றிப் பாவிப்பதைத் தவிர்த்துக்கொள்வது நன்று.

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# லங்கா ராணி ...

முத்தையாவின் முகத்தை வியர்வைத் துளிகள் நிரப்பியிருந்தன. அவர் ஆவேசமாகப் பேசும்போது பார்ப்பவர்கள் அவரின் பேச சால்தான் வியர்க்கிறது என்று நினைக்க வேண்டி இருந்தது. அடுப்பு வெக்கையும் சாம்பாரில் இருந்து கிளம்பிய ஆவியும்தான் அவரின் வியர்வைக்கு காரணம். முத்தையாவிற்கு நாற்பது வயது இருக்கும். கறுத்த உருண்ட உருவம். அதற்கேற்றவாறு உயரம். பெரிய மீசையை முறுக்கி விட்டிருந்தார்.

"இதுமனுசனை கொல்லுற விஷயமில்லை. அநீதியையும் அக்கிரமத்தையும் அழிக்கிற விஷயம். அது மனித உருவில் வந்தால் மனிதனையே அழிக்கவேண்டும். இரக்கம் காட்டுறது பாவம் தம்பி. அவனை விட்டு வைச்சால் உன்னையே உயிரோடு விழுங்கி விடுவான்."

சாம்பாரை அகப்பையால் துளாவிக் கொண்டே பேசினார். இளைஞர் கதவை மூடி கதவில் சாய்ந்துகொண்டு மடித்து ஒரு காலை பொறுப்பாக கதவில் வைத்துக்கொண்டு மேலும் கேள்விகளைப் போட்டவண்ணம் நின்றான்.

"தம்பி அந்த பத்துப்பேர், நாலுபேர் கதையை விட்டுப்போடு அது இந்தக் காலத்திற்கு ஒத்து வராது. இதென்ன வரிசையில் விட்டுப்போட்டு அடிபடுகிறதா?"

"முத்தையா அண்ண...." முத்தையா பையனின் முகத்தைப்பார்த்தார்.

"நீங்கள் ஜனாதிபதியாய் வருகிறீர்கள் எண்டு வைப்பம் என்ன செய்வீர்கள்.?"

முத்தையா இந்தக் கேள்வியால் திணறிப் போனார். பாத்திரத்தில் சுற்றி வலம் வந்து கொண்டிருந்த அகப்பையை மத்தியில் நிறுத்தி இரண்டுகைகளாலும் அதைப் பிடித்து சற்று குனிந்து யோசித்த பின் நிமிர்ந்து இளைஞன் முகத்தைப்பார்த்தார். இளைஞன் பதிலை எதிர்பார்த்துத் தனது கேள்வித் திறனை நினைத்து புன்முறுவல் பூத்தான். முத்தையா கதைத்தார்.

"போம் அடிச்சு கொடுப்பன், முதலில் அதுதான் எல்லோருக்கும் இந்த தந்தி மணி ஓடர்மாதிரி ஒரு போம்: பத்திரம்"

"சரி"

"அதில என்ன இருக்குமெண்டா, நாடு பிரியப்போகுது ஒருபகுதியில் தமிழ்மற்றப் பகுதியில் சிங்களம். யார் யார் தமிழ்நாட்டில் இருக்க விரும்புறீங்க, எழுது யார்யார் சிங்கள நாட்டில இருக்கப்போறீங்க, எழுது, வாங்கி எல்லாத்தையும் எழுதிப் பார்ப்பன். அடுத்தது கணக்கு இந்த நாட்டில் இத்தனை பேர் தமிழ் நாட்டுக்கு வரப்போற இத்தனை பேருக்கும் இத்தனை சதுரமைல்.

"பிறகென்ன அளக்க வேண்டியதுதானே. இடமா இல்லை வடக்கு, கிழக்கு, பதுளை, பண்டாரவளை."

"இல்லை, இல்லை மலைநாடு தேவையில்லை."


"தம்பி பதுளை பண்டாரவளையில்லை, அதுக்கு மேலேயும் அளப்பன். நுவரெலியா, மஸ்கெலியா, அப்புத்தளை நேரபொத்துவில் மட்டும் அளப்பன். இந்த நாட்டுக்கு ஆயிரம் இரண்டாயிரம் வருடத்திற்கு சரித்திரம் இருக்கலாம். ஆனால் இந்த நாட்டில் இருக்கிற மக்களின் உரிமைகளைப்பற்றி பேசவேண்டுமெண்டால் 1948இல் இலங்கை சுதந்திரமடைந்ததில் இருந்து தான் தொடங்குது. அன்றைக்கு யார் யார் இந்த நாட்டு மக்களாக கருதப்பட்டு வாக்குரிமை பெற்றாங்களோ அவர்கள் எல்லோருக்கும் இந்த நாடு சொந்தம். அதுக்கு மேலே யாருக்கும் இருக்குமெண்டால் அது வெள்ளைக்காரனோட பேசித் தீர்த்திருக்க வேண்டிய விடயம். அவன் இருக்கு மட்டும் பதுங்கி இருந்துபோட்டு அவன் அங்காலபோக எழும்பி நிண்டு வீரம்பேசுறது சரி வருமா?

"பிறகு"

"பிறகென்ன இந்தக் குடியேற்றங்கள் திருகோணமலையில் வீடுகள் எல்லாம் சும்மாதானே கிடக்கும்போய் இரன்"

"பிறகு உங்கடபாடு"

"அதுக்குப்பிறகு எனக்கென்ன தம்பி நான் சோத்துக் கடைக்காரன் கொழும்பில் இருக்கிறத கொண்டுபோய் திருக்கோணமலையில் போடுவன். ஒன்றாக இருக்க ஏலாதெண்டால் பிரியவேண்டியதுதானே.சரி தம்பிமாரே, இப்ப என்ன மாதிரிசாப்பாடு கொடுக்கப் போறீங்க? குமாரைப்பார்த்தார்.




இதுவரை முத்தையாவின் அரசியல் கருத்துக்களில் சிந்தனையைபறிகொடுத்திருந்த குமார் வெளியேறி தளத்திற்கு வந்தான். பீங்கான் கழுவும் வேலையும் முடிந்திருந்தது.

சற்று முன்பு நேராக வீசிய காற்று தற்போது பக்கவாட்டில் வீசியது. கப்பல் திரும்பி வடக்கு நோக்கி தனது பயணத்தை தொடர்நதது தெரிந்தது. கப்பலின் தளத்தில் பலர் நின்றுகொண்டிருந்தனர். கீழ்த்தளங்களிலும் சூரியஒளி நேராக வீழ்ந்ததனால் வெளிச்சமாக இருந்தது. குமார் மேல்தளத்தில் நின்றவர்களைச் சாப்பாடு பரிமாற இருக்கின்றபடியால் இடங்களில் போய் அமருங்கள் என்று கூறினான். பலரும் படிகளில் இறங்கி தமது இருப்பிடங்களுக்குச் சென்றனர். உணவு பரிமாறுவதற்கு துணையாக பல வளாக மாணவர்கள் தயாராகிக்கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் எப்படி பரிமாறலாம் என குமாருக்கு ஆலோசனை தெரிவித்துக்கொண்டிருந்தான்.

டாக்டர் நற்குணம் குமாரிடம் உணவு பரிமாறல் குறித்து கேட்டறிந்து கொண்டார்.

மாணவர்கள் ஒவ்வொருவராக படிகளில் உட்கார்ந்துகொண்டனர். மேல் நிற்பவர்களில் ஒருவர் தட்டில் ஊற்றி ஒருவரிடம் கொடுக்க அவர் கீழ் இருப்பவரிடம் கொடுத்தார். சாப்பாட்டுத் தட்டு ஒவ்வொருவராக கைமாற்றப்பட்டு கீழ்தளத்தை சென்றடைந்தது. அங்கும் மாணவர்கள் வரிசையில் நின்று தளத்தின் பல பகுதிகளுக்கும் சாப்பாட்டுத் தட்டை எடுத்துச் சென்றார்கள். பாணையும் பரிமாறினார்கள் ஒவ்வொரு வாழைப்பழமும் வழங்கப்பட்து.

கப்பலின் மற்றொரு கீழ்தளத்தில் சரவணனின் நண்பர்கள் பேச்சில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இந்தத் தளத்தில் காலை பத்து மணிக்கு காலை உணவு பரிமாறியிருந்தார்கள். நீர்கொழும்புக்கடையில் வேலை பார்த்த இளைஞர்கள் இருவர், வளாக மாணவர் நால்வர், கொழும்பைச் சேர்ந்த இளைஞர்கள் இருவர் என எல்லாமாக பத்துப் பேர் இருந்தனர். ஆவட்டியுடன் இருந்த இளைஞன் பல கேள்விகளைக் கேட்டு எல்லோருடைய அபிப்பிராயத்தையும் அறிந்தபின் பல பிரச்சினைகளை எழுப்பி விவாதத்தில் ஈடுபட்டனர். யார் எதிரிகள் என்பதே பிரச்சினை.

பொலிசார், இராணுவத்தினர்பற்றி ஒருவன் கேட்டான். இதற்கு இளைஞன் பதில் கூறத் தொடங்கியதும் தமிழாராய்ச்சி மாநாட்டு நிகழ்ச்சியைப்பற்றி, சிவகுமாரனைப்பற்றி வேறு பல நிகழ்ச்சிகளைப்பற்றியும் கூறும்படி ஒவ்வொருவரும் கேட்டனர். முதலில் இருந்து தொடங்குகிறேன் என்று கூறி வேட்டியுடன் இருந்த இளைஞன் சரித்திரத்தை தொடங்கினான்.

"இலங்கைக்கு 1948 இல் சுதந்திரம் கொடுத்து விட்டு ஆங்கிலேயன் சென்றதும் சிங்களவர்களால் மலையகத்தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமைபறிக்கப்பட்டது. சிங்களத்தை நாட்டின் ஒரே தேசிய மொழியாகவும் அரச கரும மொழியாகவும் ஆக்கினார்கள். இலங்கையில் மூன்றில் ஒரு பகுதியினர் தமிழர்கள். தனிச் சிங்களச்சட்டத்தை எதிர்த்து தமிழ்த்தலைவர்கள் பாராளுமன்றத்தின் முன்பு சத்தியாக்கிரகம் செய்தனர். அவர்கள் மீது காடையர்களை ஏவித் தாக்கினார்கள். இவ்வாறு அகிம்சை முறையிலான போராட்டங்களை கணக்கில் போட்டுக்கொள்ளாமல் சிங்கள அரசியல்வாதிகள் தமிழ் ஒழிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தினர். பொலிசாரும், இராணுவத்தினரும் அவர்களுக்கு உதவியாக இருந்தனர். தமிழ்ப்பகுதிகளில் ஏராளமான குடியேற்றங்கள். எங்கும் சிங்களவருக்கு முதலிடம். அரசாங்க உத்தியோகத்தில் இருப்பவர் எத்தனை வயதாக இருந்தாலும் எத்தனை ஆண்டுகள் சேவையில் இருந்தாலும் எந்த உயர் பதவியில் இருந்தாலும் அவர்கள் சிங்களம் படித்தால்தான் சம்பள உயர்வு, பதவி உயர்வு என்றாயிற்று. சிங்களம் தெரிந்தால்தான் அரசாங்க வேலைகள். சிங்களம் படிப்பதற்கு காலக்கெடுவும் கொடுக்கப்பட்டது. இதனால் பல தமிழர்கள் பதவியில் இருந்து விலகி வெளிநாடுகளுக்குச் சென்றார்கள். தமிழ்ப்பகுதிகளில் உயர்பதவிகள் எல்லாம் சிங்களவர்கள் கைகளுக்குச் சென்றன. இதோடு நிறுத்திக் கொள்ளாமல் தமிழரின் உயர்கல்வியிலும் கைவைத்தார்கள். தமிழர்களை ஒதுக்கும் நடவடிக்கையில் ஒன்றாக தரப்படுத்தல் முறை மூலம் இளைஞர்கள் மேல் படிப்பு மறுக்கப்பட்டு அவ்விடங்களைச் சிங்கள மாணவர்களால் நிரப்பியிருந்தனர். தமிழர் கெட்டித்தனமாகப் படித்து பல்கலைக் கழகம் புக முடியவில்லை.

இவ்வேளையில் சிவகுமாரன் என்னும் இளைஞன் தோன்றி அகிம்சைமுறை, சாத்வீகமுறைப் போராட்டமுறைகளில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தினான்.

சிறிமாவோ அரசாங்கத்தின் உதவி மந்திரி ஒருவர் யாழ்ப்பாணம் உரும்பிராய் என்னும் இடத்திற்கு வருகிறார். கூட்டம் முடிந்து திரும்பும்போது காரின் பினபுறம் வெடித்துச் சிதறுகிறது. ஒரு மாதத்தின் பின்பு அவரும் இறந்து விடுகின்றார். சலுகைகளின் மூலம் தமிழரின் ஒரு சிலரைத் தங்களின் அரசியல் பிரதிநிதிகளாக்க அரசு படாதபாடுபடுகின்றது. ஒருசிலர் இந்த வலையில் விழுந்தும் விடுகின்றனர். இப்பட்டம் பெற்றவர்களில் முக்கியமானவர்கள் அரசில் மந்திரியாக இருந்த குமாரகுலசூரியரும் யாழ்ப்பாணமேயராக இருந்த அல்பிரட் துரையப்பாவுமாவார். துரையப்பா காரை நிறுத்திவிட்டு உணவு விடுதிக்கு சென்றுவிட்டு திரும்பிக்கொண்டிருந்தார். அவர் காரில் ஏறுவதற்கு இரண்டு நிமிடங்களுக்கு முன்பே கார்வெடித்து சுக்கு நூறாகின்றது. மயிரிழையில் உயிர்தப்புகின்றார். சந்தேகத்தின்பேரில் சிவகுமாரனைப் பிடித்து சிறையில் அடைத்துவிடுகின்றனர். சித்திரவதை செய்கின்றனர்.

**தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து தமிழ்த்தலைவர்கள் பாராளுமன்றத்தின் முன்பு சத்தி யாக்கிரகம் செய்தனர். அவர்கள் மீது காடையர்களை ஏவித் தாக்கினார்கள். இவ் வாறு அகிம்சை முறையிலான போராட்டங்களை கணக்கில் போட்டுக் கொள்ளாமல் சிங்கள அரசியல்வாதிகள் தமிழ் ஒழிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தினர். பொலிசாரும், இராணுவத்தினரும் அவர்களுக்கு உதவியாக இருந்தனர். தமிழ்ப்பகுதிகளில் ஏராளமான குடியேற்றங்கள். எங்கும் சிங்களவருக்கே முதலிடம்.**

72 மே மாதத்தில் சிறிமாவோ அரசு இலங்கையை ஒரு பௌத்த சிங்கள குடியரசாக பிரகடனப்படுத்துகின்றது. தமிழ்த் தலைவர்கள் அரசியல் அமைப்பை எதிர்க்கின்றார்கள். எரிக்கின்றார்கள். துண்டுப்பிரசுரம் விடுகின்றார்கள். பாராளுமன்றத்தை புறக்கணிக்கிறார்கள். காந்தியமுறையில் போராட்டத்தில் இறங்குகின்றார்கள். அரசு செவிசாய்க்க மறுக்கின்றது. வடக்கு கிழக்கில் இராணுவமும் பொலிசாரும் வந்து குவிகின்றன. எழுபது இளைஞர்கள் சிறையில் தள்ளப்படுகின்றார்கள். நான்கு மாதங்களுக்குப் பின் விடுதலை செய்யப்படுகின்றார்கள்.

சிவகுமாரனை அநுராதபுரம் சிறையில் வைத்திருந்தார்கள். பதினான்கு நாட்களுக்கொருமுறை யாழ்ப்பாணம் கொண்டுவருகிறார்கள். சிறையில் மற்ற இளைஞர்களையும் சந்திக்கின்றான். இளைஞர்கள் ஒவ்வொருவராக விடுதலையாகின்றனர். இளைஞர்களின் மனக்குமுறல் ஓய்ந்தபாடில்லை. துரோகிகளின் பட்டியல் நீண்டுகொண்டு போகின்றது. தாக்குதல் செய்கிறார்கள்.

(தொடரும் .....)

# பெண்கள் மீதான வன்முறை

## ஒரு நோக்கு



**பாலியல் தொந்தரவு**

தாக்குதலை, குற்றவியல் அதிகாரத்தை அல்லது சொற்களை அல்லது செயற்பாடுகளைப் பயன்படுத்தி பாலியல் தன்மையொன்றின் வரவேற்கப்படாத செயற்பாடொன்றே பாலியல் தொந்தரவு என்பதுடன், இது தொந்தரவு செய்யப்படும் நபருக்கு தொல்லையையும், மனவலியையும் விளைவிக்கின்றது.

பெறுனருக்கு சட்டமானது வரவேற்கத்தக்கதல்ல, இழிவுபடுத்துகின்றது, வெறுக்கத்தக்கது, அருவருக்கத்தக்கது. அத்துடன் விலக்கி வைக்கின்றது என்ற போதிலும், அதைப் பாராட்டுதலாக, தீங்கற்றதாக, கேலியானதாக 'வழமையானதாக' அத்துடன் புகழ்ச்சியைப் பதாகக்கூட குற்றமிழைப்பவர் நோக்கக்கூடும். இருந்தபோதிலும், பாலியல் தொந்தரவு குறித்த சட்டம் வரவேற்கத்தக்கதே.

குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் இடையில் தனிப்பட்ட அல்லது பொது வாழ்க்கையில் அத்துடன் வேலைத்தளத்தில், பொது இடங்களில் மற்றும் போக்குவரத்தில் பாலியல் தொந்தரவு இடம்பெறலாம். ஆண்களும், பெண்களும் குற்றமிழைத்தவர்களாக விளங்கலாம்.

**எது பாலியல் தொந்தரவில் அடங்குகின்றது?**

வேலைத்தளத்திலும் பொதுப் போக்குவரத்திலும் பாலியல் தொந்தரவு பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்:

* வரவேற்கத்தகாத உடல் ரீதியிலான தொடர்பும், அணுகுதலும்.

* செவிமடுக்கும் நபரை அசௌகரியமாக்கும் பாலியல் தன்மையொன்றின் சொற்கள் அல்லது கருத்துக்கள்.

* அசிங்கமான பகிடிகள் மற்றும் ஆபாசமான விதத்தில் நடத்தல்.

* ஆபாசப் படங்களைக் காட்டுதல்.

* பாலியல் சலுகைகளை வற்புறுத்திக் கேட்டல் அல்லது வேண்டுதல்.

* துஷ்பிரயோகத்திலான தனிப்பட்ட அத்துடன் அல்லது ஆபாசமான 'ஈமெயில்'களையும், புகைப்படங்களையும் விநியோகித்தல்.

* பாலியல் தன்மையைக் கொண்ட ஏதாவது வேறு வரவேற்கப்படாத உடல்ரீதியிலான, வாய்மொழியிலான அல்லது வாய்மொழி சாராத நடத்தை.

**தொழில் வழங்குனரினதும், நிறுவனங்களினதும் பொறுப்பு**

தொழில் வழங்குனர்களும், அதிகாரத்தில் உள்ள பொறுப்பான நபர்களும் மற்றும் நிறுவனங்களைச் சார்ந்தவர்களும் பின்வருவன மூலம் பாலியல் செயற்பாடுகளைத் தடுப்பதற்கு அல்லது நிறுத்துவதற்கு சட்டபூர்வரீதியில் கட்டுப்பட்டுள்ளனர்:

* பாதுகாப்பான வேலை செய்யும் சூழலொன்றை வழங்குதல்.

* வேலைத்தளத்தில் நடத்தையினதும், வழக்கங்களினதும் நியதியொன்றைத் தாபித்தல்.

* பாலியல் தொந்தரவுக்கு எதிராக உடனடியான நடவடிக்கைகளை எடுத்தல்.

* முறைப்பாடுகளை இரகசியமாகக் கருதுதல்.

**பாலியல் தொந்தரவை முறையிடுதல்**

* பொதுப் போக்குவரத்தில் பாலியல் தொந்தரவு இடம் பெற்றால் போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு முறையிடப்படலாம்.

* கல்வி கற்கும் இடங்களில் பாலியல் தொந்தரவு இடம் பெற்றால், விசாரணையொன்றுக்கும், நடவடிக்கையொன்றுக்கும் அதிபருக்கு, பீடாதிபதிக்கு, பதிவாளருக்கு அல்லது பணிப்பாளருக்கு அதை முறையிடுங்கள். பாலியல் தொந்தரவு மீது சட்டக் கோவையொன்றை ஒரு பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம் கொண்டிருக்கலாம். இத்தயைதொரு சட்டக்கோவை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா என்பதைச்சரிபார்ப்பதுடன், அப்படியிருந்தால் வழங்கப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றுங்கள்.

* இதேபோல கல்வி நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், நீங்கள் பொலிசில் முறைப்பாடு செய்யலாம்.

* வேலைத்தளத்தில் பாலியல் தொந்தரவு இடம்பெற்றிருந்தால், உங்கள் மேற்பார்வையாளருக்கு அல்லது மனிதவள முகாமையாளருக்கு அல்லது ஏதாவது வேறு அதிகாரங்கொண்டவருக்கு முறைப்பாடு செய்யுங்கள். தொந்தரவு குறித்த கொள்கையொன்றை கம்பனி அல்லது நிறுவனம் கொண்டிருந்தால், அதுபற்றிய நடைமுறையைப் பின்பற்றுங்கள். அதேவேளை பொலிசிலும் நீங்கள் முறைப்பாடு செய்யலாம்.

* அங்கீகாரம் பெற்ற மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து விரைவிலேயே மருத்துவ பரிசோதனையை மேற்கொள்ளுங்கள். ஏதாவது தலைமயிர், உடல் திரவங்கள், தசைநார்கள் மற்றும் வேறு சான்று இருந்தால், அவற்றைச் சேகரிப்பதற்கான கடமையொன்றை மருத்துவ உத்தியோகத்தர் கொண்டுள்ளார். ஏதாவது பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் இருந்தால் சட்ட மருத்துவ உத்தியோகத்தருக்கும், பொலிசுக்கும் அறிவிப்பதற்கான கடமையொன்றை மருத்துவ உத்தியோகத்தர் கொண்டுள்ளார்.

* அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்யுங்கள்..

* பொலிஸ் முறைப்பாடொன்றைச் செய்வதற்குமுன், பொலிஸ் நிலையத்தில் பெண்கள், சிறுவர் பிரிவொன்று உள்ளதா என விசாரியுங்கள் அல்லது ஆண் கான்ஸ்டபிள் ஒருவருக்குப் பதிலாக பெண் கான்ஸ்டபிள் ஒருவருடன் பேசுவதற்கு விரும்பினால் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைக் கேளுங்கள். சம்பவத்தின் சகல விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

**சேவை வழங்குனர்கள்.**

* வாக்குமூலத்தில் கைச்சாத்திடுவதற்குமுன் அதை வாசிப்பதை உறுதிசெய்யுங்கள்.

* வாக்குமூலமொன்றைப் பெறுவதற்கு மேலதிகமாக, உடல் ரீதியிலான சான்றினைப் பொலிசார் சேகரிப்பதுடன், யாரேனும் சாட்சிகள் இருந்தால் அவர்களுடனும் பேசுவார்கள்.

* உங்கள் விடயத்தின் சூழ்நிலைகளைப் பொறுத்து, அதிகளவு மணித்தியாலங்களை பொலிசாரின் விசாரணை எடுக்கும். சில கேள்விகள் எல்லை மீறுவதாக இருக்கும் என்பதுடன், உங்கள் மீதான தாக்குதல் பற்றிய விபரங்களை அந்த உத்தியோகத்தர்கள் பல தடவைகள் விசாரிப்பார்கள். குற்றமிழைத்தவருக்கு எதிரான மிகப்பலமான சாத்தியத்திலான வழக்கை தாக்கல் செய்வதற்காக துல்லியமாக ஒவ்வொரு விபரத்தையும் பெறுவதற்கான அவசியம் இருப்பதனால், விரிவான விதத்தில் விசாரணை இடம்பெறாலும், அது அனேகமாக நியாயப்படுத்தப்படுகின்றது.

*இது சாத்தியமான விரைவில் உங்களால் நினைவில் வைத்திருக்கக்கூடிய ஒவ்வொரு விபரத்தையும் எழுதுவதற்கு உதவுகின்றது. இதனால் நீங்கள் விபரங்களைப் பொலிசாருக்கு பரிமாறிக்கொள்ளலாம்.

**முறையிடும் நடைமுறையின் (தொடர்பு) ஊடாக சில தாபனங்கள் ஆதரவை வழங்குகின்றன. உங்கள் சந்தேகங்களையும், கேள்விகளையும் அவை தெளிவுபடுத்தும். சட்டங்கள் சென்று**

**“எனது அம்மா, சகோதரி, மனைவி அங்கும் இங்கும் செல்வதற்கு பொதுப்போக்குவரத்தையே பயன்படுத்துகின்றனர். பஸ்களில், புகைவண்டிகளில் பாலியல் தொந்தரவு இருந்தால், அது அவர்களையும் காயப்படுத்தும்.”**



**வேலுசாமி வீரசிங்கம்**

**பாலியல் தொந்தரவு முறையிடப்படாமல் போவதற்கான காரணங்கள்**

* முறைப்பாடுகளுக்கு குற்றவியல் நீதித்துறை முறைமையும், சட்டத்தை வினைப்படுத்தும் சம்பந்தப்பட்டவர்களும் ஊக்கமளிப்பதில்லை.

* விடயங்களை மோசமாக்கச் செய்யும் என்ற அச்சம்.

* ஒருவரின் பெயருக்கும், ஒருவரின் மரியாதைக்கும் கெடுதல் ஏற்படும் அச்சம் வேலைத்தளத்தில், கல்வி மேற்கொள்ளப்படும் இடங்களில் அல்லது பொதுஇடங்களில் பொதுவான நிகழ்வொன்றாக அதனை ஏற்றுக்கொள்ளல்

* சட்ட நிவாரணம் பற்றிய விழிப்புணர்வு இல்லாதிருத்தல்.

* வேலைத்தளங்களில், கல்வி மேற்கொள்ளப்படும் இடங்களில் பாலியல் தொந்தரவைத் தடுப்பது குறித்த கொள்கைகள் இல்லா திருத்தல்.

* ஆக்கிரமிப்பாளரைவிட பாதிக்கப்பட்ட தப்பிப்பிழைத்தவர்களை நிந்திக்கும் பொதுவான வழக்கம்.

* குறைந்த சுய மதிப்பு.

**பாலியல் தொந்தரவு மீதான சட்டம்**

* அரசியலமைப்பின் உறுப்புரை 12 (2)இன் பிரகாரம், அவரது பால் மீதான அடிப்படையில நபர் ஒருவருக்கு எதிராக பாரபட்சம் காட்டப்படும் போது, அது சமத்துவத்திற்கு அத்தகைய நபரின் அடிப்படை உரிமையின் மீறலொன்றாகும்.

## பாலியல் வன்புணர்வு

* 1995இன் இல.22 இன், தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 345 இன் கீழ் பாலியல் தொந்தரவு குற்றவியல் ரீதியான தண்டனைக் குரியதாகும்.

* "தாக்குதலை, குற்றவியல் பலாத்காரத்தை அல்லது தொந்தரவு செய்யப்படும் நபருக்கு இடைஞ்சலை விளைவிக்கின்ற சொற்களை அல்லது செயற்பாடுகளை" பாலியல் தொந்தரவு அடக்கியுள்ளது. இது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:

• அதிகாரத்தில் உள்ள நபர் ஒருவரினால் பயன்படுத்தப்படும் சொற்களினால் அல்லது செயற்பாட்டினால் வரவேற்கப்படாத பாலியல் அணுகுதல்கள் (உதாரணம்: பொலிஸ், ஆயுதப் படையைச் சேர்ந்த ஆளணியினர், பாடசாலை உத்தியோகத்தர்கள், மருத்துவ உத்தியோகத்தர்கள், இத்தியாதி)

• வேலைத்தலங்களில் வரவேற்கப்படாத பாலியல் அணுகுதல்கள்.

• ஆபாசமான 'இன்டர்நெற்' றின், 'ஈமெயில்'களின் தவறான உபயோகம் அல்லது தொந்தரவு செய்ய பயமுறுத்துவதற்கு அல்லது குழப்புவதற்கு பாலியல் தன்மையொன்றைச் சார்த்துரைத்தல் ஆகியனவற்றை தண்டனைச் சட்டக்கோவையில் உள்ள பாலியல் தொந்தரவு உள்ளடக்குகின்றது.

• சட்டத்தின் கீழ் பாலியல் தொந்தரவை ஊக்கப்படுத்துதல் அல்லது கவனியாமல் விடுதல் ஒரு குற்றமாகும்.

• 1998இன் 20ஆம் இலக்க கல்விசார் நிறுவனங்களில் பகிடி வதையையும், வன்முறையின் வேறு வடிவங்களையும் தடை செய்தல் சட்டத்தின் கீழ், கல்விசார் நிறுவனமொன்றின் யாரேனும் மாணவரை அல்லது பணியாளர் உறுப்பினர் ஒருவரை பகிடிவதை செய்யும் வேளை, பாலியல் தொந்தரவை நபர் ஒருவர் விளைவித்தால், பத்து (10) வருடங்களைக் கொண்ட குறைந்த பட்ச தண்டனையொன்று அவருக்கு வழங்கப்படுவதுடன், நீதிமன்றத்தினால் நிர்ணயிக்கப்பட்டவாறு தொகையொன்றை நஷ்ட ஈடாகச் செலுத்துவதற்கு உத்தரவிடப்படுவார்.

**வேலைத்தளத்தில் பாலியல் தொந்தரவு**

• தீர்மானத்திற்கு, இணக்கத்திற்கு அல்லது வழக்குத் தொடுப்பதற்கு நடைமுறையொன்றில் பாலியல் தொந்தரவுக்கான பூஜ்ய சகிப்புத் தன்மையிலான நடத்தையின் சட்டக்கோவையைத் தாபிப்பதற்கும், பாலியல் தொந்தரவுக்கு எதிராக உடனடியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும், முறைப்பாடுகளை இரகசியத் தன்மையுடன் கருதுவதற்கும் பாதுகாப்பான வேலை செய்யும் சூழலொன்றை வழங்குவது தொழில் வழங்குநரின் கடமையொன்றாகும்.

• வேலைத்தளத்தில் பாலியல்த் திருப்திப்படுத்துதலை கோருவது 1980இன் இலஞ்ச சட்டத்தின் கீழ் தண்டனைக்குரியதாகும். இலங்கைக் குடியரசு எதிர் அப்துல் ரஸாக் குத்தூப்டீன் வழக்கில், தொழில் பதவியேற்றத்திற்கான கரிசனையாக பாலியல் சலுகைகளுக்கு கோரிக்கை விடுத்தமை 'இலஞ்சமாக' பொருள் விளக்கமளிக்கப்பட்டது.

• பாதிக்கப்பட்டவரின் மேற்பார்வையாளராக, தொழில் வழங்குனரின் முகவராக, இன்னொரு பகுதியில் மேற்பார்வையாளராக, இணை ஊழியராக அல்லது ஊழியர் அற்றவராக தொந்தரவு செய்பவர் விளங்கலாம்.

• பாதிக்கப்பட்டவருக்கு பொருளாதாரச் சேதமின்றி அல்லது அவரைப் பதவியிலிருந்து நீக்குவதாகக் கூறி பாலியல் தொந்தரவு இடம்பெறலாம்.

• கூட்டு உடன்படிக்கையில் உரிய ஸ்தானமளிக்கப்பட்ட பிணக்கு தீர்வுப் பொறிமுறையானது. பாலியல் தொந்தரவைச் சம்பந்தப்படுத்தும் சம்பவங்களில் பயன்படுத்தப்படலாம். உதாரணமாக, 1997இன் பணியாளர் கூட்டு உடன்படிக்கையில் (சகல எழுதுவினைஞர் பணியாளருக்குப் பொருத்தமானது) அடங்கியுள்ள ஒழுக்காற்று விசாரணைகள் மீதான பிரிவு 18, மற்றும் 1998இன் தொழில்கூட்டு உடன்படிக்கையில் (சகல தோட்டத் தொழிலாளர்களுக்கும் பொருத்தமானது) ஒழுக்காற்று நடவடிக்கை மீதான பிரிவு 18 ஆகிய இரண்டும் பாலியல் தொந்தரவைக் கவனத்திற்கெடுப்பதற்கு இடைவெளியை வழங்குகின்றன என பொருள் விளக்கமளிக்கப்படலாம்.

தொடரும்


# சொன்னார்கள் சொன்னார்கள்...

தேசிய பாதுகாப்பு விடயத்தில், சமரசம் செய்து கொள்ளும் எந்த முடிவையும் எந்தச் சூழ்நிலையிலும் எடுக்கமாட்டேன்.
அனைத்துலக சமூகத்துடன் முரண்பட்டு வந்த நிலையை மாற்றி, இலங்கைக்கும் அனைத்துலக சமூகத்துக்கும் இடையில் நெருக்கத்தை ஏற்படுத்தியுள்ளேன்

இதன் மூலம் அனைத்துலக அரங்கில் இலங்கையின் கௌரவம் மற்றும் புகழை மீளவும் நிலைநாட்ட முடிந்துள்ளது



**பாரிசில் வாழும், இலங்கையர் மத்தியில் ஜனாதிபதி மைத்திரி.**



தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும். தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டுமென்பதே இடதுசாரிக் கட்சிகளின் பொதுவான கருத்து.

எனினும் விடுதலை செய்யப்பட்டதன் பின்னர் அவர்களது நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் மிக அவதானமாக இருக்க வேண்டும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரிவினைவாத கருத்தை கைவிட்டமை மகிழ்ச்சியை அளிக்கிறது.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசிய ஐக்கியத்திற்கு அத்திவாரம் இடத் தயார் நிலையில் இருக்கின்றனரா என்ற சந்தேகம் காணப்படுகிறது.

**வாசுதேவ நாணயக்கார.**

திருகோணமலை கடற்படை முகாமுக்குள் சென்ற காணாமற்போகச்செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நா. செயற்குழுவினர் அங்கு தன்னிச்சையாகச் செயற்படவில்லை சி.ஐ.டியினருடனேயே அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்

நீண்டகால விசாரணையின் பின்னரே புலம்பெயர் தமிழ் அமைப்புகள் சிலவற்றின் மீதான தடை நீக்கப்பட்டது,

நாட்டின் புலனாய்வுப் பிரிவு பலமாகவே இருக்கின்றது

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்களுள் ஒரு தொகுதியினருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. இது பிணையே தவிர விடுதலை அல்ல. மாதத்தில் நான்கு தடவைகள் இவர்கள் தங்களை உறுதிப் படுத்திக்கொள்ள வேண்டும்.

**பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன.**




புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களினால் செய்ய முடியாததை, சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளினால் செய்து விட முடியாது.

கடந்த காலங்களில் 11000 பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டுள்ளனர்

அந்த நிலையில், அவர்களினால் மீண்டுமொரு பிரச்சினை ஏற்படவில்லை

எனவே குறித்த 200 தமிழ்



அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவதன் ஊடாக பிரச்சினை ஏற்பட வாய்ப்பில்லை

**தர்மலிங்கம் சித்தார்த்தன்**

ஒரு பாரம்பரிய சமூகத்தின் அடையாளமே அது வாழ்ந்து வரும் நிலந்தான். பாரம்பரிய நிலத்தில் இருந்து சமூகத்தைப் பிரித்தால் பிரிக்கப்பட்ட சமூகம் அநாதையாகிவிடும்.

அதன் உறுப்பினர்கள் அகதிகளாகிவிடுவர். அகதிகள் என்றால் புகலிடம் அற்றவர் என்று அர்த்தம். கதி என்ற சொல்லுக்கு ஒரு அர்த்தம் “புகலிடம்”. ஆகவே அ(சக)கதி என்றால் புகலிடம் அற்றவர் என்று பொருள்படுகிறது.


எமது பாரம்பரிய சமூகத்தைப் புகலிடம் அற்றவர்கள் ஆக்கவே பல நடவடிக்கைகள் அண்மைக்காலங்களில் எடுக்கப்பட்டு வருகின்றன.


2009ம்ஆண்டு மே மாதம், யுத்தமானது முடிவுக்கு வந்தது. யுத்த ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டன. வடகிழக்கு மாகாணங்களுக்குப் படையெடுத்து வந்தவர்கள் யுத்தம் முடிந்ததென்று தங்கள் இடங்களுக்குத் திரும்பிச் செல்லவில்லை.

எமது பாரம்பரிய நிலங்களில் பாரிய பகுதியைப் படைகள் தம்வசம் பற்றிவைத்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள்.

அந்நிலங்களில் உரிமையுடன் வாழ வேண்டியவர்கள் நிராதரவாக, நிர்க்கதியினராக பிறர் நிலங்களில் அகதி வாழ்க்கை வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் இருபது வருடங்களுக்கு மேலாக இவ்வாறான இடர் வாழ்க்கையில் இருந்து வருகின்றார்கள்.

**வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன்.**












No-05, NC Road, Trincomalee.
TP- 026 2222298, Fax- 0262221179.
www.jewellanka.8m.com


# நம்பிக்கை பிறக்கிறது



பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட பகல் இரவு டெஸ்ட் ஆட்டம் நிறைவுபெற்று விட்டது. மூன்றே மூன்று நாளில் முடிந்த இந்த ஆட்டம் அவுஸ்திரேலிய அணிக்கு மூன்று விக்கெட் வெற்றியுடன் நிறைவடைந்தது. இந்தநிலையில் 2–0 என்ற வகையில் அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடரையும் வென்று கொண்டது. புதிய முயற்சியாக இந்த இரவு பகல் டெஸ்ட் போட்டியில் பிங்க் நிறப் பந்து பயன்படுத்தப்பட்டது. இதனாலோ என்னவோ துடுப்பைவிடப் பந்து போட்டியை ஆக்கிரமித்தது என்று கூறுகிறார்கள் விமர்சகர்கள். அதோடு பந்து மாற்றமே மூன்று நாட்களுக்குள் டெஸ்ட் முடிவடையக் காரணம் என்றும் கூறப்படுகின்றது. அதோடு இரண்டு அணிகளதும் மொத்த ஓட்ட எண்ணிக்கையும் குறைவாகவே காணப்பட்டது. நியூசிலாந்து தனது இரண்டு இனிங்சுகளிலும் தலா 202 மற்றும் 208 என்றும் அவுஸ்திரேலியா தனது இரண்டு இனிங்சுகளும் தலா 224 மற்றும் 7 விக்கெட் இழப்பிற்கு 187 என்பதுடன் ஆட்டம் நிறைவு கண்டுவிட்டது.

மேலும் மூன்று நாட்களுக்குள் 37 விக்கெட்டுகள் சாய்க்கப்பட்டிருக்கின்றன. அதோடு 64 ஆண்டுக்குமுன் அவுஸ்திரேலியாவை மே.இந்தியத் தீவுகள் அணி அடிலெய்ட் மைதானத்தில மூன்று நாட்களுக்குள் தோற்கடித்தமைக்கு அப்பால் இதுவே மூன்று நாட்களுக்குப் பின் டெஸ்ட் ஆட்டம் முடிந்த அடுத்த தருணமாகும். இன்னொருபுறம் டெஸ்ட் ஆட்டங்களுக்கு பார்வையாளர்கள் ரசிகர்கள் வருவது குறைந்து வருகிறது என்ற பிரச்சனை இருக்கும் இக்காலத்தில் மூன்று நாட்களிலும் அடிலெய்ட் மைதானத்தில் குவிந்த ரசிகர்கள் 123736 பேர் இது ஒரு சாதனையாகக் கொள்ளப்படுகிறது. உண்மையில் பார்க்கும்போது இந்த பீரட்சார்த்த இரவு பகல் டெஸ்ட் ஆட்டம் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளதாக இரண்டு அணித்தலைவர்களும் கூறியிருக்கிறார்கள். அதோடு தொடர்ந்தும் எதிர்காலத்தில் பகல் இரவு டெஸ்ட் போட்டிகள் கிரிக்கெட் அட்டவணையில் நிரந்தர இடம்பிடிக்கும் என்றும் நம்பிக்கை தெரிந்துள்ளார்கள். இதேவேளை இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த டெஸ்ட் போட்டியில் ஒரு வித்தியாசமான அனுபவத்தை அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் பீட்டர், சிடில் பெற்றிருந்தார். அதாவது வெற்றி ரன்னை அடித்திருந்தவர் பீட்டர் சிடில். ஆனால் முதல்நாள் இரவு இவரது பாட்டி காலமாகியிருந்தார். இருந்தும் தன் கடமையை செவ்வனே நிறைவேற்றிவிட்டு சிடில் பாட்டியின் இறுதிச் சடங்கிற்குச் சென்றிருந்தார்.

# மீள்வது எப்படி



சரியாக இரண்டு வாரங்களுக்கு முன் ஐ.சி.சியால் மேற்கிந்திய சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரைய்ன் சர்வதேச ஆட்டங்களில் பந்து வீசுவதில் இருந்து தடை செய்யப்பட்டுள்ளார். முன்னதாக இலங்கையில் பல்லேகல மைதானத்தில் இலங்கைக்கு எதிரான ஒருநாள் போட்டியின்போது இவர் முறைதவறி பந்து தவறிப் பந்து வீசுவதாக முறைப்பாட்டுக்கு உள்ளாகி இருந்தார். இதற்கமையவே சில ஆய்வுகளின் பின்னர் இவர் பந்து வீச தடைக்கு உள்ளாகியுள்ளார். இனி பல கட்ட பரிசோதனைகளைத் தாண்டியே இவர் மீண்டும் பந்து வீசலாமா, கூடாதா எனத் தீர்மானிக்கப்படும். துன்பமயமான செய்தி என்னவென்றால் ஐ.சி.சி பந்து வீச்சாளர் தரவரிசையில் ஒருநாள் மற்றும் இருபதுக்கு இருபது ஆட்டங்களில் இவரே தரவரிசை ஒன்றைப் பெற்றிருக்கிறார். மேலும் தற்போது பங்களாதேஷில் நடைபெறும் பங்களாதேஷ் இருபதுக்கு இருபது சுற்றுப் போட்டியில் கொமில்லா விக்டோரியன்ஸ் அணிக்காக விளையாடிக் கொண்டிருக்கிறார். இந்தச் சுற்றுப் போட்டியிலும் இவர் இனிக் கலந்து கொள்ளமுடியாது.

முன்னதாக கடந்த வருடத்தில் (ஜூன்) இலங்கையின் சசித்ர சேனநாயக்க, நியூசிலாந்தின் கேன்வில்லியம்சன், பாகிஸ்தானின் சயீட் அஜ்மல், மற்றும் மொகமட்ஹாபிஸ், சிம்பாப்வே அணியின் புரொஸ்பட் உட்சயா மற்றும் மல்கம்வொலர், பங்களாதேஷின் சொஹாக்காஸி ஆகியோர் தடைக்குள்ளாகி இருந்தார்கள்.

இவர்கள் மீதான ஆய்வின் பின்னர் மொஹமட்ஹாபிஸ் இரண்டாம் முறையும் மேலும் ஒரு வருடத் தடைக்கு இலக்கானார்.

தற்போது மீண்டும் சுனில் நரைய்ன் தடைக்கு உள்ளாகியுள்ளார்.




# றென்னிஸ் தரவரிசை

2015 ATP றென்னிஸ் தரவரிசைகள் வெளியாகியுள்ளன. இதன்படி சேர்பியாவைச் சேர்ந்த நோவக் ஜோகோவிச் 16585 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். இதேவேளை றென்னிஸ் தரவரிசையில் 2011–2012–2014 களிலும் இவரே முதன்மை பெற்றிருந்தார்.

இதேவேளை இரண்டாம் இடம்பெற்ற பிரித்தானியாவின் அண்டிமரேயை விட இவர் ஏறத்தாள 7500 புள்ளிகள் மேலதிகமாகப் பெற்று முதல்நிலையில் உள்ளார். இங்கு அண்டிமரேக்கும் ஒரு முக்கியத்துவம் உண்டு. இம்முறை டேவிஸ்கிண்ணம் பிரத்தானியா வெற்றிபெற உதவியவர் இவராவார். இது 79 ஆண்டுகளின்பின் நடைபெற்றுள்ளது. இதுவும் ஒரு சாதனையே.

**தரவரிசைப் பட்டியல்**

நொவாக்ஜோகோவிச் (சேர்பியா) 16585 புள்ளிகள்,
அண்டிமரே (பிரித்தானியா) 8945,
றொஜர்பெடரர் (சுவிஸ்) 8265,
ஸ்ரான்வாங்கின்கர் (சுவிஸ்) 6865,
ரபாயெல்நடால் (ஸ்பானியா) 5230,
தோமஸ்பேர்டிச் (செக்குடியரசு) 4620,
டேவிட்பெரர் (ஸ்பானியா) 4305,
கீ நிஷிகோரி (யப்பான்) 4235,
நிச்சட்காஸ்கெட் (பிரான்ஸ்) 2850,
ஜோபில் பிரட்சோங்கா (பிரான்ஸ்) 2631

ஜோசப் கிருஷ்ணா

# முடிந்தால் நல்லதுதான்

இந்தியாவிற்கு விஜயம் செய்து விளையாடும் எந்தவொரு கிரிக்கெட் அணியும் பொதுவாக எந்தவொரு குற்றச்சாட்டையும் முன்வைப்பார்கள். அதாவது இந்திய மைதானங்கள் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக இருக்கும் வகையில் தயார் செய்யப்படுகின்றன என்பதே அது. தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்திய, தென்னாபிரிக்க டெஸ்ட் தொடரிலும் இதே குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. 2013இன் பின் இந்தியா தனது சொந்த மண்ணில் பெற்ற ஐந்து வெற்றிகளும் மூன்று நாட்களுக்குள் முடிவடைந்த டெஸ்ட் போட்டிகளாகும். இதற்குக் காரணம் சுழல்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக மைதானம் அமைக்கப்பட்டதே என்று சில தரப்பினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆனால் இந்திய அணி முகாமையாளர் ரவிசாஸ்திரி அப்படித் தயார்படுத்துவதில் என்ன தப்பு என்று கேட்கிறார். மேலும் இறுதிப் போட்டியான டெல்கி டெஸ்ட் போட்டி மைதானமும் அப்படித்தான் இருக்கும் என்கிறார்.

மேலும் நிறையவே ஒருநாள் போட்டிகள் இருபதுக்கு இருபது போட்டிகளில் வீரர்கள் விளையாடுவதால் களத்தில் நீண்டநேரம் நின்று விளையாடும் தன்மையை வீரர்கள் இழந்து விடுகிறார்கள். பொறுமை இல்லை.




அவசரம் அதிகம். இதுவே காரணம் ஒழிய வேறொன்றும் இல்லை என்கிறார்.

மேலும் மூன்று நாட்களுக்குள் டெஸ்ட் போட்டிகள் முடிவடைவதில் எந்தத் தவறும் இல்லை. உதாரணமாக தற்போது முடிவடைந்த அவுஸ்ரேலிய நியூஸிலாந்து பகலிரவு ஆட்டம் கூட மூன்று நாட்களுக்குள் முடிவடைந்துள்ளதே என்கிறார். அதோடு ஐந்து நாட்கள் விளையாடி சோம்பல் நிறைந்த வெற்றி தோல்வியற்ற ஆட்டங்களைவிட மூன்று நாள் முடிவுகள் ரசிகர்களை கவரும் என்று கூறுகிறார்.

ரவிசாஸ்திரி சொல்வதில் உண்மை இல்லை என்று கூற முடியாது. ஒன்று சுழல் பந்து வீச்சிற்கு சாதகமாக மைதானம் அமைப்பது. இதேபோல தென்னாபிரிக்க, அவுஸ்ரேலிய மைதானங்கள் என்றாலே வேகப்பந்து வீச்சிற்கு ஏற்ற மைதானங்களாகத்தானே தயார்செய்யப்படுகின்றன. இங்கு சர்வதேச வீரர்கள் எந்தச் சூழ்நிலையையும் தனக்கு சாதகமாக்கி கொள்ளப் பழக வேண்டும் என்பதே சரியானது.

இன்னொன்று மூன்று நாட்களில் போட்டி முடிவது. ரசிகர்கள் இதனை நிறையவே விரும்புவார்கள். மூன்று நாளில் டெஸ்ட் முடிவதை ரவிசாஸ்திரி என்ன கோலத்தில் ஆதரித்தாலும் ரசிகர்களின் பார்வையில் மூன்று நாளில் ஆட்டம் முடிந்தால் அங்கு முடிவிருக்கும். அதுவே தேவை.

(14 ஆம் பக்கத்தொடர்ச்சி)

# வாழ்வாதாரத்தை உயர்த்த ...

யில் பெற்றுக் கொள்கின்றார்கள என்பது தெரியும். நாம் குறிப்பிடும் விலையிலிருந்து ஒரு ரூபா, இரண்டு ரூபா குறைத்தே அவர்கள் கொடுப்பார்கள்.

அவ்வாறு இல்லை என்றால் நாம் நாளை சங்கத்தில் விற்போம் எனத் தெரிவிப்பார்கள். இதனால் தோட்டக்காரரும் சரி, சங்கமும் சரி இன்றுவரை பாதிப்பை எதிர் கொள்ளவில்லை. இனியும் அவ்வாறான நிலைவராது என்று எதிர்பார்க்கின்றோம்.

***உங்களது வாழைக்குலைகளை தென்னிலங்கைக்கு ஏற்றுமதி செய்வது குறித்து குறிப்பிட முடியுமா?***

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் நாங்களாக கொண்டு சென்று விற்பனை செய்தோம். அது எமக்கு இலாபத்தை தரவில்லை. காரணம் அங்கு கொண்டு சென்று விற்கும் போது கடனுக்கு கொடுக்கவேண்டிய தேவை இருந்தது. இதனால் எமக்கு சில வியாபாரிகளிடமிருந்து பணம் கிடைக்கவில்லை. இது எமக்கு சரிப்படாததால் அதனைக் கைவிட்டுவிட்டோம்.

இப்போது எமது சங்கத்தில் வைத்து தென்னிலங்கை வியாபாரிகள் வரும்போது வாழைக் குலைகளை விற்று பணத்தை பெற்றுக்கொள்கின்றோம். திருகோணமலை மாவட்டத்திலிருந்தே அதிகமான வியாபாரிகள் வந்து வாழைக் குலைகளை கொள்வனவு செய்து கொண்டு செல்கின்றார்கள்.

மேலும் கடந்த வருடம் கார்கீல்ஸ பூட்சிற்றி எம்மிடமிருந்து வாழைக் குலைகளை கொள்வனவு செய்து வந்தது. இரண்டு நாட்களுக்கொருமுறை 1000, 1500 கிலோவென வழங்கி வந்தோம். இதனால் விலை குறையவிடாது வைத்திருந்தோம். ஆனால் தற்போது வாழைக்குலைகளை தனிநபர்களிடம் பெற்றுக் கொள்கின்றார்கள். ஆனால் எம்மிடமிருந்து பெற்றுக் கொள்வதாக எந்தவொரு உத்தரவாதத்தையும் அவர்கள் தரவில்லை. இதற்கு காரணம் இடையில் உள்ள தரகர்களே. அவர்கள் தமக்கான தரகுப் பணம் கடைக்காமல் போய்விடும் என்பதற்காக சங்கத்தில் பெற்றுக் கொள்ளாது தனி வியாபாரிகள் மூலம் பெற்றுக்கொடுத்து வருகின்றார்கள்.

***சங்கத்தில் அங்கத்தவர்களாக உள்ளவர்களுக்கு நீங்கள் ஏதாவது உதவிகளைச் செய்து வருகின்றீர்களா? அவர்களது வருமானம் போதுமானதாக உள்ளதா?***

நாம் எந்தவொரு உதவியையும் செய்வதில்லை. இங்குள்ளவர்கள் தனியொரு விவசாயம் செய்வதில்லை. பலதையும் செய்கின்றார்கள். அதுமட்டுமன்றி இங்கு வாழையைப் பொறுத்தளவில் எந்தக் காலப்பகுதியிலும் வாழைப்பழங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அதனால் அவர்களுக்கு வருமானத்தில் பாதிப்பு என்பது கிடையாது. அவர்கள் எந்த நேரமும் வாழைக்குலைகள் வெட்டக்கூடியதாகவே இருக்கும். அது மட்டுமன்றி மழைகாலங்களில் 50 வாழை மரங்கள் முறிந்தால் மீதி இருக்கும் 5 மரங்களில் உள்ள குலைகளை இரட்டிப்பாக விற்று நட்டத்தை ஈடுகட்டிவிடுவார்கள்.

நீர்வேலியைப் பொறுத்தவரையில் இயற்கையாகவே வாழை மரங்கள் செய்கை பண்ணப்படுகின்றன. செயற்கை இரசாயனங்கள், உரங்கள் எதுவும் போடுவதில்லை. இதனால் நட்டம் ஏற்படுவது குறைவாகவே காணப்படுகின்றது.

***உங்களது சங்கத்தினால் வாழை நாரைப் பயன்படுத்தி கைவினைப் பொருட்கள் செய்து விற்கப்படுவதாகக் கூறப்படுகின்றதே அதுகுறித்து கூறுங்கள்?***

எமது பகுதியல் கழிவாகும் வாழைநாரைப் பயன்படுத்தி கைவினைப்பொருட்கள் செய்துவருகின்றோம். தற்பொழுது ஐந்து பெண்பிள்ளைகளை வைத்தே இந்த உற்பத்தியை செய்து வருகின்றோம்.

அண்மையில் பிரதேச செயலகத்தினால் இதுகுறித்த பயிற்சி வகுப்பு நடாத்தப்பட்டது. அதிலிருந்து 7,8 பெண்பிள்ளைகளை நாம் இணைத்துக் கொள்ளவுள்ளோம். வாழை செய்வோரின் வாழ்வாதாரத்தை உயர்தும் நோக்கிலேயே இந்த முயற்சியை எடுத்துள்ளோம். இவ்வாறு வாழை நாரைப் பயன்படுத்தி பொருட்களை செய்யும் போது இதனை விலை மதித்து விற்பனை செய்யமுடியும் என்பதற்காகவே இதனை செய்து வருகின்றோம்.

அதுமட்டுமன்றி இந்த வடிவங்களை அமைப்பது தொடர்பாக தேசிய வடிவமைப்பு சபையே முதலில் பயிற்சிகளை வழங்கியது. விவசாயக்கல்லூரியில் இதற்கென 3 நாட்கள் பயிற்சி வழங்கப்பட்டது. அதன்பின்னர் GAZ தான் கட்டடம் அமைத்து தந்தது. கடந்த 3 வருடங்களாக இவற்றை செய்து வருகின்றோம். எனினும் நட்டத்தில்தான் ஓடிக்கொண்டிருக்கிறது இந்த நிலையம்.

***இந்த பொருட்களின் விற்பனையை அதிகரிக்க என்ன நடவடிக்கையை எடுத்துள்ளீர்கள்?***

விற்பனை முகவர் மூலம் இந்த பொருட்களை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம். தற்போது கொழும்பு வரை கொண்டுசென்றுள்ளோம். யாழ்ப்பாணத்திலும் கடைகள் பிடித்து கொடுத்து வருகின்றோம். கடந்தமாதம் 13000ரூபா இலாபம் கிடைத்தது. இந்த வருடமும் இலாபம் கிடைக்குமென எதிர்பார்க்கின்றோம். இப்பொழுது தான் வியாபாரம் ஆரம்பித்துள்ளது. இப்பொழுதுதான் தொண்டு நிறுவனங்களுக்கும் தெரியவந்துள்ளது. எனவே இதனை தொடர்ந்தும் செயற்படுத்த முடியும். எமக்குஊழியர்கள் பற்றாக்குறையாக உள்ளது. "பாக்" விற்பனை செற்வதற்கே கேள்வி அதிகமாக உள்ளது. ஆனல் இங்முள்ள ஒருவருக்கு மட்டுமே அதைச்செய்யத் தெரிந்திருப்பதால் கேள்விக்கேற்ப வழங்க முடியாமல் உள்ளது.

தற்போது யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கண்காட்சிகளில் இந்தப் பொருட்களை காட்சிப்படுத்துவதற்காக பெருமளவில் அனுப்பி வைத்து வருகின்றோம்.

***நீர்வேலியில் வாழைக்குலை சங்கம் இருப்பது, இவ்வாறான பொருட்கள் செய்வது பற்றி யாழ். குடாநாட்டில் எவருக்கும் பெருமளவில் தெரியாது என்றே கூற வேண்டும். இதனால் இந்தப் பொருட்களை எவ்வாறு அறிமுகப்படுத்தி வருகின்றீர்கள்?***

நியூகிளியர் பவுண்டேசன் நடாத்தும் எந்தக் கண்காட்சியாக இருந்தாலும் எம்மை அழைத்துச் செல் ... மட்டுமன்றி வாழ்வெழுச்சி குன்றியோர் சங்கத்திற்கு கொடுத்துள்ளோம். TCT இற்கு கொடுத்துள்ளோம். கோப்பாய் பிரதேச செயலகத்தால் நடாத்தப்பட்ட சமுர்த்தி கண்காட்சியிலும் வைத்திருந்தோம். துரையப்பா விளையாட்டரங்கில் நடாத்தப்பட்டுவரும் கண்காட்சிகளிலும் காட்சிப்படுத்துகின்றோம்.




# மலையக தமிழ் மாணவர்களுக்கு பல்கலைக்கழகம் விரைவில்



மலையக தமிழ் மாணவர்கள் உயர்கல்வியை கற்கும் வகையில் கல்வி அமைச்சின் ராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் மலையகத்தில் தொழில்நுட்பத்துறையுடன் கூடிய பல்கலைக்கழக கல்லூரியை அமைப்பதற்கான நடவடிக்கையை எடுத்துவருவதாகத் தெரிவித்துள்ளார்.

தினச்செய்திக்கு அளித்த பிரத்தியேகப் பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்தப் பேட்டியில் மலையகத்தின் கல்விச் செயற்பாடுகள், எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக அவர் மேலும் கூறினார்.

**கேள்வி : மலையக கல்வி அபிவிருத்திக்கு உங்களின் பங்களிப்பு என்ன?**

**அமைச்சர் இராதாகிருஷ்ணன்:** மலைநாட்டு கல்வி அபிவிருத்தியில் இம்முறை சில மாற்றங்களைக் கொண்டுவரலாமென நினைக்கிறோம். அதாவது பிரதமரின் வேண்டுகோளுக்கிணங்க 25 பாடசாலைகள் கணித, விஞ்ஞான பாடசாலைகளாக தரமுயர்த்தப்படுகின்றன. மேலும் அருகிலுள்ள சில தமிழ்ப் பாடசாலைகளைத் தெரிவுசெய்து அவற்றை அபிவிருத்தி செய்வதிலும் நாம் அக்கறையாக உள்ளோம். அத்துடன் தேசிய கல்வி நிறுவகம் மலையகப் பகுதிகளுக்குச் சென்று, எதிர்காலத்தில் மலையகத்தில் கல்வி மறுமலர்ச்சியை எவ்வாறு முன்னெடுக்க வேண்டும்? என்ன விடயங்களைச் செய்யலாம்? என்ற திட்டங்களையும், அவர்கள் வகுத்தார்கள். எதிர்காலத்தில் தேசிய நீரோட்டத்துடன் மலையகக் கல்வியும் செல்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு நான் கேட்டுள்ளேன். இதற்காக பாடசாலைகளை அபிவிருத்தி செய்வது, வகுப்பறைகளை அபிவிருத்தி செய்வது, அதேபோன்று விஞ்ஞானபீடங்களை அபிவிருத்தி செய்வது, ஆசிரியர்களுக்கு முழுமையான பயிற்சி அளிப்பது, புதிய ஆசிரியர்களைப் பெற்றுக்கொள்வது, அங்கிருக்கின்ற ஆசிரியர் கலாசாலை, கல்வியியற் கலாசாலைகளை தரமுயர்த்துவது உட்பட பல்வேறு திட்டங்களை மலையக கல்விக்காக எடுத்து வருகின்றோம்.

**கேள்வி : பாடசாலைகள் அனைத்தும் மாகாண சபைக்கு கீழ் உள்ளனவா?**

**அமைச்சர் இராதாகிருஷ்ணன்:** பெரும்பாலான பாடசாலைகள் மாகாணசபைக்கு கீழேயே வருகின்றன. இருந்தாலும் தேசிய ரீதியில் கல்விக் கொள்கையை வகுக்கும்போது, தேசிய ரீதியில் இவற்றை அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன.

**கேள்வி : தேசிய பாடசாலைகள் என தோட்டப் பாடசாலைகளை நீங்கள் அறிவித்துள்ளீர்களா?**

**அமைச்சர் இராதாகிருஷ்ணன்:** நிச்சயமாக, நுவரெலியா மாவட்டத்தில் நான்கு அல்லது ஐந்து பாடசாலைகளையாவது தேசிய பாடசாலைகளாக உருவாக்க வேண்டுமென்பதே எனது அவாவாகும். ஏனெனில் ஒரு தேசியப் பாடசாலைக்கு பத்து மில்லியன் ரூபா பணம் மத்திய அரசிலிருந்து கொடுக்கப்படுகிறது. இந்த சந்தர்ப்பம் மாகாண சபைகளுக்கு கொடுக்க முடியாத சூழல் இருக்கின்றது. மாகாண அரசுகள் செய்ய முடியாத வேலைகளை, மத்திய அரசின் மூலம் அந்த பணத்தைக் கொண்டு செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. மாகாண அமைச்சு அங்கிருக்கின்ற சில தொழிற்சங்கங்கள் இந்த திட்டத்திற்கு சில முட்டுக்கட்டைகளைப் போடுகின்றன. எனவே கல்வி என்ற ரீதியில் இந்த திட்டங்கள் எமது பிள்ளைகளுக்கு கிடைக்கின்ற வரப்பிரசாதங்கள் சலுகைகள். எனவே இதனை கிடைக்கவிடாமல் தடுப்பதற்கு முயற்சிக்கக்கூடாது. அவர்களும் இதற்கு ஒத்துழைத்து தேசிய பாடசாலைகள் உருவாவதற்கு ஆதரவுதர வேண்டுமென்பதே எனது வேண்டுகோளாகும்.

**கேள்வி : இந்த தேசிய பாடசாலைகள் உருவாக்கம் நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரம்தானா? அல்லது பதுளை, ஊவா போன்ற ஏனைய பிரதேசங்களிலும் ஏற்படுத்தப்படுமா?**

**அமைச்சர் இராதாகிருஷ்ணன்:** ஊவா மாகாணத்தில் இரண்டு பாடசாலைகள் உள்ளன. அதேபோன்று கண்டி மாவட்டத்தில் இரண்டு பாடசாலைகள் உள்ளன. எனவே சந்தர்ப்பம் வரும்போது தோட்டப் பாடசாலைகள் எல்லாவற்றுக்கும் இவற்றை நாம் செய்வோம்.

**கேள்வி: மலையகப் பாடசாலைகள் உயர்தரம் வரை செல்வதே பெரியகாரியமாக உள்ளன. தோட்டப் பகுதியிலுள்ள மாணவர்கள் உயர்தரம் வரை படித்து பல்கலைக்கழகத்திற்கு செல்ல முயற்சிக்கின்றார்கள் எனவே இந்த மாணவர்களுக்கென மலைநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றை அமைப்பதற்கு ஏன் நீங்கள் முயற்சி செய்யக்கூடாது?**

**அமைச்சர் இராதாகிருஷ்ணன்:** நாங்கள் ஏற்கனவே இதனை திட்டமிட்டிருக்கின்றோம். பல்கலைக்கழகம் அமைப்பதென்பது பெரிய விடயம். அதற்கேற்ற மாணவர்கள் அங்கில்லை. விரிவுரையாளர்கள் இல்லை. ஆனால் மலைநாட்டு பல்கலைக்கழக கல்லூரியை அமைப்பதற்கான நடவடிக்கையை நாம் எடுத்துள்ளோம். பின்னர் அதனை பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கான நடவடிக்கையை எடுப்போம்.

இங்கு முதலில் தொழில்நுட்ப ரீதியாக தொழில் ரீதியாக படிக்கக்கூடிய பாடத்திட்டங்களை ஆரம்பித்து, பின்னர் மாணவர்கள் தொகை அதிகரிக்கும்போது அதனை பல்கலைக்கழகமாக மாற்ற முடியும். இது முதலில் தொழிற்திறன் அமைச்சின் கீழேயே வரும்.

இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு டிச.06,2015 அன்று வெளியிடப்பட்டது.